ஜூலை 31 - ஆக. 06, 2005 July 31 - Aug. 06, 2005 28 பக்கங்கள் 16.00


REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

வார மலர்

# போரா? சமாதானமா?



## படைத் தலைமையில் விரைவில் மாற்றம்

## விபசாரத்துக்கு சுனாமி விலைபேசுகிறதா?

## 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' கிணறு வெட்ட கிளம்பிய பூதம்

# இராணுவ புலனாய்வு அதிகாரி நீக்கம் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாகுமா?

இராணுவப் புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹேவா விதாரணவின் பதவி எவ்வித முன்னறிவித்தலுமின்றி பறித்தெடுக்கப் பட்டுள்ளது. இவருடைய பதவிப் பறிப்பு வெறும் கண்துடைப்பா? கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணுமா? என்பதே இன்று எழும் கேள்வி ஆகும்.

1978 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தின் முக்கிய பதவிகளை வகித்து வந்த ஹேவா விதாரண நீண்ட காலமாக அதாவது 89 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தில் கடமையாற்றியவர்.

பின்னர் பிரித்தானியாவில் உள்ள இலங்கைத்தூதரகத்தில் செயலாளராக கடமையாற்றினார். அந்த காலக்கட்டத்தில் பல்வேறு உளவுப்பிரிவுகளுடன் தொடர்புகளை வைத்திருந்தார் என கூறப்படுகிறது.

1996ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய இவர் மீண்டும் இராணுவத்தில் இணைந்தார். கேணல் தரத்துடன் இணைந்து கொண்ட இவர் 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி முதல் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பிரித்தானியாவிலும் இந்தியாவிலும் புலனாய்வுத்துறை பற்றிய விசேட பயிற்சிகளை இவர் பெற்றுள்ளார். இந்திய உளவுப்பிரிவான றோவுடன் நெருங்கிய உறவுகளை பேணிவந்த இவர் கடந்த இரண்டுவருடமாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் வேண்டத்தகாத செயல்களுக்கு காரணமானவர் என்று கூறப்படுகிறது.

இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப்பிரிவுக்கு பணிப்பாளராக இருந்து வந்த ஒரு உயர்மட்ட அதிகாரி எவ்வித முன்னறிவித்தலும் இன்றி திடீரென பதவி நீக்கம் செய்யப்பட்டு இராணுவத்துக்கே சம்பந்தமில்லாத பதவியொன்று அவருக்கு வழங்கப்பட்டிருப்பது அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கி இருக்கிறது.

தாய்லாந்து நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு ஓர் அதிகாரியாக பதவி வழங்கப்பட்டிருக்கும் ஹேவாவிதாரண இராணுவ உயர்மட்டத்தின் கட்டளைகளையும் மீறி செயற்பட்டு வந்திருக்கிறார் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என்றும் இது பற்றி ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஏறக்குறைய ஒன்றரை வருடங்கள், கிழக்கு மாகாணத்தில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுத பாணிகளாக இருந்த விடுதலைப்புலிகள் பந்தாடப்பட்டு வந்தனர். இராணுவ காவலரண்களுக்கு அருகிலும், இராணுவ முகாம்களுக்கு அருகிலும் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர். அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த கிழக்கு மாகாணத்தின் புலிகளின் அரசியல் பிரிவின் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட பலர் கொலை செய்யப்பட்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சமாதானம் நோக்கிய நகர்வுகளை முன்னெடுத்துக் செல்ல முடியாமல் மீண்டும் யுத்தத்தை தவிர தமக்கு வேறு வழியே இல்லை என்ற நிலைக்கு புலிகள் தள்ளப்பட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை கைவிட்டுவிட்டு புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு சென்றுவிட்டனர். புலிகள் மேற்கொண்ட திடீர்முடிவுகள் சர்வதேச ரீதியிலும் இலங்கை அரசியல் மட்டத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

புலிகள் தமக்கு இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் பாதுகாப்பு இல்லை என்பதற்கு நியாயங்கள் உள்ளன என்று பரவலாக உணரப்பட்டது. இந்த விடயம் இலங்கை அரசுக்கு பெருத்த அவமானத்தை ஏற்படுத்தியது. கிழக்கு மாகாணத்தின் குழப்பநிலையின் பின்னணியை அரசு ஆராய்ந்தது. கொழும்பிலிருந்து வழங்கப்படும் உத்தரவுகள் கடைபிடிக்கப்படுவதில்லை;

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன என்பது தெரியவந்தது.

கருணா குழு என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், இந்தியாவில் தஞ்மடைந்திருந்த ஈ.என்.டி.எல்.எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்களை இங்கு அழைத்து வந்து அவர்களை புலிகளுக்கு எதிராக போர்தொடுக்க வைத்தது போன்றவிடயங்கள் அம்பலமாகின.

இந்த பிரச்சினைகளை உண்டு பண்ணுபவர் யார் என்ற கேள்வியும் எழுந்தது. அதற்கான விடையும் கிடைத்தது. மேஜர் ஜெனரல் கபிலஹேவா விதாரண இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைமை பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

பாதுகாப்பு படைகளில் உள்ள ஒரு பகுதியினர் சமாதானம் ஏற்படுவதை விரும்பவில்லை. மாற்றுத் தமிழ் இயக்கங்களின் பெயர்களை கூறிக்கொண்டு புலிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். புலிகளின் தலைமைபீடம் அதை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களையும் காட்டி போர்நிறுத்த கண்காணிப்பு குழுத்தலைவரிடம் உறுதிப்படுத்தியது. இலங்கை அரசுக்கு இதுபெரும் தலையிடியை உண்டு பண்ணியது. அதன் முடிவு இராணுவ உளவுப்பிரிவின் பணிப்பாளரை அந்த பதவியிலிருந்து கடாசுவதைதவிர வேறு வழியே இல்லை என்று கருதியது. அதன்படி மேஜர் ஜெனரல் கபில ஹேவா விதாரண பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கபில ஹேவா விதாரணையை பதவி நீக்கம் செய்வது மட்டும் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாகுமா?

கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க இது உதவ மாட்டாது. கிழக்கில் படையினரின் உதவியுடன் இயங்கும் ஆயுதக் குழுக்கள் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். ஆயுதக் குழுக்கள் தொடர்ந்து இயங்க அனுமதிப்பது தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளும் செயல் ஆகும்.

ஆ.வரதன்

# விடுதலைப் புலிகளின் வான்படை அச்சுறுத்துகிறது அரசை!

தமிழீழ விடுதலைப்புலிகளின் வான் படை பலம் பெற்றிருப்பதைக்கண்டு அஞ் சும் அரசாங்கம் தனது விமானப்படை வீரர் களுக்கு வான் பாதுகாப்புத் துறையில் பயிற்சி அளிப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாகச் செயல்பட்டுவருகிறது. இந்தப் பயிற் சியை இந்தியாவே இந்த வீரர்களுக்கு வழங்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட C-130 ரக போக்குவரத்து விமானம் ஓடுவதற்கு ஏற்ற விமான ஓடுபாதையை விடுதலைப்புலிகள் நிர்மாணித்து இருப் பதாகவும், இப்போது அவர்களிடம் இரண்டு விமானங்கள் இருப்பதாகவும் அரசாங்கம் நம்புகிறது. அவற்றில் ஒன்று செக்கோஸ்லாவாக்கியாவில் நிர்மாணிக் கப்பட்ட Zlin Z - 143 ரக விமானம் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இரவு நேரத்தில் இந்த விமானம் பயிற்சிக்குப் பயன்படுத்தப்படுவதாகவும் அண்மை யில் வெளிவந்த அறிக்கைகள் சுட்டிக் காட்டி உள்ளன.



வான்பாதுகாப்பு மற்றும் வான் பாது காப்பு உபகரணங்கள் பற்றி அறிந்து கொள்வதற்காக இலங்கை விமானப்படை ஐந்து பேரடங்கிய குழு ஒன்று சென்ற மாதம் இந்தியா சென்று திருப்பியது.

எயர்வைஸ் மார்ஷல் சான்னா குணரத்ன தலைமையில் சென்ற இக்குழுவில் எயர் கொமடோர் ரொஷான் குணத்திலக்க, கப் டன் புலத்சிங்கள, கப்டன் ரொஹான் பத்ரகே, கப்டன் விஜித குணரத்ன உட்பட இன்னும் சிலர் இடம்பெற்றிருந்தனர்.

உத்தரப்பிரதேசம் மாநிலம் லக்னோவில் அமைந்துள்ள நிலையத்துக்குச் சென்ற இந் தக் குழு வான் பாதுகாப்பு செயற்பாட்டுப் பிரி வுக்குச் சென்று அங்கு வான் படை வீரர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியை நேரில் பார்த்தனர்.

பின்னர் ராஜஸ்தானில் உள்ள உற்றா லாய் என்ற இடத்துக்குச் சென்று ராடார் உட் பட வான் பாதுகாப்புக் கருவிகளைப் பார் வையிட்டது.

இதன் பின்னர் பெங்களூரில் உள்ள ஜல ஹாலியில் அமைந்துள்ள இந்தியாவின் மிகப் பெரிய பயிற்சி நிலையத்துக்கு இக் குழு சென்றது. இந்த நிலையத்தில் இலங்கை விமானப் படையைச் சேர்ந்த 20 பேர் இப் போது பயிற்சி பெற்றுவருகிறார்கள்.

குறிப்பிட்ட இந்தநிலையத்தி[illegible] இன்னொரு முக்கியத்துவம் என்னவென்றால் 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு உணவுப் பொட்டலங்களை விமானங்களில் இருந்து வீசிய இந்திய விமானம் படை விமானங்கள் இந்த நிலையத்தில் இருந்தே புறப்பட்டன.

தமிழீழவிடுதலைப்புலிகளின்வான்படைப் பலம் பற்றி ஜனாதிபதி சந்திரிக்கா குமார துங்க தனது அண்மைய இந்திய விஜயத் தின்போது இந்திப் பிரதமர் மன்மோகன் சிங்கின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந் தார். இந்த விடயம் தனது கவனத்தை ஈர்த் திருப்பதாக இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தவிர புலிகள் அமைப்பு எவ்வாறு விமான ஓடுபாதை அமைத்தது என்பது பற்றியும், விமானங்களை எவ்வாறு பெற்றுக் கொண் டது என்பது பற்றியும் இலங்கை அரசு பல நாடுகளுக்கு அறிவித்திருந்தது. விடுதலைப் புலிகளின் வான்பலம் இந்தப் பிராந்தியத் துக்கு மட்டுமன்றி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாக அமைந்திருப்பதாகவும் அது மேலும் தெரிவித்திருந்தது.

பிரஸ்தாப இலங்கை விமானப்படை குழு பாதுகாப்புச் சம்பந்தமான உபகரணங் களைப் பார்வையிட்டும் பயிற்சி நெறிகள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொண்டும் நாடு திரும்பி இருப்பினும் வான் பாதுகாப்பு சம் பந்தமான உபகரணங்களை வாங்குவது பற்றி அரசாங்கம் இன்னும் முடிவுகள் எதை யும் எடுக்கவில்லை. எனினும் தனது தேவை களில் ஒரு பகுதியை இன்னொரு நாட்டிலி ருந்து இறக்குமதி செய்துள்ளது. இந்தியா வில் தயாரிக்கப்பட்ட வான் பாதுகாப்பு உபகர ணங்களைவிட இவை தொழில்நுட்ப சிறப்பு வாய்ந்த உபகரணங்களாகும்.

இந்தியா சென்று திரும்பிய வான் படைக் குழுவின் அறிக்கை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்ப தாகத் தெரியவருகிறது. குறிப்பிட்ட அமைச்சு வான்படை வீரர்களுக்கு இந்தியாவில் அளிக் கப்படவுள்ள பயிற்சி பற்றி விரைவில் முடிவு செய்யும் எனவும் பத்திரிகைச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.


சுவிஸில் உங்கள் அபிமான

சுடர் ஒளி

விளம்பர முகவர்

சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (கணா)

MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND
Telephone :- 0041 - 043. 3179137 - 9

# படைகளின்தலைமைக் கட்டமைப்பில் விரைவில் வருகிறது மாற்றம்!

அரச படைகளின் தலைமைக் கட்டமைப்பில் பல மாற்றங்கள் விரைவில் வரவிருக்கின்றன எனத் தெரியவருகின்றது.

கடற்படைத் தளபதியாகவும் கூட்டுப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியாகவும் தற்போது இருப்பவர் வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி. ஒரு காலத்தில் - இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் - நாட்டின் ஜனாதிபதியும், முப்படைகளின் தளபதியுமான சந்திரிகா குமாரதுங்கவிற்கு மிகவும் வேண்டியவராகவும் நெருக்கமானவராகவும் இருந்தவர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் - பிரதமராக ரணில் விக்கிரமசிங்க இருந்த போது - அவர் விடுதலைப் புலிகளோடு மேற்கொண்ட சமாதான முயற்சிகளுக்கு இடக்குப் போட - தடக்குப்போட - கடற்படைத் தளபதியாக இருந்த தயா சந்தகிரியைத்தான் தனது ஆளாக நன்கு பயன்படுத்தினார் ஜனாதிபதி.

இதனால் ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து நல்ல வெகுமதியையும் அவர் பெற்றுக்கொண்டார். இலங்கைச் சரித்திரத்தில் ஒரே தடவையில் மூன்று வருடகால சேவை நீடிப்பைப் பெற்ற ஒரேயொரு தளபதி இவர்தான். ஜனாதிபதி சந்திரிகாதான் அதை வழங்கியவர்.

அந்த மூன்று வருட கால பதவிநீடிப்பு இந்த ஓகஸ்ட் மாதத்துடன் - அதாவது சில வாரங்களில் - முடிவடைகிறது. அதன் பின்னர் அவரது பதவி நீடிக்கப்படுமா என்பது சந்தேகத்துக்கு உரியதாகி உள்ளது.

முன்பு ஜனாதிபதிக்கு அபிமானத்துக்குரியவராக இருந்த வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி இப்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அதிருப்பதியாளர்கள் பட்டியலில் இருக்கின்றவர்களின் முன்வரிசையில் இடம்பெற்றிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

கடற்படை அதிகாரிகள் பணிநிலை மாற்றம் தொடர்பாக ஜனாதிபதியின் வழிகாட்டுதலை ஒழுங்காகப் பின்பற்றவில்லை, ஆயுதங்கள் - போர்த் தளபாடங்கள் கொள்வனவு தொடர்பாக அரசால் புரசலாக வெளியான ஊழல் செய்திகள் என்று பல விடயங்கள் இவர் தொடர்பாக ஜனாதிபதிக்கு அதிருப்தி ஏற்படக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இவரது பதவிக்காலம் இந்த ஓகஸ்டுடன் முடிவுற்றதும் அது மேலும் நீடிக்கப்படமாட்டாது. அவர் ஓய்வு பெற அனுமதிக்கப்படுவார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அப்படி ஒருநிலை ஏற்பட்டால் கடற்படைத் தளபதி பதவியும் கூட்டுப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி என்ற பதவியும் ஒரே சமயத்தில் காலியாகும்.

அப்படி நேர்ந்தால் தற்போது கடற்படையில் சிரேஷ்ட அதிகாரியாகக் கொழும்பில் பணியாற்றும் ரியர் அட்மிரல் விஜய விக்கிரம, வைஸ் அட்மிரல் என்ற தரநிலையோடு கடற்படைத் தளபதியாக நியமிக்கப்படலாம். கடற்படை அதிகாரிகளின் சிரேஷ்ட தரவரிசையில் தற்போது தளபதிக்கு அடுத்த நிலையில் இருப்பவர் இவரே.

இவருக்கு இந்தப் பொறுப்பை வழங்கும் அதே சமயம் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி என்ற பதவிநிலையில் வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி சிலகாலம் தொடர்ந்து நீடிக்க அனுமதிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

இதேவேளை தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொடவின் பதவிக்காலமும் இந்த டிசம்பரில் முடிவடைகிறது. அவருக்கும் மேலும் பதவி நீடிப்பு வழங்கப்படும் என்பது உறுதி இல்லை.

இராணுவத்தில் அவருக்கு அடுத்த நிலையில் தற்போது இருப்பவர். யாழ். கட்டளையிடும் தளபதியாக இருந்த சமயம் பலத்த சர்ச்சையை ஏற்படுத்திய மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா. அவர் தற்போது இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி பதவியில் இருக்கிறார்.

படைகளின் உயரதிகாரிகளின் பதவி உயர்வு தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்ட உயர் குழு ஒன்று சில சிபாரிசுகளைச் செய்திருந்தது. அந்தக் குழு செய்த சிபாரிசுகளே இனிமேல் படை உயரதிகாரிகள் பதவி உயர்வின் போது கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படவேண்டும் என ஜனாதிபதியே உத்தரவிட்டிருந்தார். அந்தக் குழுவின் சிபார்சின்படி மேஜர் ஜெனரல் தரத்தில் இருக்கும் எவருக்கும் மூன்று வருடங்களுக்கு மேல் பதவி உயர்வு வழங்கப்படமாட்டாது. அப்படி பதவி உயர்வு வழங்கப்படுவதால் அடுத்த நிலைகளில் - பிரிகேடியர், கேணல் தரங்களில் உள்ளோர் - அதற்கு மேல் தமக்குரிய பதவி உயர்வுகளைப் பெறாமலேயே சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லவேண்டியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே இத்தகைய ஒழுங்கு விதி தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆனால், தாம் விதித்த இந்த நடைமுறை விதிகளுக்கு மாறாக தாமே சில அதிகாரிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சேவை நீடிப்பு வழங்கினார். உரிய மூன்று வருட சேவை நீடிப்புக்கு மேல் ஒருவருட பதவி நீடிப்பைப் பெற்றவர்களுள் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் ஒருவர். அவரது கடைசி பதவிநிலை நீடிப்பு இந்த நவம்பரில் முடிவுறுகிறது.

மீண்டும் ஒரு தடவை பதவி நீடிப்பு அவருக்கு வழங்கப்பட்டாலேயன்றி, தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொடவின் தற்போதைய பதவிக்காலம் டிசம்பரில் முடிவுறுவதற்கு முன்னர் அவர் ஓய்வில் செல்ல வேண்டியிருக்கும். அப்படிச் சென்றால் - சிங்களப் பேரினவாதிகளால் பெரிதும் போற்றி, மதிக்கப்படும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதி பதவியைப் பெறாமலேயே படைச் சேவையில் இருந்து இளைப்பாறிவிடுவார்.

எது எப்படியென்றாலும் - அவருக்கு இராணுவத் தளபதி பதவியை வழங்குவதற்காக வேறு சில மாற்று ஒழுங்குகளை ஜனாதிபதி சந்திரிகா செய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியும், கடற்படைத் தளபதியுமான தயா சந்தகிரியை அடுத்த மாதத்துடன் ஓய்வுபெற அனுமதித்துவிட்டு முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிப் பதவியை தற்போதைய இராணுவத் தளபதிக்கு மேலதிக பதவியாக வழங்குவது -

பின்னர் அடுத்த நவம்பரில் - அதாவது அவரது இராணுவத் தளபதிப் பதவிக்காலம் முடிவுறுவதற்கு ஒரு மாதம் முன்னரே - இராணுவத் தளபதி பதவியிலிருந்து விடுவித்து, முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி பதவியில் அவரைத் தொடர அனுமதிப்பது -

அதேசமயம் நவம்பரில் இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி என்ற பதவிநிலையோடு ஓய்வு பெற வேண்டிய மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவை, லெப்டினன்ட் ஜெனரல் தர நிலை உயர்வோடு இராணுவத் தளபதியாக நியமிப்பது.

- இதுவும் ஒரு மாற்றுத் திட்டமாக முன்வைக்கப்படும் யோசனையாகும்.

படைகளின் உயரதிகாரிகளுக்கு ஒரே பதவி நிலையில் மூன்று வருடங்களுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்குவதையே ஏற்கனவே அறிவிக்கப்பட்ட விதிகள் தடுக்கின்றன. ஆனால், மூன்று வருட பதவி நீடிப்புக்குப் பின் வேறு புதிய பதவியோடு தரநிலை உயர்வு வழங்கப்படுவதை அது கட்டுப்படுத்தாது என்பதால் சிங்கள மக்கள் மத்தியில் அதிக வரவேற்பும் செல்வாக்கும் பெற்ற சரத் பொன்சேகா போன்றோரை சேவையில் தொடர்ந்து வைத்திருக்க இந்த வழிமுறையை ஜனாதிபதி பின்பற்றக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

எது, எப்படியென்றாலும் அடுத்துவரும் வாரங்களிலும் மாதங்களிலும் இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் உயர்நிலை அதிகாரிகள் மட்டத்தில் பல மாற்றங்கள் வருவது தவிர்க்க முடியாதது என்கின்றன் விடயமறிந்த வட்டாரங்கள். (உ)

பொதுக்கட்டமைப்பு செயற்படாததால்

# ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம்: தமிழர் தாயகத்தில் மாற்று வழியில்!

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக் கட்டமைப்பு அதன் சில ஏற்பாடுகளுக்கு உயர் நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடையினால் செத்துப்போய்விட்டது என்பது வாஸ்தவம்தான்.

அதனால் அந்தப் பொதுக்கட்டமைப்பு மூலம், தமிழர் தாயகப் பகுதியில் மேற்கொள்ளப்படவிருந்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் தடைப்பட்டுப் போகப்போகின்றன என்பதும்-

பொதுக்கட்டமைப்பு ஊடாக இந்தப் பகுதிக்குக் கிடைக்கவிருந்த வெளிநாட்டு உதவிகள் கிடைக்காமல் போகும் ஏது நிலை உள்ளது என்பதும் - கூட உண்மைதான்.

ஆனால், அதற்காக தமிழர் தாயகப் பகுதியில் உரிய நிவாரண மற்றும் உதவித் திட்டங்கள் மேற்கொள்ளப்படமாட்டா என்றோ அல்லது வெளிநாட்டு உதவிகள் கிடைக்கா என்றோ கருதத் தேவையில்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

"பொதுக்கட்டமைப்பு இயங்காமல் போனமைக்காக வருந்துகிறோம். அதற்காக தமிழர் தாயகப் பகுதிக்குரிய உதவித் திட்டங்களை மேற்கொள்ள மாட்டோம் என்று முடிவு எடுத்துவிடாதீர்கள். என்றாலும் அதற்காக தமிழர் தாயகத்துக்குரிய நிவாரண நிதியை விடுதலைப் புலிகளிடம் கையளிப்போம் என்றும் அர்த்தம் அல்ல" - இப்படி உதவும் நாடுகளின் சார்பில் கூறப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்புக்கு பதிலாக தமிழர் தாயகப் பகுதிக்கு உதவும் மாற்று வழித் திட்டங்களை - மார்க்கங்களை - தயாரித்துவரும் உதவும் நாடுகள், அதுபற்றிய தகவல்களை விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் சில வட்டாரங்கள் ஊடாக அறியப்படுத்தியிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதன்படி உதவும் நாடுகள் - குறிப்பாக அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகள், ஏன் இந்தியாவும் கூட- ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்துக்கு உதவ இருக்கின்றன.

இந்நடைமுறையின் பிரகாரம், தமிழர் தயாகத்தில் நிவாரண மற்றும் மீள்கட்டுமான, அபிவிருத்தித் திட்டங்கள் தனித்தனியாக அடையாளம் காணப்படும். இவற்றை அடையாளம் காண்பதற்கு இத்துறையில் ஈடுபட்டுள்ள புலிகள் சார்பு அமைப்புகளின் உதவியும் ஒத்தாசையும் உத்தியோகப்பற்றற்ற முறையில் பெற்றுக் கொள்ளப்படுமாம்.

அடையாளம் காணப்படும் திட்டங்களை உதவும் நாடுகள் தங்களுக்குள் பிரித்து வகுத்துக் கொண்டு, தங்கள் நாடுகளை மையமாகக் கொண்டு இயங்கும் தொண்டர் அமைப்புகள் மூலம் அத்திட்டங்களைச் செயற்படுத்தும்.

பல்வேறு தொண்டர் அமைப்புகள் மூலம் ஒரே சமயத்தில் இந்த நிவாரண, மீள்கட்டுமான மற்றும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

பொதுக்கட்டமைப்புத் திட்டம் சாத்தியமாகாத பின்னணியில் தமிழர் தாயகத்தில் இத்தகைய அவசர - அவசிய - மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான மாற்றுத் திட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கு மேற்கு நாடுகளின் மட்டத்தில் உத்தியோகப்பற்றற்ற ஓர் ஒழுங்கமைப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஏற்பாடு விடுதலைப் புலிகள் தரப்புக்கும் ஓரளவுக்கு திருப்தியைத் தந்திருப்பதாகவும் ஒரு தகவல் தெரிவித்தது. (உ)

# தமிழ் எம்.பிக்களின் புஸ்வாணமாகிப்போன அரசமைப்பைக் கிழித்தெறியும் திட்டம்

கடந்த வாரம் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடந்த சமயம் இடம்பெற்ற சம்பவம் இது.

திருகோணமலையில் திடீரென எழுந்த புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றுவதற்கான சட்ட நடவடிக்கை உயர்நீதிமன்ற உத்தரவால் தடைப்பட்டுப்போன நிலைமையில் அது பற்றிய விசனத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒன்று கூடினர்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற இந்த நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அன்றும், அடுத்த நாளும் நாடாளுமன்றத்தில் தமது அணி பின்பற்ற வேண்டிய உத்திகள் குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆராய்ந்தனர்.

"உயர்நீதிமன்றத்தின் உத்தரவு புத்தர் சிலையை அகற்றும் நடவடிக்கைக்கு முரணாக வந்துள்ளது. இவ்வளவுக்கும் காரணம் இந்த அரசமைப்புத்தான். இந்த அசரமைப்புக்குக் கீழ் தமிழினத்துக்கு விடிவே இல்லை. எனவே, திருகோணமலை புத்தர்சிலை விவகாரத்தையொட்டி இந்த அரசமைப்புக்கு எமது எதிர்ப்பை நாடாளுமன்றத்துக்குள் நாம் காட்ட வேண்டும்." - என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓர் எம்.பி.

"அப்படி என்றால் இந்த அரசமைப்பைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதை நாம் எதிர்க்கின்றோம் - என்று தெரிவித்து அதனை (அந்த அரசமைப்பை) சபைக்குள் எரிப்போம் அல்லது கிழித்து வீசுவோம்." - என்றார் மற்றொருவர் .

அரசமைப்புக்கு விசுவாசமாகவும் நாட்டின் பிரிவினைக்கு எதிராகவும் சத்தியப்பிரமாணம் செய்து, எம்.பிக்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அடுத்த நாள் நாடாளுமன்றத்துக்குள் அரசமைப்பைக் கிழித்தெறிவது என்ற முடிவோடு அன்றைய கூட்டத்தை முடித்துக்கொண்டனர்.

அடுத்தநாள் திருகோணமலை புத்தர்சிலை விவகாரத்தை ஒட்டி சூடு பறக்கும் விவாதம் ஒன்றை - உரை ஒன்றை - சபையில் முன்வைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவரான இரா. சம்பந்தன்.

ஆனால், அரசமைப்பைக் கிழித்தெறிவதற்கு முதல்நாள் தீட்டப்பட்ட திட்டம் நாசூக்காகக் கைவிடப்பட்டது. அதைப்பற்றி பேச்சே இல்லை.

அன்று காலையில் நாடாளுமன்றத்துக்கு வந்ததுமே எம்.பிக்களுள் ஒருவர் முதல் நாள் முடிவுக்கு எதிராக முணுமுணுக்கத் தொடங்கினர்.

"கறுப்புக் கோர்ட் போட்ட நாங்கள் அரசமைப்பைக் கிழித்தெறிந்துவிட்டு எந்த முகத்தோடு தொழில் செய்யப் போவது?" - என்று பரிதாபத்தோடு அவர் எழுப்பிய கேள்வி மற்ற எம்.பிக்கள் அனைவரையும் முதல்நாள் முடிவிலிருந்து நாசூக்காக கழன்றுகொள்ள நன்கு உதவியது என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.


"இப்படி ஒருவராவது துணிந்து கதைத்து எம்மைச் சிக்கலில் மாட்டிவிடாமல் மீட்டுவிட்டாரே!" - என்று திருப்திப்பட்டுக் கொண்டனர் மற்ற எம்.பிக்கள்.

தமிழரின் அடிப்படை உணர்வை வெளிப்படுத்தும் வகையில் அரசமைப்பை பகிரங்கமாகக் கிழித்தெறிந்து எரித்து, அதற்காக 'ட்ரயல் அட்பார்' நீதிமன்ற விசாரணையை வெற்றிகரமாகச் சந்தித்து, தமது வாதத் திறமையால் மீண்ட தமிழ்த் தலைவர்களின் அரசியல் பரம்பரையில் வந்தவர்கள் நமது தற்போதைய எம்.பிக்கள். அவர்களின் தைரியம் - சட்ட வலிமை - இவ்வளவுதான் என்று நொந்துகொண்டார் பழைய அரசியல் சரித்திரமும் வரலாற்றுச் சம்பவங்களும் தெரிந்த வயோதிபத் தமிழர் ஒருவர்.

# சுவடுகள்

'ஏராக்கள்ளு' என்பது மலட்டுத்தன்மையைப் போக்கும் என்பது டானியலின் 'கோவிந்த'னை வாசித்த பின்புதான் எனக்குத் தெரியும்.

இம்முறை யாழ்ப்பாணம் போய் இருந்த போது நான் சார்ந்த தொலைக்காட்சிக்கு 'சீவல் தொழில்' தொடர்பான விவரணம் ஒன்றை தயாரித்தேன். பல திறமான சீவல் தொழிலாளிகளிடம் 'ஏராக் கள்ளு' தொடர்பாக மேலதிகமாக விசாரித்தேன். ஒருவருக்கும் தெரியாது.



மந்திகைப்பக்கம் 'கூவில்' எனும் ஊரில் உள்ள தவறணை ஒன்றுக்கு படம் பிடிக்கப் போனேன். இப்பொழுது 'பிளா'வை மருந்துக்கும் காண முடியவில்லை.

எல்லோரும் பெரிய பிளாஸ்டிக் சோடாப் போத்தல்களை பாதியாக வெட்டி அதில்தான் கள்ளுக் குடிக்கிறார்கள்.

உடனே இறக்கினது வலு மதுரமாக இருக்கும். புளித்த பின்புதான் அதன் வேலையைக் காட்டும். ஒரு நாள் வைத்தால் புளித்து விடும் என்றெல்லாம் கள்ளின் பெருமையைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

'பதனீர்' குடிப்போம் என்று ஒரு சீவல் வீட்டுக்குப் போனோம். இரண்டு 'ஜாம்' போத்தல்களில் ஊற்றித் தந்தார்கள்.

கிடுகிடுவென எனது நினைவுகள் இருபத்தைந்து வருஷத்துக்கு பின்னோக்கிப் போனது. 'குண்டுமணி' என்ற பெருடைய சீவல் தொழிலாளி எங்கள் வீட்டுக்கு வந்தால் அவருக்கு அம்மா 'ஜாம்' போத்தலில் தான் தேத்தண்ணி கொடுப்பா.

நான் 'கிளாஸ்' கேட்டேன். ஒரு பெரியவர் சொன்னார் 'எங்கடை வீட்டிலை உதுதான் கிடக்கு விருப்பமெண்டால் குடியுங்கோ'' — என்று.

'ஏராக்கள்ளு' வயதுக்கு வராத பிள்ளைகளையும் குதிரப் பண்ணிவிடும் வல்லமை உள்ளது.

'கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, இராசாளி எச்சம் இப்படிப் பல சரக்குகளைச் சேர்த்து பொட்டளி கட்டி, புது முட்டியை வரகு வைக்கோலில் சுட்டெடுத்து, கட்டிய பொட்டளியை முட்டியிலிட்டு, கன்னிப் பெண்பனையின் முதல் பாளையைச் சேர் வையாக்கி பொழுது அஸ்தமனத்திற்கு பின் 'சேர்வைக்காரன்' வாய்பேசாமல்



ஏறிக்கட்டி, பொழுது உதயம்வரை பேசாவிரதம் அனுட்டித்து, உதயத்திற்கு முன்னதாக இறக்கி எடுத்து நோயாளியை குடிக்க வைத்துவிட வேண்டும். நாற்பது நாட்கள் இதனை கிரமமாக செய்ய வேண்டும்.' என்று டானியல் சொல்கிறார்.

குதிராதது குதிரும்!

மலடானது நீங்கும்!

இப்பொழுது 'ஏராக்கள்ளு' பதமாக செய்பவர் எவரையும் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது.

***

எப்பொழுதும் இலங்கை தேசத்து மக்களின் வாழ்வை நிர்ணயிக்கும் சக்திகள் அன்னியமானவையாகவே இருக்கின்றன.

'உலக வங்கி' எமது பிள்ளைகள் என்ன படிக்க வேண்டுமென்று சொல்கின்றது. அமெரிக்காவா, இந்தியாவா எமது நட்பு நாடுகள் என்று, போட்டி போட்டுக் கொண்டு அவர்களைக் குஷிப்படுத்த வேண்டியிருக்கிறது. எமது நாட்டு வெளிநாட்டமைச்சர்கள் அந்த நாளில் இருந்து இந்தநாள்வரை வேறு நாடுகளுக்கு போய் 'காசு' வாங்கி வருவதோடு சரி. ஆனால் மேற்சொன்ன இரண்டு நாடுகளையும் சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும் என்று பிரயத்தனம் செய்வார்கள்.

பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் எமது இராணுவ அரசியலில் மறைமுகமாக மூக்கை நுழைத்து வைத்த வண்ணமே இருக்கின்றன. எடுக்க அவைகளுக்கு விருப்பமே இல்லை.

P-Toms விஷயத்தில் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் பறந்ததைவிட எரிக்சொல்ஹெய்ம் இலங்கைக்கு வந்தது குறைவு.

இந்தியா எப்பொழுதும் யாழ்ப்பாணத்து பருத்தித்துறை கரைப்பக்கம் பார்த்துக் கொண்டே இருக்கிறது.

தமிழர்களின் ஆயுதபலம் இந்தியாவுக்கு பெரியதொரு அச்சுறுத்தல் தலைவலியாக இருக்கிறது.

ஆனையிறவு பிடிபட்டதன் பின்பு இந்தியா நேரடியாக எமது இறைமையில் வாயை வைத்தது. போரை நிறுத்தும்படி விடுதலைப் புலிகளிடம் கேட்டுக் கொள்வதாகச் சொன்னது.

'பலாலி' பிடிபட்டு விட்டால் வெட்கம் வந்து விடும் என்பதனால் இந்தியாவிடம் உதவி கோரினார் சந்திரிக்கா. ''வாங்கோ வந்து எங்கடை படைகளையாவது உயிரோடை மீட்டுத் தாருங்கோ'' அதன் பின்னர் எப்படி நுழைவது என்று பார்த்த இந்தியாவுக்கு ஒரு சந்தர்ப்பம் வந்தது. அதற்கு பிறகு யுத்தம் தடைப்பட்டது.

'இலங்கை அபிவிருத்தி மாநாடு' நடந்த பொழுது பதிவு செய்யப்பட்ட வீ.சீ.டி. பிளேயரில் கிளிங்டன் வந்து அகலத்திரையில் பேசினார். ''எப்படியாவது இலங்கையைச் சரிபண்ணிவிட வேண்டும்.''

இப்பொழுது நடைமுறைச் சிக்கல்(!) காரணமாக P-Toms க்கு நிதியை தரமுடியாத நிலையில் இருப்பதாக அமெரிக்கா கையை விரித்துவிட்டது.

நோர்வே மீன் பிடித்துறை சம்பந்தமான அக்கறையோடு(!) முதலீட்டோடு பெருந்தொகை வருவாயை அள்ள எதிர்பார்த்து காத்திருக்கிறது.

ஜப்பான் எமது தேசத்து இல்மனைட்டில் கண்வைத்துக் கொண்டே காரியமாற்றுகிறது.

சீனா கைத்தொழில் விரிவாக்கத்தை எப்படி இலங்கையில் செய்யலாம் என்று யோசிக்கிறது. 'வென் ஜியா போ' நேரடியாக இலங்கைக்கு வந்து துறைமுக வேலைகளை பார்வையிட்டார் தென்பகுதியில்.

'றோ' எப்பொழுதும் எமது அசைவுகளை நோட்டமிட்டுக் கொண்டே இருக்கிறது.

சந்திரிக்கா என்னத்தை செய்துவிட்டார் என்று நோர்வே 'நோபல்' பரிசை கொடுக்கப்பார்க்கிறது. 11 வருஷம் இருக்கிறா குடிதண்ணீர் தேவையைத் தீர்த்தாவா? குண்டும் குழியுமாய் இருக்கின்ற பாதையில் தினமும் திறீவீலரில் போகும் போது இடுப்பு ஒடிந்து போகிறது. கல்வியறிவு உயர்ந்து விட்டதா? சுகாதாரம் சரியாகிவிட்டதா? கொழும்புக்கு நடுவில் குப்பை மேடு —'ஆதம் மலை' அளவுக்கு ஒவ்வொரு நாளும் பெருகிக் கொண்டே இருக்கிறது. ஒழுங்கான பஸ் ஸ்ரான்ட், ஒழுங்கான ரயில் சேவை, பஸ் சேவை, வடிகால் அமைப்பு இல்லை. பாதாள உலகக் குழுவினர் அடங்கிவிட்டனரா? விலை உயர்வு, பொருட்களை விற்கமுடியாமல் வரி, 'சுனாமி' அகதிகளுக்கு இன்னும் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. ஏழாவது மாதம் வந்து விட்டது. சமாதானம்?

நோர்வே நினைத்தால் 'நோபல் பரிசை' யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். பார்த்திப வருஷ பஞ்சாங்கப் பாட்டு இது.

*'தேச மிசைபார்த் திபவருடஞ் சிங்களத்தார்*

*தேசங் கெடுமனந்த தேசத்து — ராசர்*

*அநியாயஞ் செய்வா ரதமேறு மாரி*

*இனிதாம் விளைவு முள தென்*

இந்த வருடம் இலங்கைக்கு கேடு விளையும் — அன்னிய நாட்டு அரசர் எமது நாட்டுக்கு அனியாயம் செய்வார்.

நடப்பதைத்தான் பலனும் சொல்கிறது.

ஆனால் என்ன பயமோ தெரியாது இரகுநாதையருக்கு — பாட்டின் பொருளை—

'பார்த்திப வருஷத்தில் பூமியில் நன்மழையால் பழங்கள் புஷ்பங்கள் முதலானவைகளும் பசுவர்க்கங்களும் விருத்தியாகி, அரசர்களும் ஜனங்களும் மிகுந்த சுகமடைவர்.

இப்படி மட்டும் சொல்லியிருக்கிறார்.

***

'சுனாமி' உலகெங்கும் பாடு பொருளாகி விட்டது.

'சுனாமி'க்கு குழந்தையைப் பலிகொடுத்த தாயொருத்தியின் ஒப்பாரியாய் வந்திருக்கிறது எனது மனதை இராஞ்சிய கவிதை இதுதான்.

'கண்ணே கண்மணியே கற்கண்டே

கை தவறிக் கடல் கலந்த கல்லீரல் துண்டே — முத்தே

கடல் சூடக் களவாடிப் போன என் — சொத்தே

கண்ணழுத கண்ணீரில் கடலெரிந்து போகாதோ — பொன்னே



கையிரண்டும் தான்நீட்டித் தாவிக் குதித்தெழுந்து — முன்னே

காம்பிற்குப் பசிக்கிறது. வா, வந்து வாயூட்டு கண்ணே கண்மணியே.....

—ரஷ்மி

'தாயின் புலம்பல்'

தொகுப்பு 'ஆயிரம் கிராமங்களைத் தின்ற ஆடு''

(இன்னும் பதியும்)

இளைய அப்துல்லா

# விபசாரத்துக்கு சுனாமி விலை பேசுகிறது

சுனாமி பேரலையின் பேரிடித் தாக்கத்தினால் தமது உற்றார், உறவினர் சொத்து சுகம் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு தொடர்ந்து உதவ முடியாதென அரசாங்கமும் தொண்டர் நிறுவனங்களும் கையை விரித்துவிட்டன. 'பசிவந்தால் பத்தும் பறந்துபோம்' என்ற முதுமொழிக்கிணங்க இந்த அகதி முகாம்களில் பசி குடிகொண்டிருப்பதால் ஏனையவை அனைத்தும் மானம், மரியாதை, கற்பு போன்ற சீரிய பண்புகள் அனைத்தும் அணைந்துவிட்டன. மாறாக பாலியல் கலாசாரம் போதைப்பொருள் வியாபாரம், மதுபோதை ஆனந்தம் ஆகியனவே வாழ்க்கைப் பண்புகளாகத் தலைவிரித்து ஆடுகின்றன.

''சூரியன் மறைந்து இருள் கௌவிக் கொண்டால் போதும்' சுனாமி அகதி முகாம்களில் இரவு வாழ்க்கை ஆரம்பித்து விடுகிறது. தமது வயிற்றைக் கழுவுவதற்காக மட்டுமன்றி தம்மைச் சார்ந்து வாழ்வோரின் வயிற்றைக் கழுவுவதற்காகவும் அங்குள்ள அகதிப் பெண்கள் பலர் தமது நாளாந்த வியாபாரத்தை ஆரம்பித்து விடுகின்றனர். விற்கப்படும் பொருள் அவர்களது உடல்கள். ஒருத்திக்கு பல வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் ஒருவர் பின்ஒருவராக அவளை நாடித் தமது உடல் தேவையைப் பூர்த்தி செய்துகொள்கின்றனர். குமரிகள் முதல் நடுத்தர வயதுடைய பெண்கள் வரை ஆண்களை அணைக்கவும் அவர்களுக்கு ஆனந்தத்தை அள்ளி வழங்கவும் இரவில் அவர்களின் வரவை ஆவலோடு எதிர்பார்த்து இருக்கின்றனர் இந்த முகாம்களில்.

இரவு கவிந்துள்ள அந்த நடு நிசி வேளையில் ஒரு 'டார்ச்லைட்' வெளிச்சம், ஒமுகாமின் இருளைக் கிழித்துக்கொண்டு ஒளி வீசினால் அதன் அர்த்தம் ஆசாமி ஒருவர் தனது ஆரணங்கைத் தேடி வருகிறார் என்பதே.

அகதிமுகாமொன்றில் நீண்டநாள் வாழ்க்கை நடத்தும் 'தாசி' என்று முத்திரை குத்தப்பட்டுள்ள நந்தினி என்ற நங்கை கூறும் கதையைக் கேட்டுப்பார்ப்போமா? நந்தினி சொல்கிறார் இப்படி.

''எனது பெயர் நந்தினி. எனக்கு மூன்று குழந்தைகள். எனது கணவர் இப்போது சிறையில். அவர் ஒரு குடிகாரன். ஒருநாள் இரவு எனது கடைசி மகளைக் கடுமையாகத் தாக்கினார் எனது கணவர். அடி தாங்க முடியாது குழந்தை மயங்கிவிட்டது. நான் பொலிஸில் புகார் செய்தேன் அவருக்கு இப்போ சிறை வாழ்க்கை. இங்குள்ளவர்கள் என்னை தாசி என்றே அழைக்கிறார்கள். நான் இந்தத் தொழிலை விரும்பிச் செய்யவில்லை. சந்தர்ப்பம் என்னைத் தூண்டிவிட்டுள்ளது. எனது கணவர் எங்களுடன் இல்லாத நிலையில் குழந்தைகளை இங்கே தனியே விட்டு விட்டு எப்படி நான் வேலைக்குச் செல்லமுடியும்? எனக்கு குடும்பமோ அல்லது நண்பர்களோ கிடையாது. நான் இரவில் ஆண்களுடன் உறவாடுகிறேன். மறுக்கவில்லை. அவர்கள் என்னுடன் செலவிடும் நேரத்துக்காக எனக்குப் பணம் கொடுக்கிறார்கள். என் குழந்தைகளுக்கு நேரத்துக்கு நேரம் சாப்பாடு போடுவதற்கு வேறு வழி ஏதாவது இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. என்னிடம் வருபவர்கள் மூலம் இரவு ஒன்றுக்கு ரூபா 100இலிருந்து 150 ரூபா வரை என்னால் சம்பாதிக்கமுடிகிறது.



இந்த முகாமிலே 436 குடும்பங்கள் இருக்கின்றன. இங்குள்ள ஒன்று அல்லது இரண்டு குடும்பங்கள் அல்ல. பல குடும்பங்கள் விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டுள்ளன என்பதுதான் உள்ளமை.

இரவு கௌவிப் பிடிக்கத் தொடங்க இங்குள்ள ஆண்களும் பெண்களும் தமது இரவுத்தொழிலுக்கான ஆயத்த வேலைகளை மெல்ல மெல்ல ஆரம்பித்துவிடுகின்றனர். ஆண்கள் போதைப் பொருட்களில் அல்லது மதுவில் தம்மை மறந்து இருப்பதற்கான ஆரம்பவேலைகளைத் தொடங்க, பெண்கள் வழிமேல்விழி வைத்து தமது ஆசை நாயகர்களின் வரவை ஆவலோடு பார்த்திருக்கின்றனர் - இதுதான் இங்குள்ள பலரின் இரவு வாழ்க்கை ஆனால், விபச்சாரிப் பட்டம் சூட்டப்பட்டது எனக்கு மட்டும் தான்'' என்று கூறி முடித்தார் நந்தினி.

அந்த முகாமில் உள்ள குமாரி என்ன சொல்கிறார்? அவர் சொல்வது இதுதான்.

''எங்களுக்குப் பெண்குழந்தைகள் இருக்கின்றனர். மடியிலே நெருப்பைக் கட்டிக்கொண்டு நான் அவர்களை வளர்த்து வருகிறோம்.

ஆண்கள் மிருகங்களைப்போல் வெறிபிடித்து அலைகிறார்கள். எங்களுடைய பெண்பிள்ளைகளை தமது பசிக்கு இரையாக்குவதற்காக சிலர் இரவு நேரத்தில் வீடுகளை உடைத்துக்கொண்டே உட்புகுந்து விடுகிறார்கள்.

வீடுகளுக்கு கதவுகள் இல்லை. வீடுகளில் இரவு நேரத்தில் புகுந்துவிடும் காமுகர்களின் பயமுறுத்தல் எந்த நேரமும் இருந்துகொண்டே இருக்கிறது. அதிரடித் தாக்குதல் போல் எந்தவித சலனமும் இல்லாமல் இரவில் வீடுகளுக்குள் புகுந்துவிடும் இவர்கள், பிள்ளைகளைக் கெடுத்துவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். நாங்கள் ஏழைகள், பொலிஸில் சென்று முறைப்பாடு செய்தாலும் அவர்கள் நாங்கள் சொல்வதை கவனத்தில் எடுத்துக்கொள்வது இல்லை.'

தமது குழந்தைகளுக்கு உணவூட்டுவதற்காக அநேக பெண்கள் விபசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்றுவரை அரசாங்கம் எங்களுக்கு எந்தவிதமான உதவியையும் செய்யவில்லை. எமக்கு அரசுகள் செய்த சிறு உதவியும் இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. இங்குள்ள அநேக பெண்கள் தமது கணவரை இழந்துள்ளனர். தம்மையும் தமது குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காக அவர்கள் விபசாரத்தில் ஈடுபடுவதை நாங்கள் தவறென்று சொல்லமுடியாது.'' - இவ்வாறு சொல்கிறார் குமாரி.

இவ்வாறு 'இவர்' தன் அகதிமுகாம் கதையைச் சொல்லிக்கொண்டு இருந்த போது ஆடல்பாடல் சத்தம் எங்கிருந்தோ வருகிறது.

ஏறிய மதுபோதையில் ஆண்களும் பெண்களும் கைதட்டி பாட்டுப் பாடி மகிழ்கின்றனர். அவர்கள் ஒருவரை ஒருவர் அணைத்தபடி நடனமாடுகின்றனர். முத்தங்களையும் பரிமாறிக்கொள்கின்றனர். இப்படி எத்தனையோ சிருங்காரக் காட்சிகள் கண்களை அலையவிட்டால் அந்த இரவில் தெரிவது இயல்பு.

போதைப்பொருட்களுக்கு அடிமையானோரின் வினோத லீலைகள் இன்னொரு புறத்தில் தினமும் அரங்கேறுகின்றன.

இந்த நாடு எதிர்நோக்கிய பேரடி சுனாமி என்றுதான் நாங்கள் நினைத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், சுனாமியால் பாதிக்கப்பட்டோர் இன்று வாழும் அவல வாழ்க்கையை - ஏன் கேடுகெட்ட வாழ்க்கையை - எப்படி வர்ணிப்பது? இத்தனை எல்லாம் பொறுப்பு யார்? அரசாங்கமா? அல்லது இந்தச் சமுதாயமா?

அகதிமுகாம்களில் வாழ்க்கை நடத்தும் பெண்களில் பலரை விபசாரிகள் என்றே அவர்களுடன் அதே முகாம்களில் வாழும் சிலர் அருவருப்புடன் அழைக்கின்றனர்.

''எங்களை யாருமே குறைகூறவும் முடியாது எமது நடத்தை பற்றி குறைபிடவும் முடியாது. நாங்கள் சமுதாயத்தால், அரசாங்கத்தால் உதவிகள் மறுக்கப்பட்ட பாவிகள்'' - இப்படிக் கூறுகின்றனர் முகாம்களில் உள்ள 'அவர்கள்'.

*(கட்டுரையில் தரப்பட்டுள்ள பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்கள்)*

# நடாளுமன்றில் மூன்றிலொரு இடங்கள் மகளிருக்கு; வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம் நிறைவேறுமா?

இந்தியாவின் நாடாளுமன்றத்தின் இரு அவைகள் மற்றும் மாநில சட்டசபைகள் ஆகியவற்றில் உள்ள மொத்த இடங்களில் மூன்றிலொரு பங்கு கட்டாயமாக மகளிருக்கென ஒதுக்கப்படும் வகையில் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளது.

இவ்வாரம் தொடங்கவுள்ள நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரிலேயே இந்தச் சட்டமூலம் கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரிகிறது.

**பக்கத்து வீடு**

இந்திய நாடாளுமன்றத்தில் ஏற்கனவே குறித்த தொகை இடங்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மகளிருக்கான இந்த இடஒதுக்கீடு விவகாரம் பல வருடங்களாகப் பேசப்படும் ஒரு விடயமாக இருந்து வருகிறது. பி.ஜே.பியின் ஆட்சிக்காலத்தில் இந்த மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டுவர அக்கட்சி முயற்சித்த போதிலும் அக்கட்சிக்குள் இருந்துவந்த எதிர்ப்பு மற்றும் பீகாரின் லல்லு பிரசாத், உத்தரப் பிரதேசத்தின் முலாயம் சிங் யாதவ் ஆகியோரின் எதிர்ப்பால் அதைக் கொண்டுவர முடியவில்லை.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபின் சோனியாகாந்தி இது விடயத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்படுவதால் சிலசமயம் இந்தக் கூட்டத் தொடரிலேயே இந்தச் சட்டத்தை நிறைவேற்ற இயலும் என மகளிர் உரிமை அமைப்புகள் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளன.

பல பெண்உரிமை ஸ்தாபனங்கள் இச்சட்டத்தை கொண்டுவர பி.ஜே.பி அரசையும் காங்கிரஸ் அரசையும் நிர்ப்பந்தித்து வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. சோனியா காந்தியின் தனிப்பட்ட அக்கறை இருப்பதற்கு பல காரணங்கள் உண்டு. அவரே பெண்ணாக இருப்பதும் கட்சியில் அவருக்கு ஆலோசனை வழங்கும் அம்பிகா சோனியும் பெண்ணாக இருப்பதும் ஒரு காரணம். நேர்மையும் செயல் திறனுமுள்ள பெண்தலைவர்கள் பலருக்கு சோனியா அமைச்சரவையிலும் இடம் கொடுத்துள்ளார். ஆந்திராவின் ரேணுகா சௌ ஹரியானாவின் ஷைலஜா போன்றோர் மீது அவருக்கு தனிப்பட்ட அன்புள்ளதை கட்சி அறியும்.

இந்தியாவின் அரசியலில் ஊழல் என்பது ஓர் உள் அங்கமாக பலகாலம் இருந்து வருகிறது. இதைத்தடுக்க பல்வேறு சட்டங்கள் அவ்வப்போது கொண்டுவரப்பட்டாலும் அரசியலில் பெரும் அளவு பெண்கள் பங்கு கொண்டால் இந்நிலை ஓரளவு மாறலாம் என்ற நம்பிக்கை சரியானதே.



-சோனியா-

ஆண்கள் எதற்கும் துணிந்தவர்கள்; துணிச்சலுடன் ஊழல் செய்பவர்கள். பெண்களோ இயல்பாகவே உணர்ச்சி வசப்பட்ட, நீதிநேர்மை பற்றி அதிகம் சிந்திக்கும், பேசும் தன்மையானவர்கள் என்பதால் இவர்களின் கையில் ராஜாங்கம் சென்றால் ஓரளவு ஊழலைக் குறைக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. ஆயினும், தமிழ் நாட்டில் ஒரு ருபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு ஊரைச்சாப்பிட்ட செல்வியும் உத்தரப்பிரதேச முதல்வராக இருந்த மாயாவதியும் விதிவிலக்குகள் என்றே சொல்லவேண்டும்.

மறுபுறம் பெண்கள் அரசியல் தலைமைத்துவம் வகிக்கும் சதவீதம் அதிகரித்தால் பெண்சமூகத்துக்கு நன்மை செய்ய அவர்கள் இயல்பாகவே தூண்டப்படுவர். ஆணாதிக்கமுள்ள இந்திய சமூகத்தில் ஆண்தலைவர்கள் பெண்களின் நன்மையைக் கருத்தில் எடுப்பதில்லை என்பதும் உண்மைதான். உதாரணத்துக்கு ஜெயலலிதாவே கூட நலத்திட்டங்களை அறிவிக்கும்போது, மகளிர் சமூகத்துக்கே இயலுமானவரை சலுகை வழங்கப்பார்க்கிறார். பெருந்தொகை பெண்கள் ஜெயலலிதாவால் ஈர்க்கப்பட்டு அவருக்கு வாக்களித்து வருகிறார்கள் என்பது உண்மையே.

சோனியா காந்தியால் இந்தச் சட்டத்தை நிறைவேற்றமுடித்தால் பெருமளவு மகளிர் ஆதரவை அவர் பெறமுடியும் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. ஏற்கனவே சோனியா மதசார்பின்றி நடந்துவருபவர் என்று பெயரெடுத்துள்ளதால் காந்திய அமைப்புகள் பத்திரிகைகள் அவருக்கு ஆதரவு தெரிவித்துவரும் நிலையியல் மகளிர் அமைப்புகளும் இனி அவரை வானளாவப் புகழத் தொடங்கும். இவையெல்லாவற்றையும் கணித்தே இந்த சட்டத்தை நிறைவேற்ற சோனியா முனைப்புடன் இருப்பதாகத் தெரிகிறது.

முன்னர் பி.ஜே.பி. இச்சட்டத்தைக் கொண்டுவந்த போது இதை எதிர்த்த லல்லு இப்போது காங்கிரஸ் அரசில் பங்காளி என்பதால் இச்சட்டத்தை எதிர்க்கமாட்டாரெனத் தெரிகிறது.

இதற்கிடையில் பி.ஜே.பி.யில் பெரும் சர்ச்சையை தோற்றுவித்த அத்வானி - ஆர்.எஸ்.எஸ். விவகாரம் தற்போதைக்கு சுமுகமாக தீர்த்துள்ளது. ஆர்.எஸ்.எஸ் தலைவர்களை அத்வானி நேரில் சென்று ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்தில் சந்தித்ததையடுத்தே இத்தீர்வு ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் என்பது அமைச்சரவை அந்தஸ்துக்கு சமனான பதவி. அத்தகைய பதவி வகிக்கும் அத்வானி, ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்திற்குச் செல்ல நேரிட்டது எதைக் காட்டுகிறதென்றால் ஆர்.எஸ்.எஸ்ஸை பகைத்து பி.ஜே.பி. தலைநிமிரவே முடியாது என்ற உண்மையினையே.

தேர்தல் வந்தால் பி.ஜே.பி.க்கு தேர்தல் வேலை செய்வது இலட்சக்கணக்கான ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களே! காங்கிரஸுக்குக் கூட

**எஸ்.சுரேந்திரஜித்**

இவ்வளவு தொண்டர்கள் கிடையாது. ஆக பி.ஜே.பிக்கு இப்போதைக்கு தலையிடி தீர்ந்துள்ளது. ஆனால், சென்னை தேசிய செயற்குழுக்கூட்டம் ஒத்திப்போடப்பட்டது, அத்வானி சர்ச்சையாலேயே என்பது கட்சிக்கு வெட்கம் தரும் விடயமே. நாடாளுமன்றின் முக்கிய கூட்டத்தொடரான குளிர்கால கூட்டத்தொடர் துவங்கும் நேரம், கட்சி உள்வீட்டுப்பிரச்சினையில் தள்ளாடிக் கொண்டிருந்தால் காங்கிரஸ் அரசை கூட்டத்தொடரில் திணறடிக்கமுடியாது போகும்.


**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் கிழக்கில் பலாலி றோட்டுக்கு அருகாமையில், 20 பரப்பு பலாலிறோட் முகப்பு, 5 பரப்பு இராமகிருஸ்ண முகப்பு, 20 பரப்பு பாலபண்ணை றோட் உடன் விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம். பி.ப. 6.00 மணி தொடக்கம் பி.ப.8.00 வரை தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 0773114510



**MILLENNIM NURSES TRAINING SCHOOL**

**தாதியர் பயிற்சி வகுப்பு - 2005/2006**

கடந்த நான்கு வருடங்களாக, மிகத் திறமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் மிலேனியம் தாதியர் பயிற்சிக் கல்லூரியானது இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட தாதிமாரை உருவாக்கி உள்ளது. திறமை வாய்ந்த வைத்தியர்கள், வைத்தியத் தாதிமார்களால் நடத்தப்பட்டு வரும் இத்தாதியர் பயிற்சிக் கல்லூரிக்குப் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றார்கள்.

க.பொ.த சா/த பரீட்சையில் மிகக் குறைந்தது நான்கு பாடங்களிலாவது சித்தி பெற்றிருத்தல் அவசியம். 15.08.2005 இல் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி வகுப்புக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 09.08.2005 இல் நடைபெற உள்ளது.

ஆர்வமுறையோர் கிராமசேவகர் சான்றிதழ், கல்விப் பெறுபேற்றுச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை என்பனவற்றுடன் கீழே உள்ள முகவரிக்குச் சமுகமளிக்கவும்.

**MILLENNIUM NURSER TRAINING SCHOOL**
(KERAWALAPITIYA JUNCTION) HENDALA ROAD,
HENDALA, WATTALA.
T.P:- 011 2947570



**BRIGHT TRAINING CENTRE**
**POSTAL TUITION COURSES**

பிறைட் பயிற்சி நிறுவனம்
தபால் மூலம் கல்வி நெறிகள்

SPOKEN ENGLISH - பேச்சு ஆங்கிலம்
SPOKEN SINHALA - பேச்சு சிங்களம்
BUSINESS ENGLISH - வியாபார ஆங்கிலம்

METHOD OF COMPUTERISED BOOK-KEEPING & ACCOUNTANCY (MCBA)
கணனி மூலம் கணக்குப்பதிவியலும் கணக்கீடும் (MCBA)

NURSERY TEACHER TRAINING COURSE (NTTC)
பாலர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி (NTTC)

FAMILY LIFE EDUCATION (FLE)
குடும்ப வாழ்க்கை / நலக் கல்வி (FLE)

ART OF YOGASANAM (AOY)
யோகாசனக் கலை (AOY)

EFFECTIVE ENGLISH WITH GRAMMAR AND SPOKEN ENGLISH
செயற்திறனுடன் கூடிய ஆங்கில இலக்கணமும் பேச்சு ஆங்கிலமும்


Diploma In Philosophy (D.I.P)
மனோ தத்துவியல் டிப்ளோமா

தபால் மூலம் கல்வி நெறி போதிப்பதில் இருபது வருடகால அனுபவமுள்ள நிறுவனம் Bright அழைக்கும்

இணைய விரும்புவோர் 5.00 பெறுமதியான முத்திரையொட்டி சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும்.

**BRIGHT TRAINING CENTRE**
S-27, First Floor, P.O. Box-162
Colombo Central Super Market Complex,
Colombo-11. Tel / Fax: 2434770





இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட மறுசீரமைக்கப்படாத உயர்தர

மெஸியர் பெர்குஷன்

MASSEY FERGUSON 240

எந்த வேளையிலும் எத்தனை ட்ரக்டர்களையும் வாங்கி வரக்கூடிய இலங்கையின் மிகப்பெரிய ட்ரக்டர் நிறுவனம்

**தேவ் டிரக்டர்ஸ்**
196, கண்டி ரோட் யக்கல.
(லங்லோ அருகில்)
தொ : 033-2226010 பெ : 033-2226716



**டேவ்ராக் டென்சியா கம்பைன்ட் ஹாவஸ்டர்**



புத்தம் புதியது

- நாளொன்றுக்கு 2 ஏக்கர் நிலப்பரப் பினை அறுவடை செய்யலாம்
- குறைந்த செலவு
- இலகு பாவனை
- அதிகூடிய திறன்
- வீண் விரயங்களைத் தடுக்கலாம்
- ஆறு மாத உத்தரவாதம் உண்டு
- இதில் சூடடித்தல் மற்றும் நெல்லினை சாக்கினில் இட்டுக்கட்டுதல் போன்றவற்றையும் மேற்கொள்ளலாம்.

**டேவ் டிரக்டர்ஸ் பிறைவேட் லிமிடெட்.**
**யக்கல, தொலைபேசி — 0332226010**

# சுடர் ஒளி

ஜூலை 31 – ஆக. 06, 2005



85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com


## தவறவிடப்பட்ட அரிய சந்தர்ப்பம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண கடந்த மூன்று வருடங்களாக சிங்கள தேசத்துக்கு தமிழர் தேசம் வழங்கிய அரிய சந்தர்ப்பத்தை அது தவறவிட்டிருக்கிறது என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கிளிநொச்சியில் தமிழீழ சட்ட வாக்கல் செயலகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் தமது தலைவிதியை தாங்களே நிர்ணயிக்கின்ற தீர்க்கமான முடிவை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறி இருக்கிறார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் செயல் இழந்து போன நிலையில் – அதில் திருத்தம் செய்து சீரமைப்பது குறித்து அரசு ஆலோசிப்பதாக தகவல்கள் வெளியான சூழ்நிலையில் – தமிழ்ச்செல்வனின் இந்த அபாய எச்சரிப்பு வெளிவந்திருக்கிறது.

டோக்கியோ மாநாட்டு இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தலைமை வகிக்கும் பிரிட்டன் ஆகியவற்றின் தூதர்களை ஜனாதிபதி கொழும்பில் சந்தித்தார்.

அப்பொழுதே, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தெட்டத் தெளிவாகத் தென்படும் குறைகள் உள்ளன, பாதுகாப்பு நிலவரத்தை மேம்படுத்தவும் நம்பிக்கையை கட்டி எழுப்பவும் இந்தக் குறைபாடுகளை மீளாய்வு செய்வதற்காக புலிகளுடன் உயர்மட்டக் கலந்துரையாடலை நடத்தவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டி இருந்தார்.

இத்தகைய ஒரு பேச்சுவார்த்தைக்கு இணையத்தலைமை நாடுகளும் ஆதரவு வழங்க வேண்டும் என்ற சாரப்பட அவரின் கருத்தும் இருந்தது. புலிகள் இதனை நிராகரித்து விட்டனர்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து மூன்று வருடங்கள் கடந்து விட்டன. அடுத்த வருடம் பெப்ரவரியுடன் நான்கு வருடமாகிவிடும்.

இன்று யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஆட்டம் கண்டு விட்டதற்கு அரசுதான் காரணம். ஒப்பந்தத்தில் செய்து கொள்ளப்பட்ட விதிகளை, கட்டுப்பாடுகளை அரசு நிறைவு செய்யத் தவறியதே இன்று ஒப்பந்தம் செயல் இழந்து போகக் காரணம்.

இரண்டு வருடகாலமாக சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் ஆரம்பிக்கும் சாத்தியம் அணுவளவும் இல்லை.

பொதுக்கட்டமைப்பை உருவாக்கிவிட்டால் அதன் மூலம் ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தி விடலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்புக் காரணமாக அது கட்டையில் ஏற்றப்பட்டு விட்டது. நீதிமன்றத் தீர்ப்பு தடைவிதிக்காவிட்டாலும் பேரினவாதிகளின் எதிர்ப்பால் ஜனாதிபதி பின்வாங்கும் நிலை நிச்சயமாக ஏற்பட்டிருக்கும்.

கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரச படையினரின் ஆதரவுடன் புலிகள் மீது துணைப் படைகள் நடத்தும் தாக்குதல்களே நிலைமை மோசமடையக் காரணமாக இருந்திருக்கிறது.

இணைத்தலைமை நாடுகள் விடுத்த அறிக்கையில் இதனையே வலியுறுத்தி உள்ளன.

தமிழர் தாயகப் பகுதியிலிருந்து துணைப் படைகள் மற்றும் ஏனைய ஆயுதக்குழுக்களை மூடை, முடிச்சுக்களோடு அகற்றுவதன் மூலம் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை அரசை இந்த நாடுகள் வலியுறுத்தி இருந்தன.

பிரச்சினைக்கான உண்மையான காரணத்தை இந்த நாடுகள் கண்டறிந்தது ஜனாதிபதிக்கு சீற்றத்தை ஏற்படுத்தி இருக்கலாம் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்காக யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலேயே மாற்றம் செய்யும் அளவுக்கு ஜனாதிபதியின் சிந்தனை சென்றது தான் வேதனை. ஜனாதிபதியின் யோசனை நிலைமையை மேலும் சிக்கலாக்குமே தவிர சீர் செய்ய உதவாது.

# பந்து அரசின் பக்கம்

# போரா? சமாதானமா?

யுத்தநிறுத்தம் நீடிக்கப்படவேண்டும். கடந்த 25ஆம் திகதி திங்கட்கிழமை சமாதான முன்னெடுப்புக்கான இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்களுடன் நடைபெற்ற சந்திப்பொன்றின்போதே தமது இந்த ஆதங்கத்தை வெளியிட்டிருக்கிறார், ஜனாதிபதி சந்திரிக்கா.

ஆனால், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட மறுதரப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் போரா – சமாதானமா என்று ஜனாதிபதி சந்திரிகாவைப் பார்த்துக் கேட்கிறார்கள். இந்த நிலைக்கு அவர்களைத் தள்ளிவிட்டிருப்பதற்கான காரணிகள் பல.

### 83 ஆடிக்கலவரம்

தமிழர் வாழ்வில் நீங்காத வடுவை ஏற்படுத்திய 83ஆம் ஆண்டு ஆடிக்கலவரத்தின் போது அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போரா? சமாதானமா? என்று அதிகார வெறி தலைக்கேறிய நிலையில் ஏக்கத்தின் விளிம்பில் நின்ற தமிழ்த் தேசத்தைப் பார்த்துக்கேட்ட அதே கேள்வியை இன்று பலமான நிலையில் நின்றுகொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் சிங்கள தேசத்தைப் பார்த்துக் கேட்கிறார்கள். காலம் எப்படி மாறி விட்டது. பார்த்தீர்களா?

இது மட்டுமா? இந்தக் கலவர காலத்தில் அன்றைய அரசாங்கத்தில் அமைச்சராகக் கடமையாற்றிய காமினி திசாநாயக்க தமிழர்களுக்கு உதவ இந்திய இராணுவம் இங்கு வரமுயன்றால் அவர்கள் வந்து சேர்வதற்குள் நாட்டிலுள்ள அனைத்து தமிழர்களையும் எம்மால் அழிந்துவிடமுடியும் என்று மார் தட்டினார்.

காலத்துக்குக்காலம் குட்டக் குட்டக் குனிந்து நின்ற தமிழினம் இன்று புலிபோல் பாய்வதற்குத் தயாராக நிற்கிறது.

அன்று தமது விடுதலைக்கான போரை ஒரு டசின் உறுப்பினர்களோடு ஆரம்பித்த தமிழ்ப் போராளிகள் இன்று தமிழ்த் தேசத்தைக் காப்பாற்றும் ஒரு மரபுவழி இராணுவ பலத்துடன் ஒரு தேசிய இனத்தின் பாதுகாவலர்களாக வீறுகொண்டு எழுந்து நிற்கிறார்கள். சர்வதேசத்தின் ஆதரவையும் அவர்கள் தம்பக்கம் இழுத்துவைத்திருப்பது அவர்களுக்கு மேலும் வலுவூட்டுவதாக அமைந்துள்ளது.

### தமிழ் தேசம்

இதுமட்டுமா? இன்று தமிழ்த் தேசத்துக்கு என்று தனியான

1. நிர்வாகம்
2. நீதித்துறை
3. பாதுகாப்புப்படை

இப்படி ஒரு தேசத்தின் திறன் மிக்க நிர்வாகத்துக்குத் தேவையான கட்டமைப்பொன்று தமிழர் தாயகத்தில் இருக்கின்றது. 2002ஆம் ஆண்டு செய்யப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் இந்த நாடு இரண்டு நிர்வாக அலகுகளாக இருக்கின்றனது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது.

சிங்கள தேசத்துக்கான நிர்வாகம் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்துக்கான நிர்வாகம் என இரண்டு நிர்வாக மையங்கள் இருப்பதை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் பொதுக் கட்டமைப்பு மீதான அண்மைய உயர் நீதிமன்றத் தீர்ப்பும் அதை உறுதிசெய்துள்ளது.

இத்தகைய பலம்மிக்க தேசமொன்றிலிருந்துதான் போரா? சமாதானமா? என்று இப்போது தமிழ்க்குரல் சிங்கள தேசத்தைப் பார்த்துக் கேட்கிறது. போர் வெடித்தால் புலிகளுக்கு உடனடி இராணுவ வெற்றி என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறும் பலமான நிலையில் தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பலம் கணிப்பிடப்பட்டுள்ளது. இதை பார்க்கவும், கேட்கவும் அந்த காமினி திசாநாயக்கா இன்று இல்லையே.

### பொறுமை சோதிக்கப்படுகிறது

இத்தனை பலமான நிலையில் இருந்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகள் போர் வெறியர்கள் அல்லர். வாழு வாழ விடு என்றுதான் சிங்கள பேரினவாத அரசைப் பார்த்துக் கேட்கிறார்கள். ஆனால், அவர்களின் பொறுமையைச் சோதிக்க வைப்பது எது?

ஜனாதிபதி சந்திரிக்காவின் கண்ணாமூச்சி விளையாட்டுக்கள்தான் தமிழீழ விடுதலைப்புலிகளை பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்று சிந்திக்க வைத்துள்ளது.

2002இல் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது. இறைமை தாரைவார்க்கப்பட்டுவிட்டது என்று அன்று கூறினார் அவர். இன்று அதே ஒப்பந்தத்தில் குளிர்காய்ந்து கொண்டு நாட்டு நிலைமையைப் பற்றிச் சிந்திக்காது தனது வீட்டு நிலைமையையே அவர் சிந்திக்கிறார். அதாவது தமிழ் மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான எத்தகைய அரசியல் நகர்த்தல்களிலும் அவர் இதுவரை ஈடுபடவில்லை. மாறாக யுத்தநிறுத்தம் தந்துள்ள அமைதியில் தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வது பற்றியும் நாடாளுமன்றத்தில் தனது அரசு மண்கௌவாமல் இருப்பதற்கான வழிவகைகளைத் தேடுவதிலுமே அவரது சிந்தனை திரும்பியிருக்கிறது.

ஆனால், போரொன்று வெடித்தால் அதற்கு முகம்கொடுத்து வெற்றிகாணக்கூடிய நிலையில் ஸ்ரீலங்காவின் முப்படைகள் இன்று இல்லை. நாட்டின் நலிவடைந்த பொருளாதாரமும் இன்னொரு போருக்கு இடம்கொடுக்காது.

முப்படைகளைப் பொறுத்தவரை

* சிரேஷ்ட படை அதிகாரிகள் ஓய்வு பெற்றுப் போய்விட்டதாலும்,
* இராணுவத்திலிருந்து தப்பியோடுவோர் தொகை பெருமளவு அதிகரித்து இருப்பதாலும்,
* புதிதாக இராணுவத்துக்கு ஆள்திரட்டுவதில் கஷ்டங்கள் இருப்பதாலும்,
* இராணுவத்தில் நிலவும் ஊழல் மோசடிகளாலும்,

போரிடும் ஆற்றல் முப்படைகளிடம் இல்லை. இதனால் தான், சர்வதேச உதவியுடன் போர்நிறுத்தத்தை நீடிக்க வைப்பதன் மூலம் வெற்றிகரமாகப் பின்வாங்கி தனது உள்வீட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்கின்றார் சந்திரிக்கா.

சந்திரிக்காவின் இந்த நாடகத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

### விடுதலைப் புலிகளின் பிரச்சினைகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பயணம் செய்வதற்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு சாதகமான பதில் இன்னும் இல்லை. இழுத்தடிப்புத் தொடர்கிறது.

படைத்தரப்பின் புலனாய்வுப் பிரிவும் தேசவிரோத, சக்திகளும் கூட்டாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனைகளின் மீது கிழக்கில் நடத்திய மின்னல் தாக்குதல்களைத் தொடர்ந்து அந்தப் பணிமனைகள் மூடப்பட்டு விட்டன. அரசியல் பணியில் ஈடுபட்ட போராளிகள் வன்னிக்குத் திருப்பி அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தின் காரணமாக அங்குள்ள தமிழ் மக்கள் நெருப்பை மடியில் கட்டிக்கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திருகோணமலையில் அமைதி பேணுவதற்காக இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் நூறு வீதமும் சிங்களத் துருப்பினரே. அங்குள்ள பொலிஸ் படையில் 98 வீதமானோர் சிங்களப் பொலிஸாராகவே உள்ளனர். இதனால் அங்குள்ள தமிழ் மக்கள் தாம் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பூமியில் வாழ்வதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 10ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் உட்பட நிராயுதபாணிகளான நால்வர் உயிரிழந்திருக்கிறார்கள். 98 வீதம் சிங்களப் பொலிஸார் திருகோணமலையில் இருப்பதால் வன்முறைகள் அங்கு வெடிக்கும்போது அப்பாவித் தமிழர்களே கைது செய்யப்படுகிறார்கள். சிங்களக் கும்பல்களின் வன்முறைகளுக்குப் பலியாவதும், குற்றம் இழைத்ததாக கைதுசெய்யப்படுவதும் தமிழர்கள்தான்.

இந்தப் பின்னணிதான் தமிழீழ விடுதலைப் புலிகளை போரா? சமாதானமா? என்று கேட்கவைத்திருக்கிறது.

### மதியுரைஞர் பாலா - நோர்வே தரப்பு சந்திப்பு

போரொன்று வெடித்தால் அதைச் சமாளிக்க முடியாத நிலையிலுள்ள அரசாங்கம், அதைத் தவிர்ப்பதற்காக நோர்வேயின் – சர்வதேசத்தின் – உதவியை நாடி இருக்கிறது. இருதரப்பும் நேரடியாகச் சந்தித்து கருத்துக்களை பரிமாறுவதன் மூலம் பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கலாம் என்று கூறுகிறது அரசாங்கம்.

கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை லண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்த நோர்வே அனுசரணைக்குழுவின் பிரதிநிதிகளும் இதே கருத்தையே முன்வைத்தனர். இதற்கு பதிலளித்த மதியுரைஞர் பாலா,

''ஏற்கனவே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் திட்டவட்டமாக – தெளிவாக – குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அமுல்படுத்துமாறு நான் நாம் கோருகிறோம். இணக்கம் கண்ட விடயத்தை அமுல் படுத்துவதற்கு நேரடிச் சந்திப்போ அல்லது அதற்கான பேச்சோ அவசியம் இல்லை'' – என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

அத்துடன் பொதுக்கட்டமைப்பு இயங்கமாட்டாது என்றால் ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற வடக்கு கிழக்கு மக்களுக்கான மனிதாபிமான உதவிகள், சர்வதேச நிதி என்பன நேரடியாகக் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளைச் சர்வதேச சமூகம் இனியும் காலம் தாழ்த்தாது விரைந்து செய்யவேண்டும் என்ற வேண்டுகோளையும் அவர் அவர்களிடம் விடுத்துள்ளார்.

### பந்து அரசின் பக்கம்

இப்போது பந்து அரசாங்கத்தின் பக்கத்திலேயே இருக்கிறது. போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் இது தான் தமிழ்த் தேசத்தின் இன்றைய நிலைப்பாடு. சந்திரிக்கா அம்மையாரின் நிழல் யுத்தம் இனி வேண்டாம். களத்தில் காத்து நிற்கின்றது தமிழர் படை. போர் என்றால் தனது படைகளை தமிழர் தாயகத்துக்கு அனுப்பிப் பார்க்கட்டும்; ஆனையிறவுச் சமரின்போது இந்தியரிடம் பாதுகாப்புக் கோரியதுபோல இம்முறையும் கோர கால அவகாசம் கிடைக்காது அம்மையாரே. இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் யுத்தம் முடிந்துவிடும். பொறுத்தது போதும் பொங்கி எழுங்கள் என்று தான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை வேண்டிநிற்கின்றனர்.

ஆர்பிளம்



# இந்தியா பாடம் படிக்க உதவிய ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தம்

இன்றைக்குச் சரியாக 18 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 29–07–1987 அன்று முக்கியமான உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டது. அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் கொழும்பில் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

அந்தக் காலகட்டத்தில் வடக்கில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை யுத்தத்தின் மூலமே அடக்க முடியும் என இலங்கை அரசு நம்பியது. அரசியல் தீர்வு குறித்து அரசு நம்பிக்கை கொள்ளவில்லை.

இப்படியான சூழ்நிலையிலேயே இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகிறது

## ஒப்பரேஷன் லிபரேசன்

1987 ஜூலை மாதம் 1ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் மூலம் வடமராட்சியில் பெரும்பகுதியை அரசபடைகள் கைப்பற்றி இருந்தன. இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து வடபகுதியைச் சேர்ந்த பலர் படகுகள் மூலம் இந்தியா சென்றனர். இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து வடக்கில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்த நிலைமையை அவதானித்த அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என டெல்லி சென்று மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்தார்.

அவ்வேளையில் இலங்கை இராணுவம் குடாநாடு முழுவதையும் கைப்பற்றுவதற்கு பாரிய நடவடிக்கைக்கான தயாரிப்புகளை மேற்கொண்டிருந்தது இந்தியாவும் தனது திட்டங்களைச் செயற்படுத்தத் தொடங்கியது.

## கஜனி

21.07.1987 அன்று இந்தியத் தூதரகத்தை சேர்ந்த 2ஆவது செயலாளர் எச்.எஸ்.பூரி யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட போராளிக் குழுக்களின் தலைவர்களைச் சந்தித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தமிழ்நாடு சென்று அங்குள்ள போராளிக் குழுக்களின் தலைவர்களைச் சந்தித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது தலைவர் பிரபாகரன் 2ஆவது செயலர் பூரியிடம் பின்வருமாறு தெரிவித்தார்.

''தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என ஏற்றுக் கொண்டால் மட்டுமே சிறிலங்கா அரசுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நான் கலந்துகொள்வேன். வடக்கிலிருந்து இராணுவத்தினரும் கிழக்கிலிருந்து விசேட அதிரடிப்படையினரும் வாபஸ் பெறப்படவேண்டும்.'' எனத் தெரிவித்தார்.

இதற்கிடையில் இந்தியத் தூதுவர் டிக்சிற்றைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள், ''வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும். இதற்கு தனியான மாகாணசபை அமைக்கப்படவேண்டும்.'' எனத் தெரிவித்தனர்.

வடக்கிலிருந்து விடுதலைப் புலிகளின் கருத்தை அறிந்த பூரி அங்கிருந்து சென்னை சென்று டிக்சிற்றுக்கு விவரம் தெரிவித்தார். உடனடியாக புது டெல்லி சென்ற டிக்சிற் இலங்கையிலுள்ள தமிழ் ஆயுதக்குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியனவற்றின் கருத்துக்களை இந்திய அரசுக்கு எடுத்துரைத்தார். டிக்சிற்றின் பயணத்திற்கு இந்திய அரசு விசேட விமான ஒழுங்குகளை வழங்கியிருந்தது.

இந்த நிலையில் இலங்கையில் தலையீட்டுக்கான காய்நகர்த்தல்கள் ஆரம்பமாகின.

படகுகள் மூலம் உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப இந்திய அரசு எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்காத காரணத்தால் விமானங்கள் மூலம் யாழ்ப்பாணத்தில் இந்திய அரசால் உணவுப் பொருட்கள் போடப்பட்டன.

யாழ். குடாநாட்டை முற்றாகக் கைப்பற்ற பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிட்டிருந்த போதிலும் இந்தி நிலையில் அந்த நடவடிக்கையை நிறுத்துமாறு ஜனாதிபதி ஜே.ஆர்.தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலிக்கு அறிவித்தார்

இதற்கிடையில் 23.07.1987 அன்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து ஜனாதிபதி ஜே.ஆர்., இலங்கையும் – இந்தியாவும் உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திடவிருப்பதாகவும் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் ஒன்றாக இணைத்து புதிய மாகாணசபை இந்த உடன்பாட்டின் மூலம் அமையும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இந்த உடன்பாட்டில் கைச்சாத்திட இந்தியப் பிரதமர் 29.07.1987 அன்று இலங்கை வரவிருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ஜே. ஆர். உடன்பாட்டில் இடம்பெறவிருந்த முக்கிய விடயங்களை அவர்களுக்குத் தெரிவித்தார்.

*வடக்கு – கிழக்கிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டா.

* திருகோணமலைத் துறைமுகத்தின் நிர்வாகம் அரசினால் மேற்கொள்ளப்படும்.

*ஆயுதங்களைக் கீழே போடும் போராளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும்.

*ஆயுதங்களைக் கீழே போடாத அமைப்புகளிடமிருந்து இந்தியப் படையின் உதவியுடன் இலங்கை படையினர் ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும்.

*வடக்கு – கிழக்கைக் கைவிட்டுச் சென்ற முஸ்லிம் மற்றும் சிங்களவர்களை மீண்டும் அவர்களது முன்னைய இடங்களில் குடியமர்த்துதல்.

ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்ட மேற்படி திட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டனர்.

24.07.1987 அன்று மாலை சிறிலங்கா அரசின் அனுமதியுடன் சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் வந்தடைந்த இந்திய இராணுவத்திற்குச் சொந்தமான இரு ஹெலிகள் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை இந்தியாவுக்கு அழைத்துச் சென்றன. முதலில் பிரபாகரன் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு ஒப்புதலைப் பெறும் நோக்கில் அவர் சென்னையிலிருந்து புது டெல்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இருப்பினும் இலங்கை – இந்திய ஒப்பந்தம் குறித்து பிரபாகரன் தனது உடன்பாட்டைத் தெரிவிக்கவில்லை. இந்த ஒப்பந்தமானது இலங்கைத் தமிழர்களைப் பின்புறத்தில் இருந்து கத்தியால் குத்துவது போன்றது என அவர் கருதினார்.

## பிரேமதாசாவின் எதிர்ப்பு

இதற்கிடையில் ஜப்பான் நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் பிரேமதாசா ஒப்பந்தம் குறித்துக் கேள்விப்பட்டு 26.07.1987 அன்று நாடு திரும்பினார். பிரேமதாசா வந்தகையோடு ஜனாதிபதியைச் சந்தித்து இலங்கை – இந்திய உடன்பாட்டால் நாட்டின் இறைமை பாதிக்கப்படும் என்றும் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படக்கூடாது எனவும் எடுத்துரைத்தார்.

எவ்வாறாயினும் இந்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த முன்னர் மக்கள் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஸ்ரீலங்காவின் உள்விவகாரம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியப் பிரதமர் வந்திருக்கத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது என்ற செய்தி வெளிவரவே நாடாளுமன்றத்தில் சூடு பிடிக்கத் தொடங்கியது. 24 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடியபோது நாடாளுமன்றத்தில் ஒப்பந்தம் குறித்து விவாதிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்தது. இருப்பினும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்வரை அரசாங்கம் நாடாளுமன்ற விவாதத்திற்கு சந்தர்ப்பம் அளிக்கவில்லை.

நாடாளுமன்றம் ஓகஸ்ட் 18 ஆம் திகதி ஒத்திவைக்கப்படவேண்டும் என அரச தரப்பினர் தெரிவித்தனர். அதை எதிர்க்கட்சியினர் எதிர்த்தபோதும் 74 மேலதிக வாக்குகள் மூலம் நாடாளுமன்றத்தை ஓகஸ்ட் 13வரை ஒத்திவைக்கும் பிரேரணை நிறைவேறியது.

இதற்கிடையில் இலங்கை – இந்திய ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிக்குமார்கள் த்லைமையில் ஆயிரக் கணக்கானோர் கொழும்பு புறக்கோட்டையில் அரச மரத்தடியில் சத்தியாக்கிரகம் மேற்கொண்டனர்.

சோபித தேரர், முறுத்தொட்டுவே ஆனந்த தேரர் உட்பட சுமார் 2 ஆயிரம் பிக்குகள் இந்தச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். அனுரா பண்டாரநாகா, மைத்திரிபால, அனில் முனசிங்க, ரிச்சாட் பத்திரான, அனுருத்த ரத்வத்த, அல்வி மௌலானா உட்பட பல அரசியல்வாதிகளும் அதில் பங்குபற்றினர்.

சத்தியாக்கிரகம் ஆரம்பித்து சிறிது நேரத்தில் பொலிஸார் ஹொறிஸ் வீதிப் பக்கத்திலிருந்து கண்ணீர் புகைத் தாக்குதலை மேற்கொண்டபோது சத்தியாக்கிரகிகள் சிதறி ஓடினர். இவ்வாறு சிதறி ஓடியோர், இ.போ.ச.பஸ்களுக்கும் மற்றும் வீதியில் சென்ற வாகனங்களுக்கும் தீ மூட்டினர். கொழும்பு நகரமே போர்க்களம் போல் காட்சியளித்தது. 50 க்கும் மேற்பட்ட பஸ்கள் தீக்கிரையாகின. கலகக்காரர்களை அடக்கும் நோக்கில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் பலர் கொல்லப்பட்டனர்.

அரசாங்கம் கொழும்பு மற்றும் கோட்டே பகுதிகளில் ஊடரங்குச் சட்டத்தை அமுல்படுத்தியது.

## ராஜீவ் வருகை

இதற்கிடையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் அவரது மனைவி சோனியா காந்தி குழுவினர் 29ஆம் திகதி காலை கட்டுநாயக்கா வந்தடைந்தனர். அங்கிருந்து அந்தக் குழுவினரை 8 ஹெலிகள் கொழும்புக்கு ஏற்றிவந்தன.

கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்தியப் பிரதமருக்கு அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. அந்த அணிவகுப்பு மரியாதையை ஏற்கச் சென்ற வேளையில் அணிவகுப்பில் பங்குபற்றிய கடற்படை வீரன் ஒருவன் தனது துப்பாக்கியின் பின்புறத்தால் ராஜீவ் காந்தியின் தலையைத் தாக்க முயன்றான்.

(17 ஆம் பக்கம் பார்க்க)


## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...

ஜூலை 23 – 29 வரை சந்திக்கலாம் (விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

வவுனியாவில்...

பின்னர் அறிவிக்கப்படும்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத் தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...

ஓகஸ்ட் 14 -20
A.S.N. விடுதி
19 2/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.




*ச.வத்சலா — கற்கோவளம்*

**கேள்வி:—** பித்தா உமது பிள்ளைகளை தாலாட்டுப் பாடி தூங்கவைப்பது நீரா அல்லது உமது மனைவியா?

**பதில்:—** பிள்ளைகளைத் தூங்க வைக்கும் வேலை மட்டும் தான் மனைவியினுடையது... தூங்காமல் அழுது அடம் பிடிக்கும் பிள்ளைகளைத் தூங்க வைக்கும் வேலை என்னுடையது.



*க.மதிவதனன் — மல்லாவி*

**கேள்வி:—** பித்தா! 'தோசை அம்மா தோசை — அம்மா சுட்ட தோசை' என்று எமது சிறார்களுக்கு காலா காலமாக சொல்லிக் கொடுத்து எதைச் சாதிக்க விரும்புகிறோம்?

**பதில்:—** நியாயமான கேள்விதான். ஆனால் என்ன செய்வது மதிவதனன்; இது கூட இல்லாமல் போனால் நமது சிறார்கள் 'கல்யாணம்தான் கட்டிகிட்டு ஓடிப் போலாமா?' என்றோ... 'ஏய் கையை வைச்சுகிட்டு சும்மா இருடா...' என்றோ... விபரீதமான பாடல்களைத் தேடிப் போய் விடுவார்களே! அவர்களைதாக்காட்ட இப்போது இதுதேவைப்படுகிறதே..! என்ன செய்ய.....

*து.அகிலா — வவுனியா*

**கேள்வி:—** பித்தா! தற்போது எங்கும் லஞ்சம் தலைவிரித்து ஆடுகிறதே! லஞ்சம் இல்லாத இடம் எது பித்தா?

**பதில்:—** தாயின் கருவறை.

*வே.குமரன் — தெஹிவளை*

**கேள்வி:—** பித்தா! எனது மனைவிக்கு நான் புடைவை எடுத்துக் கொடுத்தால் இந்த புடைவையை பழைய பாத்திரக் காரன்கூட எடுக்கமாட்டான் என்று கிண்டல் பண்ணுகிறாள். அவளை திருப்திப்படுத்த நான் என்ன செய்ய வேண்டும்? ஒரு ஐடியா தாருமேன்.. பிளீஸ்....

**பதில்:—** இனிமேல் புடைவை எடுக்கப் போகும் போது அந்த பாத்திரக்காரனையும் புடைவைக்கடைக்கு கூட்டிச் சென்று புடைவை எடுத்தால் பிரச்சினை தீர்ந்துவிடும்.



*அருணாச்சலம்*
*பன்னீர் — தண்ணீரூற்று*

**கேள்வி:—** அன்பின் பித்துக்குட்டி — சினிமாவில் அரசியலை நுழைக்க நினைக்கிறார்களா? அரசியலில் சினிமா நுழைந்திருக்கிறதா?

**பதில்:—** இரண்டுமே ரயில் தண்டவாளம் போன்றவை. தமிழகத்திலே இரண்டும் பிரிக்க முடியாதவை. நமது நாட்டிலே நடிகர்கள் பெரிதாக அரசியலில் மிளிரவில்லை. மிளிரவிடப்படவுமில்லை. காமினி பொன்சேகா, சனத்குணதிலக, விஜய குமாரதுங்க, அவரது சகோதரன் ஜீவன் குமாரதுங்க என்று சிங்கள நடிகர்கள் பலர் அரசியலிலே குதித்தார்கள். அதில் விஜயகுமாரதுங்க மட்டும் துரிதமாக முன்னேறினார். ஆனால் அவர் கொல்லப்பட்டுவிட்டார். ஏனையவர்கள் ஏதோ இருந்தார்கள், இருக்கிறார்கள். தமிழிலே வந்த பாட்ஷாவை தற்போது ONE SHOT என்ற பெயரிலே ஒரு நடிகர் சிங்களப்படமாக எடுத்து — அதிலே அரசியல் வாதிகளை எல்லாம் போட்டுத் தாக்கியிருக்கிறார். படம் பிய்த்துக் கொண்டு ஒடுகிறது. அடுத்த தேர்தலிலே அவர் போட்டியிடுவார் என்று பேசிக் கொள்கிறார்கள். வென்றால் நமது நாட்டிலும் சினிமா அரசியலில் ஆட்சி செலுத்துகிறது என்பதை நம்பலாம்.

*தி.துர்க்காஜினி — ஜெயந்திநகர்.*

**கேள்வி:—** பித்துக்குட்டியே. கதைக்கும் போது 'கண்ணே மணியே', 'குட்டியே', 'செல்லமே' 'உன்னைவிட்டால் எனக்கு இந்த உலகத்தில் வேறு எதுவுமே இல்லை.' 'நீ தான் என் உயிர்' என்று சொல்லிச் சொல்லி காதலிக்கும் ஆண்கள் திருமணம் முடிந்த பின்னர் முற்றாக மாறிவிடுகிறார்களே! ஏன் பித்தா?

**பதில்:—** கண்ணு.. ஏராளமாக எதிர்பார்த்து, எக்கச்சக்கமான கனவுகளுடன் என்னவோ, ஏதோ, எப்படியோ என்ற எண்ணங்களுடன் இருக்கும் போது இப்படியான வார்த்தைகள் வந்து விழத்தான் செய்யும்... எல்லாம் முடிந்து... அட இவ்வளவுதானா... இதுக்குத்தானா இப்படி அலைந்தோம் என்ற எண்ணம் வந்தபின் மாற்றம் வரத்தான் செய்யும்... இது இயற்கை... இது ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் பொருந்தும்.



*கே.கஜன் பூநகரி.*

**கேள்வி:—** அன்பின் பித்தா! விஜய்யின் திருப்பாச்சி 200 நாட்கள் ஓடுமா? சிவகாசிக்குப் பின் விஜய் நடிக்கும் படத்தின் பெயர் என்ன?

**பதில்:—** 'சந்திரமுகி', 'அந்நியன்', 'அறிந்தும் அறியாமலே' என்று பல படங்கள் வெற்றியில் திளைக்கும் போது விஜய்யின் சச்சின் ஆட்டம் கண்டுவிட்டது. எனவே திருப்பாச்சியை 200 நாட்கள் ஓட்ட முயற்சி செய்கிறார்கள். கஷ்டம் தான். சிவகாசிக்குப்பிறகு விஜய் நடிக்கும் படம் 'மாஸ்'. முருகதாஸின் இயக்கத்தில் திரிஷா ஜோடி.....

*வ.தனுஷ், கொழும்புதுறை*

**கேள்வி:—** பித்தா கடவுள் உமக்கு முன்னால்தோன்றினால் நீர் அவரிடம் என்ன கேட்பீர்?

**பதில்:—** பலர் கடவுள் இல்லை என்று சொல்லி கும்பிடாமல், கோவில் குளம் போகாமல் திரிகிறார்களே...! அவர்களுக்கு முன்னால் ஒரு தடவை தோன்றி கடவுள் இருக்கிறார் என்ற உண்மையை அவர்கள் ஒத்துக்கொள்ளப் பண்ணும்படி கேட்பேன்.

*செ.தமிழின்பன் — உடையார்கட்டு*

**கேள்வி:—** பித்தா! இறந்தவனை உயிர்ப்பிக்கும் மருந்து எதிர்காலத்தில் கண்டு பிடிக்கப்படுமா?

**பதில்:—** எதிர் காலத்தில் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமே இல்லையே... இப்போது ஒவ்வொரு தேர்தல் நாளின்போதும் இறந்தவர்கள் எல்லாம் உயிர்த்து எழுந்து வந்து ஓட்டுப்போடுகிறார்களே! பிறகேன் எதிர் காலத்தை எதிர் பார்க்கிறீர்.



*அருள்தாசன் ஜென்சன் — மல்லாவி.*

**கேள்வி:—** பித்தா! விக்ரமின் அந்நியன் அவருக்கு வெற்றியைக் கொடுக்குமா?

**பதில்:—** அமோகமாக.. மூன்று வேடங்களில் கலக்கி இருக்கிறாரே....! அதிலும் சந்திரமுகியின் அமோக வசூலை அந்நியன் வந்து கட்டுப்படுத்தியது... ஆனால் இனி அந்நியனுக்குப் பிறகு பெரிய அளவில் எந்தப் படமும் வெளிவரும் சாத்தியம் இல்லை... அஜித்தின் 'கோட் பாதர்', விஜயின் 'சிவகாசி', கமலின் 'வேட்டையாடு விளையாடு' என்று ஏதாவது வந்தால் தான் அந்நியனின் வசூல் கட்டுப்படும். ஆனால் அவை எதுவும் இப்போது வரும் சாத்தியமில்லை. எனவே அந்நியன் தொடர்ந்து ஓட்டமாக ஓடும்....

*வெ.வைதேகி — யாழ்ப்பாணம்*

**கேள்வி:—** பித்தா பணம் பத்தும் செய்யும் என்கிறார்களே உண்மையா?

**பதில்:—** இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற சமயத்தில் அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் — பி.பி.சி. வானொலியில் உரையாற்றுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சேர்ச்சிலும் வானொலியில் பேசுவதற்காக புறப்பட்டுக் கொண்டிருந்தார். இருட்டான நேரம். தனது அலுவலகத்தைவிட்டு சேர்ச்சில் வெளியே வந்தார். குண்டுவீச்சினால் தெருவிளக்குகள் உடைந்து இருட்டாக இருந்தது. எதிரே ஒரு டாக்சி வருவதைக்கண்டு அதனை மறித்தார் சேர்ச்சில். டாக்சி நின்றது. டாக்சி டிரைவரிடம் சேர்ச்சில் "நான் அவசரமாக பி.பி.சி. வானொலி நிலையத்துக்குச் செல்ல வேண்டும்" என்றார். அதற்கு டாக்சி டிரைவர் "ஐயா நான் அவசரமாக வீட்டுக்குப் போகவேண்டும் இன்னும் சொற்ப நேரத்தில் எமது பிரதமர் சேர்ச்சில் வானொலியில் பேசப்போகிறார். அதனைக் கேட்க வேண்டும் எனவே என்னால் வரமுடியாது" என்றான்.

இதனைக் கேட்டு மகிழ்ந்த சேர்ச்சில் தன்மீதும், தனது பேச்சு மீதும் ஆர்வம் கொண்டுள்ள அந்த டாக்சி டிரைவருக்கு தனது கோட்பையிலிருந்து 10 பவுண்ஸ் நோட்டை எடுத்துக் கொடுத்தார்.

10 பவுண்ஸைக் கண்ட டாக்சி டிரைவர் அதனை வாங்கி சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு "சேர்.... நீங்கள் டாக்சியில் ஏறி உட்காருங்கள்.. சேர்ச்சில் றேடியோவில் பேசினால் என்ன பேசாவிட்டால் என்ன; நான் உங்களை றேடியோ நிலையத்தில் கொண்டு போய்விடுகிறேன்" என்றான். பணம் 10 ஐ மட்டுமல்ல பலதையும் செய்யும்.

*எஸ்.சசிலா — நீர்கொழும்பு.*


**கேள்வி:—** பித்தா! எல்லோரும் சந்தோஷமாக இருக்கும் போது எனக்குமட்டும் மாறிமாறி கவலைகள் வருகின்றனவே ஏன்?

**பதில்:—** சகோதரி தொடர்ந்து சந்தோஷமாக இருப்பவன் எவனும் உலகில் இல்லை. அதேபோல் தொடர்ந்து கவலைகளுடன் இருப்பவனும் உலகில் இல்லை. எல்லோருக்கும்இரண்டும் மாறி மாறித்தான் வரும். பணக்காரனையும், பெரிய பதவிகளிலே இருப்பவனையும், சினிமா நடிகர்களையும் பார்த்தால் ஏதோ வாழ்க்கையில் கஷ்டமே இல்லாதது போல் தெரியலாம். நாமும் அவர்களைப் போல் வந்தால் கஷ்டங்கள், கவலைகளில் இருந்து தப்பிவிடலாம் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் கேட்டால் தெரியும்அவர்கள் படும் பாடு. நாம் குடிசை வீட்டில் இருக்கிறோம். தடுக்கி விழுந்தால் சிராய்ப்பு ஏற்படும் அல்லது உழுக்கு ஏற்படும். ஆனால் மாடி வீட்டிலே இருப்பவர்கள் தடுக்கி விழுந்தால் எலும்பு முறிந்து போகும் அல்லது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டுவிடும். ஒவ்வொரு மனிதனும் தான் தான் புத்திசாலி தான் தான் யோக்கியன் என்று நினைப்பதுபோல் உலகிலே அதிகமாக கஷ்டப்படுபவர்களும் தான்தான் கஷ்டப்படுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கஷ்டமும் கவலையும் உமக்கு மட்டுமல்ல.. எல்லோருக்கும் பொது. உமக்கு மற்றவர்களைப் பார்த்தால் அவர்கள் எப்படி சந்தோஷமாக இருப்பது போல் தெரிகிறதோ. அதேபோல்தான் மற்றவர்களுக்கும் உம்மைப் பார்த்தால் நீர் சந்தோஷமாக இருப்பது போல் தெரியும். உமது வாழ்க்கையில் சந்தோஷம் எங்கோ ஒளிந்திருக்கிறது. கவலையை விட்டு தள்ளிட்டு சந்தோஷத்தை தேடும். கிடைக்கும்.... முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

*செ.அமலன் — வரணி*

**கேள்வி:—** பித்தா உலகத்திலேயே பயங்கரமான ஆயுதம் எது பித்தா?

**பதில்:—** பெண்களின் கண்ணீர்.



*கே.பார்வதி — [illegible]*

**கேள்வி:—** பித்தா உங்களை [illegible] குறை கூறிப்பேசினால் என்ன செய்வீர்கள்— கவலைப்படுவீர்களா?

**பதில்:—** இல்லை அது உண்மைதானா என்று யோசிப்பேன். உண்மை என்றால் திருத்திக் கொள்வேன். பொய் என்றால் சிரித்துக் கொண்டே போய்விடுவேன்.

**பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—**

பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-



பித்தன் பதில்கள்
'சுடர் ஒளி வாரஇதழ்'
85, ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14

# பெண்ணின் கர்ப்பகாலம்

கர்ப்பம் தரித்திருப்பதற்கு அடையாளமாக பெண்ணில் உடலில் சில மாற்றங்கள் தோன்றுவதைப் போலவே, கர்ப்ப காலத்திலும் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக எடை அதிகரித்தல், மார்பகம் பெரிதாகுதல், கருப்பை பெரிதாவது, இரத்தத்தில் கூட்டுப்பொருட்கள் மிகைப்பு மாற்றம், இரத்த அளவு அதிகரித்தல், நாளமில்லாத சுரப்பிகள் அதிகமாக பணியாற்றுவதால் தோன்றும் விளைவுகள் என பல்வேறு மாற்றங்களைக் கூறலாம் என்கிறார் பிரபல இந்திய குழந்தையின்மை சிகிச்சை நிபுணர் ஒருவர்.

அவர் மேலும் கூறியதாவது:


கர்ப்ப காலத்தில் பெண்ணின் மார்பகங்களில் தோன்றும் மாற்றங்கள் வாழ்நாள் முழுவதும் நீடிக்கக் கூடியவை. கருத்தரிக்கும் வரை பெண்ணின் மார்பகங்கள் முழு வளர்ச்சி அடைந்திருக்கா. முதல் பிரசவமாக இருந்தால் மார்பகத்திலுள்ள மொத்த நாளங்களுமே விரிவடையும்.

இரத்த ஓட்டம் அதிகரிப்பதன் காரணமாக கர்ப்பகாலத்தின் 2 ஆவது மற்றும் 3 ஆவது மாதவாக்கில் மார்பகத்தில் இருந்து பழுப்பு நிறத்தில் சுரப்பு ஏற்படும். மார்பகத்தின் அடிப்பகுதியில் உள்ள நரம்புகள் புடைத்துக் காணப்படும். மார்பகக் காம்பு மற்றும்அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிறமாற்றம் ஏற்படும்.

ஹோமோன்களின் மாற்றங்கள் காரணமாக மார்பகத்தில் பால் சுரக்க ஆரம்பிக்கிறது.

குழந்தை பிறந்த முதல் 3 அல்லது 4 நாட்களுக்கு சீம்பால் வரும். இந்த பாலை குழந்தை குடித்து, வற்றச் செய்யாவிட்டால் மார்பகம் வீங்கி வலிக்கும். குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டும் நிலையில் தாய் இல்லாவிட்டால் கைகளால் பீய்ச்சி அந்த சீம்பாலை வெளியே எடுத்துவிட வேண்டும்.

# தமிழ்த் தலைவர்களின் பலவீனத்தை நன்கு பயன்படுத்திக்கொண்ட டி.எஸ்!


டி.எஸ்.சேனநாயக்கா

இலங்கைத் தமிழரும் மலையகத் தமிழரும் இரண்டு வெவ்வேறு பூகோள ரீதியான பகுதிகளில் வாழ்கிறார்கள். வரலாற்றுச் சமூகக் காரணிகள் - முக்கியமாக பொருளாதார மற்றும் தொழில் நிலைமைகள் - இரு பிரிவினரையும் சமூக ஒன்றிணைப்புக்கு அல்லது வேறுவகையான ஒன்று கலப்புக்கு இடம்தரவில்லை.

மேலும் இந்த இரு பிரிவினரும் ஒன்று சேருவது காலனித்துவ ஆட்சியாளர்களுக்கோ ஐரோப்பிய தோட்டத்துரைமாருக்கோ மகிழ்ச்சி தரும் விடயமாகவும் அப்போது இருக்கவில்லை. இதைவிட மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் விடயத்தில் இலங்கைத் தமிழர்கள் தம்மை உயர் மட்டத்தில் வைத்துப் பெருமைப்பட்டுக் கொள்வது வழக்கமாகவிருந்து வந்தது இதனை மலையகத்தவர்கள் எப்பொழுதும் எதிர்த்து வந்துள்ளார்கள்.

இதில் மிகவும் மோசமாக நடந்து கொண்டவர்கள் யார் என்றால் தமிழ் தலைவர்கள் தான். அவர்கள் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளை ஒருபோதும் கருத்தில் கொள்ளவில்லை. மலையகத் தமிழர்களின் வாழ்வியல், தொழில் செய்யும் சூழ் நிலைகள் போன்றவற்றை வெளிப்படுத்தி உதவ அவர்கள் ஒருபோதும் முன்வரவில்லை. அவ்வாறு எவராவது செய்தால் பின்னர் சந்தர்ப்பம் வரும்போது அவர்களைக் காட்டிக் கொடுப்பதாகவே இருந்துள்ளது. எந்தப் பிரச்சினையிலும் இந்த இரு பிரிவினரும் பொதுத் தன்மையைப் பேண

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம் பெற்ற முக்கிய அரசியல்நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)



தற்போது 96 வயதை எட்டிய நிலையில் கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

முன்வரவில்லை.

எனவே, மலையகத்தமிழர்கள் இலங்கைத் தமிழரைச் சந்தேகக் கண்கொண்டே பார்க்கத் தலைப்பட்டனர். இலங்கைத் தமிழர்களின் இந்தப் போக்குத்தான் இலங்கை - இந்திய காங்கிரஸ் உதயமாவதற்கு வழிசமைத்த காரணங்களில் ஒன்று எனலாம்.

இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் ஆலோசனையின் பேரில் உதயமான இந்த அமைப்பு மலையகத்தோட்டத் தமிழர்களின் அதிகாரப்பூர்வ குரலாக அமைந்தது.

## தமிழ்க்காங்கிரஸ் வாக்குறுதி

சுதந்திரம் கிடைப்பதற்குச் சற்றுமுன்னதாக இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்த தமிழ்க் காங்கிரஸ், மலையகத் தமிழருக்கு பெரிய நம்பிக்கையூட்டும் விதத்தில் தனித்துவமான முறையில் வாக்குறுதி ஒன்றை அளித்தது. தமிழ்க் காங்கிரஸின் தலைவராகவிருந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் எழுத்து மூலம் இலங்கை - இந்திய காங்கிரஸ் தலைவர்களுக்கு இந்த வாக்குறுதியை வழங்கினார். "மலையகத் தோட்டத் தொழிலாளர்களான தமிழர்கள் அல்லது அவர்களின் நலன்கள் பாதிக்கப் படுமானால் அவர்களுடன் நின்று அவர்களின் நலனுக்காகப் பாடுபடுவேன்" என்று அவர் வாக்களித்தார்.

இந்த இரு பிரிவுத் தமிழர்களுக்கு மிடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கை இதுவாகும்.


ஜீ.ஜீ.பொன்னம்பலம்

ஜீ.ஜீ.பொன்னம்பலம் அக்காலத்தில் இலங்கைத் தமிழர்களின் பிரபலமிக்க தலைவராக விளங்கினார். தமிழர்களின் மத்தியில் முடிசூடா மன்னராக அவர் மதிக்கப்பட்ட காலம் அது.

அவருடைய சக்திமிக்க குரலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தொழிற் சங்கப் பலமும் சேர்ந்திருந்தால் டி.எஸ். சேனநாயக்காவின் ஐ.தே.க. அரசை ஆட்டம்காண வைத்திருக்க முடியும். தமிழர்களுக்கு எதிராக ஐ.தே.க. ஆட்சியாளர்கள் எடுத்த நடவடிக்கைகளையும் தடுத்திருக்க முடியும்.

## தமிழரின் தலைவிதி

ஆனால், தமிழர்களின் தலைவிதியை என்ன என்பது? அந்த எதிர்பார்ப்பை, பதவி ஆசையானது தவிடுபொடியாக்கிவிட்டது. டி.எஸ்.சேனநாயக்கா மிகவும் புத்திநுட்பமுள்ள அரசியல்வாதி. தனது எதிரிகள் ஒன்றுசேர்ந்து தங்கள் பலத்தை மேம்படுத்திக்கொள்ளும் அளவுக்கு காலம் தாழ்த்தும் ஆள் அல்ல அவர். அவரும் அவரது ஆலோசகர்களும் அரசியலில் மிகவும் நேர்த்தியாக அடிபட்ட ஆசாமிகள். தமிழ்த் தலைவர்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொள்ள அவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள்.

சுந்தரலிங்கம் அமைச்சரவையிலிருந்து விலகிச்சென்றதையடுத்து டி.எஸ். சேனநாயக்கா, ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை தம் பக்கம் இழுப்பதற்கான முயற்சிகளில் இறங்கினர்.


இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்கும் வரையில் மட்டுமே ஜீ.ஜீ.பொன்னம்பலம் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தார். பின்னர் டி.எஸ். சேனநாயக்காவினால் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டு கைத்தொழில் மீன்பிடி அமைச்சராகப் பதவி வழங்கப்பட்டார்.

## மலையக மக்களுக்கு ஜீ.ஜீ.செய்த துரோகத்துக்கு 30 வருடங்களின் பின்பு தொண்டா பதில் அளிப்பு

இந்தியர் - பாகிஸ்தானியர் குடியிருப்பாளர் பிரஜாவுரிமைச் சட்டம் வாக்களிப்புக்கு வந்த போது ஜீ.ஜீ. பொன்னம்பலம் அரசாங்கத்தோடு சேர்ந்து வாக்களித்தார்.

அரசாங்கத்தில் அவர் சேர்ந்ததன் காரணமாக தமிழ்க் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. ஆனால், அவர் அதனால் குழப்பமடையவில்லை.

மலையகத்தில் பத்து லட்சத்துக்கு அதிகமான தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்தெடுத்து அவர்களை நிர்க்கதிக்குள்ளாக்கிய இலங்கை நாடாளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் திருத்த மசோதாவுக்கு (The Ceylon Parliamentary Elections Order in Council Amendment Bill) ஆதரவாகவும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் வாக்களித்தார். இது மிகவும் வெறுப்புக்குரிய ஒரு செயலாகும். சிங்களவர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் நம்பிக்கை விடயத்தில் தமிழர்களுக்கு வரிசையாக விழுந்த மூன்றாவது அடியாகும் இது. அமைச்சர் பதவி மூலம் பொன்னம்பலத்தின் சக்தி மிக்க குரலுக்கு வாய்ப்பூட்டுப் போடப்பட்டது.




ஆனால், தனது நிலைப்பாட்டை அவர் நியாயப்படுத்தி யாழ்ப்பாணத்தில் கூட்டங்களில் பேசினார்.

"எதிர்க்கட்சியில் சதாகாலமும் அமர்ந்திருப்பதில் பிரயோசனமில்லை. அரசுடன் ஒத்துழைப்பதன் மூலமே தமிழர்கள் எதையாகுதல் பெற்றுக்கொள்ள முடியும்" என்று அவர் கருத்துக் கூறினார்.


ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்கு துணை போனதற்குப் பிரதி உபகாரமாக டி.எஸ். சேனநாயக்கா வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மூன்று தொழிற்சாலைகளை அமைக்க உதவினார்.

என்ன நேரம் இது! 10 லட்சத்துக்குமதிகமான மக்களை மூன்று தொழிற்சாலைகளுக்கு ஈடாக மதிப்பதானது என்னவிதமான தலைமைத்துவம்?

பத்து லட்சம் பேருக்கு மேற்பட்ட பலவீனமானவர்களுக்கு ஒரு வாக்குறுதியளித்து 'உங்களோடு நிற்பேன். உங்களைப் பாதுகாப்பேன்' என்று கூறிவிட்டு அவர்கள் துன்பத்திலும் ஆபத்திலும் சிக்கியுள்ள நேரத்தில் அவர்களைக் கைவிட்டு துரோக மிழைப்பது என்பது அரசியல் சந்தர்ப்பவாதத்துக்கும் நேர்மையற்ற தன்மைக்கும் ஓர் எடுத்துக்காட்டு. இது இலங்கை தமிழ்த் தலைவர்கள் மீது மலையக மக்கள் வைத்திருந்த பாரம்பரியமான நம்பிக்கையை சிதறடிக்கவே உதவியது.

## மலையகத்தவரின் அதேவிதமான பதில்

மலையக மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட துரோகத்துக்கு பதிலளிப்பதற்கு 30 ஆண்டுகாலம். காத்திருந்தார்கள். 1977 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் அவர்களின் தலைவர்கள் அதேவிதமாக இலங்கைத் தமிழருக்குப் பதிலளித்தார்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஒரேமாதிரியானவயாக இருந்தன.

தமிழரசுக் கட்சியும் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் சேர்ந்து அமைத்த தமிழர் ஐக்கிய விடு தலை முன்னணி (TULF) எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ். தொண்டமான் ஆகியவர்களை கூட்டுத் தலைவர்களாக நியமித்தது. இது இரு பிரிவுத் தமிழர்களுக்குமிடையில் ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கான இன்னொரு முயற்சியாகும். முன்னர் போலவே இதிலும் அந்த பலவீனம் தெரிந்தது. இதன் நோக்கமும் மலையக மக்களின் தொழில் சங்கப் பலத்தை இலங்கைத் தமிழர்கள் பயன்படுத்திக் கொள்வதாகவே இருந்தது.

முன்னர் இப்படியான ஒரு ஒற்றுமை முயற்சி உருவானபோது பொன்னம்பலத்தை அமைச்சராக்கியதன் மூலம் டி.எஸ். சேனநாயக்கா முறியடித்தார். அது போலவே இந்த முறை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எஸ். தொண்டமானை அமைச்சரவையில் சேர்த்துக் கிராமிய தொழில்துறை அமைச்சராக்கியதன் மூலம் முறியடித்தார். இந்த முறை ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் முன் உதாரணத்தை தொண்டமான் பின்பற்றினார். இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழர்கள் ஒன்று சேர்வதைத் தடுக்க அமைச்சர் பதவி, பேரம் பேசும் பொருளாகப் பயன் படுத்தப் பட்டுள்ளது.

### தமிழில் - 'பேனா'

சிங்களவர்களுடன் ஒத்துப்போவதன் மூலமே தமது மக்களுக்கு நன்மைசெய்ய முடியும் என்று ஒரு புதிய சிந்தனையை ஜீ.ஜீ. பொன்னம்பலம் அன்று முன் வைத்தது போலவே தொண்டமானும் தமது முதல் கடமை மலையக மக்களைக் காப்பாற்றுவதே என்று கூறி தனது துரோகத்துக்கு நியாயத்தைக் கற்பித்திருந்தார். (தொடரும்)


தொண்டமான்

# இணைந்த உறவு



மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் விவியன் ரிச்சர்ட்ஸ் பற்றி அறியாத கிரிக்கெட் ரசிகர்கள் இருக்க முடியாது. 1980ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தனது அதிரடி ஆட்டம் மூலம் இந்த அணிக்கு பல வெற்றிகளைத் தேடி தந்தவர் விவியன்.

கிரிக்கெட் மைதானத்தில் சலனமின்றி ஆடும் திறமை பெற்ற அவரால் மைதானத்துக்கு வெளியே இருக்க முடியவில்லை. இந்திய சுற்றுப்பயணத்தின் போது முன்னாள் இந்தி நடிகை நீனா குப்தாவின் காதல் வலையில் வீழ்ந்தார்.

ரிச்சட்சன் – நீனாவின் உறவுக்கு பரிசாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. ரிச்சட்சனின் ஜாடை, சுருண்ட தலைமுடி, நீனாவின் சிவந்தமேனி அழகுடன் பிறந்த இக்குழந்தைக்கு 'மசாபா' என்ற ஆபிரிக்க ராணியின் பெயரை சூட்டினார்கள்.

ஏற்கனவே ரிச்சட்சன் திருமணமாகி குழந்தைகளுடன் இருந்தபோதிலும் நீனாவின் உறவையும் தொடர்ந்தார். அடிக்கடி மும்பை வந்து நீனாவையும், குழந்தையையும் பார்த்துச் சென்றார்.

இந்த நிலையில் ரிச்சட்சனின் மகன் மாலி, (முதல் மனைவியின் பிள்ளை) தனது தந்தையின் இந்தியத் தொடர்பு பற்றி அறிந்தார். இதற்கிடையில் ரிச்சட்சன் தனது மகனுடன் மும்பைக்கு வந்தார். அப்போது சகோதரன் மாலியைச் சந்திக்க மசாபா விரும்பினார். இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்ய முன்வந்தார் முன்னணி பாடகி ஆஷா போஸ்லே.

அவரது முயற்சியின் பேரில் மசாபா – மாலி ஆகிய இருவரும் மும்பை கிரிக்கெட் கழகத்தில் சந்தித்துக் கொண்டனர். சகோதரர் – சகோதரி இருவரும் முதலில் தயக்கத்துடன் பேச்சைத் தொடங்கினார்கள். பின்னர் அவர்கள் நன்றாக பேசி அரட்டை அடிக்கத் தொடங்கிவிட்டனர். சகோதர பாசத்துடன் இருவரும் பழகி வருவதன் மூலம் இரண்டு குடும்பங்களும் விரைவில் இணையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





அமெரிக்காவின் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் பிரபல டெனிஸ் சகோதரிகளான செரீனா, வீனஸ் ஆகியோர் 'ஏ.பி.சி குடும்பம்' என்ற நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இதன்போது இருவரும் தமது செல்லப் பிராணியான ஜாக்கி என்ற நாய்க் குட்டியுடன் 'போஸ்' கொடுப்பதை படத்தில் காண்க

# சுதந்திரமாய் ஒரு பயணம்

தற்போது மகளிர் டெனிஸ் போட்டியில் முதல்நிலை ஆட்டக்காரராக விளங்கி வருபவர் அமெரிக்க வீராங்கனை லிண்ட்சே டேவன் போர்ட்.

அமெரிக்கப் பகிரங்கப் போட்டிக்குத் தயாராகி வரும் இந்த வீராங்கனை சமீபத்தில் திடீரென்று யாருக்கும் தெரியாமல் தனது ஆண் நண்பர் டிரேய்சி பாஸ்டினுடன் சேர்ந்து 'ஷொப்பிங்' சென்றார். அப்போது அவர், தான் ஒரு பிரபலமான வீராங்கனை என்று யாரிடமும் வெளிப்படுத்தவில்லை. சாதாரணப் பெண் போலவே வெளியே கடை வீதிக்குச் சென்று வந்தார்.



இது குறித்து டேவன்போர்டின் நண்பர் கூறுகையில்—

''அவர் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காகவே 'ஷொப்பிங்' சென்றார். தங்கப் பாதணிகள் வாங்கப் போகவில்லை.'' என்று சிரித்துக் கொண்டே கூறினார். (சமீபத்தில் பிரபல டெனிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா தங்கப் பாதணிகள் வாங்கினார். அதை கிண்டல் பண்ணும் விதமாக இவ்வாறு அவர் கூறினார்.)

மேலும் அவர் கூறுகையில் — ''டேவன் போர்ட் தன்னை யாரிடமும் யாரென்று அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. கடுமையான பாதுகாப்புகளையும் மீறி சுதந்திரமாக கடைவீதிக்குச் சென்றார். அவர் ஒரு பிரபல டெனிஸ் வீராங்கனை என்று எவராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. சுதந்திரமான அப்பயணத்தை அவர் மறக்கவே மாட்டார்'' என்றார்.

அமெரிக்காவில் லக்னோ பீச் அருகே வசித்து வரும் டேவன்போர்ட் மிகவும் எளிமையான – அமைதியான வாழ்க்கையே வாழ்ந்து வருகிறார். அதனால் தான் அவர் அப்படி நடந்து கொண்டார். அவருக்கு ஆடம்பரம் பிடிக்காது என்றும் கூறப்படுகிறது.

# இன்னும் முன்னேற வேண்டியுள்ளது

## கூறுகிறார் குமார் சங்கக்கார



'கில்கிறிஸ்ட்டை 'ரோல் மொடலா'கக் கொண்டு விக்கெட்காப்பு, துடுப்பாட்டம் என இரண்டிலும் ஒரே நேரத்தில் கலக்கிவருகிறார் இலங்கையின் விக்கெட் காப்பாளர் சங்கக்கார.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்: – ''மனவலிமை, உடல் வலிமை இரண்டையும் ஒரே நேரத்தில் சிறப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் கிரிக்கெட்டில் தாக்குப்பிடிக்க முடியும். இரண்டையும் வளப்படுத்திக் கொண்டால் பிறகு கிரிக்கெட்டில் சிறப்பான திறமையை வெளிப்படுத்தலாம்.

தலை, கை என உடம்பை சரியான நிலையில் வைத்துக்கொண்டு பந்துவரும் திசைக்கு ஏற்ப நம் உடலை துல்லியமாக நகர்த்தினால் தான் விக்கெட் காப்பில் ஜொலிக்க முடியும். கடந்த இரண்டு வருடங்களாக என் விளையாட்டில் நிறைய முன்னேற்றம் அமைந்திருக்கிறது. இன்னும் முன்னேற வேண்டியிருக்கிறது'' –என்றார்.

விளையாட்டுச் செய்திகள்!
ஷெனாயா



கனடாவின் மொன்றியல் நகரில் நடந்த உலக நீச்சல் சம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 3 மீற்றர் 'டைவிங்' நீச்சலில் அமெரிக்க வீராங்கனை செல்ஷியா டேவிஸ் 'டைவ்' அடித்த போது நிலைதடுமாறி அவரது முகம் 'டைவிங்' பலகையில் அடிபடுவதை படத்தில் காண்க.

# டெண்டுல்கரால் இன்னும் சாதிக்க முடியும் – றொபின்சிங்



இந்தியாவின் முன்னணி கிரிக்கெட் வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்து வருபவர் சச்சின் டெண்டுல்கர். ஆனால், இவரின் சமீபகால ஆட்டங்கள் மெச்சும்படியாக இல்லை. முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ள இவர், இலங்கையில் நடைபெறவுள்ள முத்தரப்புக் கிரிக்கெட் போட்டியில் விளையாடும் இந்திய அணியில் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

டெண்டுல்கர் குறித்து இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் றொபின்சிங் கூறும் போது:–

''தற்போது டெண்டுல்கருக்கு 32 வயது தான் ஆகிறது. லாராவுக்கு 36 வயதாகிவிட்டது. வயது நிரம்பிய லாராவே நன்றாக விளையாடும்போது டெண்டுல்கரால் இன்னும் பல ஆண்டுகள் சிறப்பாக விளையாட முடியும். அவருக்கு ஓய்வு கொடுக்கத் தேவையில்லை. அவரால் இன்னும் சாதிக்கமுடியும்'' என்று கூறியுள்ளார்.



கலை வாழ்வில் 40 ஆண்டுகளை நிறைவுசெய்து சமூகப் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் திருமறைக் கலாமன்றம், நாடுதழுவிய ரீதியில் நடத்தும் 'கலைச் சங்கமம்' என்னும் பல்கலைக் கதம்ப நிகழ்ச்சி எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளில் யாழ். திருமறைக் கலாமன்ற திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது. அதில் இடம்பெறும் காட்சிகளையே படங்களில் காண்கிறீர்கள்.

## கால், கை அழகை பராமரிக்க..

அழகு இல்லா விட்டால் பெண்கள் ரொம்பத்தான் கவலைப் படுகிறார்கள். வறண்ட சருமம் உடையவர் களுக்கான அழகுப் பிரச்சினை சற்று அதிகமாக இருக்கிறது.

வறண்ட சருமம் கொண்டவர் களுக்கு கை கால், சருமம் அதிக அளவு வறண்டு விடுகிறது. வறண்ட சருமம் பிறவியிலேயே ஏற்படுகிறது. பிறந்த முதல் மூன்று மாதத்திலே சருமம் வறண்டு விடும். அதனால் வறண்ட சருமத்தை முழுமையாக போக்கிவிட முடியாது.


பிறவியிலே சருமம் நன்றாக இருந்தாலும் பிற்காலத்தில் வேறு சில காரணங்களால் சருமம் வறண்டு போய் விடக் கூடும். அதற்கு மருந்தால் ஏற்படும் ஒவ்வாமை



யும், சத்து ணவுக் குறை வும் காரண மாக அமை கிறது. சில ருக்கு எய்ட்ஸ், புற்றுநோய் இருந்தாலும், சுரப்பிகளில் ஏற்படும் பாதிப்பாலும் சருமம் வறண்டு போய்விடுகிறது.

முதலில் சருமம் எதற்காக வறண்டு போய் விடுகிறது என்ற காரணத்தை கண்டுபிடிக்க வேண்டும். மருந்தால் ஏற்பட்ட ஒவ்வாமை என்றால் குணப்படுத்தி விடலாம். சத்துணவு குறைவால் ஏற்பட்டிருந்தால் நல்ல உணவு பழக்கம் மூலம் அதனை சரி செய்யலாம். நோய்களால் சருமம் வறண்டு போய் இருந்தால் அந்த நோய்களுக்கு கொடுக்கும் சிகிச்சை மூலம் அதனைச் சரிசெய்யலாம்






# யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயம்

## ஊரவர் இரத்தத்தை உறிஞ்சுகிறது

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள உயர்பாதுகாப்பு வலயம் (High Security Zone) 190 சதுர கிலோமீட்டர் அல்லது குடாநாட்டின் நிரப்பரப்பில் 15 சதவீதத்தை அப்பாவி மக்களிடம் இருந்து அபகரித்து வைத்துள்ளது. அமைதி நிலவிய காலத்தில் 30, 386 குடும்பங்களைக் கொண்டிருந்த இந்தப் பகுதியில் இப்போது 286 குடும்பங்கள் மட்டுமே வசிக்கின்றன.

இராணுவ ஆக்கிரமிப்பின் காரணமாக பாதுகாப்பு வலயத்திலுள்ள தமது சொந்த வீட்டை விட்டு வெளியேறி தற்போது யாழ்ப்பாண நகரிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள இருபாலையில் வசித்து வரும் கண்ணன் என்பவர் தனது அவல நிலைபற்றி இப்படிக் கூறுகிறார்.

"நாங்கள் தனிப்பட்டவருக்குச் சொந்தமான காணி ஒன்றில் இப்போது வசித்து வருகிறோம். கடந்த வாரம் காணிச் சொந்தக்காரர் எம்மிடம் வந்து அந்தக் காணியை விட்டு வெளியேறும்படியும், தவறினால் தான் வழக்குத் தொடரப்போவதாகவும் கூறினார். எங்களுடைய சொந்த நிலங்கள் யாவற்றையும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவம் கைப்பற்றி வைத்துள்ளது. நாங்கள் எங்கே போவது?" இப்படி அவர் கேள்வி எழுப்புகின்றார்.

யாழ்ப்பாணத்தில் இப்போது ஓரளவு அமைதி நிலவுகின்றபோதும் இடம்பெயர்ந்த மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தைக் கண்காணித்துவரும் சுமார் 45000 இராணுவத் துருப்புக்கள் இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளையும், அவர்களது உடமைகளையும் பாவித்துவருகின்றன.

பலவீடுகள் கைவிடப்பட்டநிலையில் அனாதரவாக இந்தப் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கின்றன. ஆனால், மனித குடியிருப்புக்கு ஏற்றவகையில் அவை இல்லை. புதர்களும், பற்றைகளும் அவற்றை மூடியுள்ளன. இந்த வீடுகளில் குடியிருந்தவர்களோ இருக்க இடமின்றித் தமது குழந்தைகளுடன் தமக்கான இருப்பிடங்களைத் தேடி அலைகின்றார்கள்.

பளை, காங்கேசன்துறை, மயிலிட்டி, தெல்லிப்பளை, கீரிமலை போன்ற இடங்களை உள்ளடக்கிய வலிகாமம் வடக்கைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் இன்னும் அகதி முகாம்களே தஞ்சமென வாழ்ந்து வருகின்றனர். வலிகாமம் வடக்கிலுள்ள 25000வீடுகளில் 18000 வீடுகள் உயர் பாதுகாப்பு வலையத்தால் வலைவீசிப்பிடிக்கப்பட்டுள்ளன.

இந்த வலையத்தினுள் வாழ்ந்துவந்த சுமார் 8,552 குடும்பங்கள் இப்போது தமது நண்பர்களுடன் அல்லது உறவினர்களுடன் வாழ்ந்து வருகின்றன. 1780 குடும்பங்கள் அகதி முகாம்களில் அல்லற்படுகின்றன. ஏனையோர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிக்குச் சென்று விட்டார்கள்.

வலிகாமம் வடக்கிலுள்ள நிலம் அனைத்தும் செழிப்புவாய்ந்தவை மட்டுமன்றி விவசாயத்துக்கும் ஏற்றவையாகும். இங்கு வசித்துவந்த மக்களில் அனேகர் விவசாயிகள். உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக 320 ஹெக்டயர் நெல்வயல்கள், 1007 ஹெக்டயர் உலர் உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்ட தோட்டங்கள், 196 ஹெக்டேயர் பனம் காணிகள், 20 ஹெக்டேயர் தென்னந்தோட்டங்கள் ஆகியன கைவிடப்பட்டுள்ளன. இவற்றில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் அனைவரும் இப்போது தொழிலின்றி அலைகிறார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மிகப் பெரும் தொழிற்சாலையான சீமெந்துத் தொழிற்சாலை, மாவிட்டபுரம் அல்மீனியத் தொழிற்சாலை, வாளித் தொழிற்சாலை, வசாவிளான் பழச்சாறுத் தொழிற்சாலை ஆகியனவும் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக மூடப்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமது தொழில்களை இழந்து தவிக்கின்றனர்.

சாவகச்சேரியில் 2500 ஹெக்டேயர் விவசாய நிலங்கள், இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. 600 ஹெக்டயர் நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கின்றன. மேலும் 300 ஹெக்டேயர் நிலங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதால் அவை பாவனைக்குதவாத தரிசு நிலங்களாகக் காணப்படுகின்றன.

கைதடியில் உள்ள 1000 ஹெக்டயர் நிலங்கள் விவசாயச் செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. அவற்றில் 300 ஹெக்டயரில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருப்பதால் அவை வெறுமனே விடப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையில் இயங்கிவந்த மிகப் பெரிய கல்லூரியான நடேஸ்வராக் கல்லூரி கந்தரோடையிலுள்ள சிறிய வீடுகளில் இப்போது இயங்கி வருகிறது. பிரச்சினைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் 1049 மாணவர்கள் நடேஸ்வராக்கல்லூரியில் கல்விகற்று வந்தனர். இப்போது இக் கல்லூரியில் உள்ள மாணவர் தொகை 75 மட்டுமே.

மாணவர் பற்றாக்குறை காரணமாக நடேஸ்வராக்கல்லூரியை மூடிவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த 46 பாடசாலைகளில் 29 பாடசாலைகள் வலையத்துக்கு வெளியே இயங்கி வந்தன. அவற்றில் 16 பாடசாலைகள் மூடப்பட. மிகுதியாயுள்ள 13 பாடசாலைகள் இப்போது உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே இயங்கிவருகின்றன.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.30 | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | சங்கீதமேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | மேஸ்க் கார்டுன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | ஹோலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | உங்கள் சொய்ஸ் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பாட்டுக்கு பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டொப் 10 மூவீஸ் |
| 11.00 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | இப்படிக்கு நீங்கள் | வர்த்தக உலகம் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சமையல் | மங்கையர் தெரிவு | மங்கை | றிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | றிலாக்ஸ் டைம் | ஸ்டார்ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (சித்திரம்) | (கிளசிக்) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | சுப்பர் 10 |
| 4.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் | நினைவுகள் |
| 5.00 | கிய பியர்ஸ் | கி—மான் | கிட்ஸ் சூன் | தமிழ் கார்ட்டூன் | என்றும் கலாட்டா | நகைச் சுவை விருந்து | ஸ்டார்நைட் (சிங்கபூர்) |
| 5.30 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் சமையல் | சுப்பர் சீன்ஸ் | நினைவுகள் | ருத்ர வீணை | ஸ்டார்நைட் (சிங்கபூர்) |
| 6.00 | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | பாடல்கள் | இசைத்தென்றல் | அறிவு | மின்னல் |
| 6.30 | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் திமி தக்க தா | 6.55 முதன்மைச் செய்திகள் மின்னல் |
| 7.00 | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | ஊரும் உலகும் | வேலன் |
| 7.30 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | எஸ்.எம்.எஸ் ஷோ | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ராஜ ராஜேஸ்வரி | இளைய கானம் |

# பிச்சைக்காரன் சாப்பாட்டில் பங்கு கேட்பதா?

## மலையகக் கண்ணோட்டம்



இரா. புத்திரசிகாமணி

இருநூறு வருடங்களுக்கு மேலான சரித்திரம் கொண்ட தோட்டத் தொழிலாளர்களின் அவல வாழ்க்கை நிலைக்காக எந்த ஒரு மாற்றுச் சமூகமும் குரல் எழுப்பியதாக சரித்திரம் இல்லை.

மலையக மக்களுக்கு இன்னும் கூட சொந்தமான வீடுகள் இல்லை. விவசாயம் செய்ய காணிகள் இல்லை. அத்தியாவசிய தேவையான அடிப்படை சுகாதார வசதிகள் இல்லை. பிள்ளைகள் படிப்பதற்குப் போதியளவு பாடசாலைகள் இல்லை. பாடசாலைகள் இருந்தால் அங்கே தேவையான ஆசிரியர்கள் இல்லை.

ஆசிரியர்களே இருந்தாலும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களைப் படிப்பிப்பதற்கான ஆசிரியர்களும் பட்டதாரி ஆசிரியர்களும் இல்லை.

ஏனைய சமூகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மலையக சமுதாயம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றது.

காலம் காலமாக நாடாளுமன்றத்தில் அமைச்சர்களாகவும், உறுப்பினர்களாகவும் இருந்துவரும் முஸ்லிம் சமூகத்தினர் மலையக மக்களின் அவல வாழ்க்கை நிலையைப் பற்றியோ, அல்லது அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றியோ ஒரு வார்த்தையாவது பேசியதாகத் தெரியவில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். பாதைகளை அமைக்க வேண்டும், பாடசாலைகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும், மலையகப் பாடசாலைகளுக்கு அவசியமான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று எந்த ஒரு முஸ்லிம் அரசியல்வாதியாவது பேசியதாகவும் இல்லை.

காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்தபோது, அவரது அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் விசேட சலுகை அடிப்படையில் (குறைந்த கல்வித் தரத்துடன்) முஸ்லிம் இளைஞர், யுவதிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கினார். அன்று கல்வித்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த முஸ்லிம் சமூகம் இன்று ஒளிவிட்டுப் பிரகாசிப்பதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்.

இவர் மத்திய மலைநாட்டைப்பிறப்பிடமாகக் கொண்டவர். ஆனால், இதே சலுகை அடிப்படையில் தோட்டப்புற தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கினாரா என்பது அவருக்கே வெளிச்சம்.



பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் நியமங்னகளை வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்தும்படியும் அவற்றை மலையக தமிழ் இளைஞர், யுவதிகளுக்கே வழங்கும் படியும் வலியுறுத்தி பொகவந்தலாவையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.

அதோடு நின்று விடவில்லை. அதனை தொடர்ந்து வந்த அரசுகளிலும் பல முஸ்லிம் அமைச்சர்கள் அமைச்சு நாட்காலிகளை அலங்கரித்துக் கொண்டிருந்தனர்.

இவர்களுடைய காலங்களில் இவர்களின் கீழ் இருந்த துறைமுகம், ஊடகம் என்பவற்றில் வழங்கப்பட்ட நியமனங்களைச் சற்று பின்நோக்கிப் பாருங்கள்.

இலங்கை வானொலி, இலங்கை ரூபவாஹினி, லேக்ஹவுஸ் ஆகிய நிறுவனங்களுக்கு இவர்களது காலங்களில் பல நியமனங்கள் வழங்கப்பட்டன. இந்த நியமனங்களில் ஒன்றையாவது ஒரு மலையக இளைஞனுக்கோ அல்லது யுவதிக்கோ வழங்கியுள்ளனரா என்பதை நெஞ்சைத் தொட்டுப் பார்த்து பதில் சொல்லட்டும்.

இப்படியான நியமனங்களின் போது எந்தஒருமலையக அரசியல் வாதியோ அல்லது அமைப்போ ஆட்சேபனை செய்யவும் இல்லை. ஆர்ப்பாட்டம் நடத்தவும் இல்லை.

முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்புகளைக் கண்டு வயிற்றெரிச்சல்பட்டதும் இல்லை.

இன்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும், ஏன் ஜனாதிபதிக்கும் கூட சம்பளத்தை வழங்கும் — பட்ஜெட் தயாரிப்பதற்கான வெளிநாட்டு செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் — உத்தமர்கள் இந்த மலையக மக்களே.

இவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சி தேநீராகக் குடிப்பவர்கள் இந்த மக்களின் அவலங்களைக் கண்டு கொள்வதில்லை.

ஆனால் காலம் காலமாக மலையக மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும், அத்தியாவசிய தேவைகளுக்காகவும் போராட்டம் நடத்தியவர்கள் எமது மலையகத் தலைவர்கள்தான்.

பிரஜாவுரிமைக்காகவும், அடிப்படை தேவைகளுக்காகவும் கல்வி அபிவிருத்திக்காகவும் சம்பள உயர்வுக்காகவும் போராட்டம் நடத்தி பல துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்தவர்கள் மலையக சமூகத்தவர்களே! இதை எவராலும் மறக்க முடியாது.

மலையகத்தில் உள்ள பாடசாலைகளில் கடந்த பத்து வருடங்களுக்கு மேல் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவருகின்றது.

இதைப்பற்றி எந்த ஒரு அரசியல்வா யாவது, (மலையக தலைவர்களைத் தவி குரல் எழுப்பி உள்ளனரா?

தோட்டத் தொழிலாளர்களின் கல்வி அ விருத்திக்காக பாடசாலைகளைக் கட்டவே டும், ஆசிரியர்களை நியமிக்க வேண்டு என்று மாற்றுச்சமூகத்தலைவர்கள் கோரிக்க விடுத்தார்களா? எதுவுமே இல்லை.

இக் குறைகளைப் போக்குவதற்காக போரா டம் நடத்தியும், சக்தியாக்கிரகம் செய்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியும் அரசின் க களை திறந்தவர்கள் மலையக சமூகத்தி மட்டுமே. இதில் வேறு எவருக்குமே கடுகள பங்கும் இல்லை.

இப்பாரிய போராட்டங்களின் பயனாக பெருந்தோட்டத்துறை பாடசாலைகளுக் ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவ கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதனை அரச வர்த்தமானியில் அறிவி துள்ளனர். அதிலும் கூட இந்திய வம்சாவ யினருக்கு மட்டும் என்றோ, அல்லது மல யகத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளை களுக்கு மட்டும் என்றோ குறிப்பிடவில்லை

மலையகப் பாடசாலைகளில் காண டும் வெற்றிடங்களுக்கு அமையவே விண்ண பங்கள் கோரப்பட்டுள்ளன. அதன் அ படையில் இந்து சமயம், கிறிஸ்தவ சம ஆகிய பாடங்களைப் படிப்பிப்பதற்கே ஆசி யர்கள் தேவை.

மலையக தமிழ் பாடசாலைகளில் இ லாமிய பாடத்தையோ அல்லது பௌத்த ம தையோ போதிப்பதற்கான வெற்றிடங்க இல்லை.

இப்படியான நிலையில் இஸ்லாமிய கள் ஓரம் கட்டப்பட்டுள்ளனர் என்று கூறி கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வதும் இதனை எதிர்த்து நீதிமன்றம் செல்வதும் விவேகமான

(24 ஆம் பக்கம் பார்க்க)

---



## டேஸ்ட் கடை தணிகாசலம்

# என்றுதான் விடிவு வரும்?

தணிகாசலம் அண்ணன் ஹட்டன் பஸ்நிலையத்தில் பஸ்ஸுக்காக நின்று கொண்டிருந்தார். அவரை அடையாளம் கண்டு கொண்ட சில இளைஞர்கள் அவரிடம் வந்து தங்களை அறிமுகம் செய்து கொண்டனர்.

அண்மையில் இந்த இளைஞர்கள் எல்லாம் ஒன்று கூடி நடத்திய போராட்டத்தையும் ஆர்ப்பட்டத்தையும் பாராட்டினார் தணி அண்ணன்.

"தம்பி உங்களை எல்லாம் கண்டதில் எனக்கு ரொம்ப சந்தோஷம். இளம் இரத்தங்கள் இப்படித்தான் ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடவேண்டும். உங்களுடைய பங்களிப்பு இந்த மலையகத்திற்கு கட்டாயம் தேவை."

"என்னங்க அண்ணே அப்படிச் சொல்லிப் புட்டீங்க. நாங்க என்னமோ இப்பதான் சின்னச் சின்ன வேலைகளைச் செய்ய ஆரம்பித்துள்ளோம்."

"என்ன ராசா உங்களுடைய சக்தி உங்களுக்கு இன்னும் தெரியவில்லை. வெளியில் நின்று பார்ப்பவர்களுக்குத்தான் அது புரியும். கடுகு சிறிது என்றாலும் காரம் பெரிது என்பது இதைத்தான்."

"அண்ணன் என்னத்தைச் சொன்னாலும் இந்த மலையகத்தில் மண்டிக்கிடக்கும் ஊழல்களை அப்பட்டமாக வெளிப்படுத்தி வெளி உலகுக்கு அம்பலப்படுத்தும் நீங்கள்தான் அண்ணே இந்த மலையகத்திற்குப் பெரிய சேவை செய்து வருகின்றீர்கள். இதை எவராலும் மறுக்க முடியாது."

"என்னமோ தம்பி நீங்கள் அப்படிச் சொல்கின்றீர்கள். உங்களைப் போன்ற துடிப்புள்ள இளைஞர்களின் கருத்துகளைத் தானே நான் கூறுகின்றேன்."

"அண்ணே எல்லோரும் பேசுகின்றார்கள். எல்லாரும் எழுதுகின்றார்கள். ஆனால் அந்த எழுத்தும், பேச்சும் சம்பந்தப்பட்ட மக்கள் மனதில் பதியவேண்டும். அதன்மூலம் பிரதிபலன் ஏற்படவேண்டும்."

"தம்பிமார் சொல்வது, சரிதான். அது அவர் அவருடைய நடை. இது என்னுடைய நடை."

"அப்படீன்னா தணிகாசலம் அண்ணனின் நடை தனி நடை என்று சொல்லு" எனச் சொன்னான் ஒரு முந்திரிக் கொட்டை.

"சரியாகச் சொன்னாயடா மச்சான். நம்ம தணி அண்ணனோட நடையே வேறுதான்."

"என்னதம்பி நீங்க எல்லாரும் நன்றாகப் படித்தவர்கள். உங்களோடு ஒப்பிடும்



போது நான் ஒன்றும் பெரிதாக செய்துவிடவில்லையே."

"அண்ணே! ஒரு விசயத்தைப் பாருங்கள். இந்த பொகவந்தலாவையில் கடைகள் எரிந்து அதனால் ஏற்பட்ட பாதிப்புகளையும், அவர்கள் ஏமாற்றப்பட்ட விடயத்தையும் புட்டுக்காட்டி இருந்தீர்கள்."

"நான் ஒன்றும் புதிதாகச் சொல்லவில்லையே தம்பி, நடந்த விடயங்களை அப்படியே சொல்லி இருந்தேன். அவ்வளவு தான்."

"இன்னும் ஒரு சங்கதியை சொல்ல மறந்திட்டோம். அதாவது புசல்லாவையில் ரோட்டை பெரிதாக்குவதாகக் கூறிக்கொண்டு கடைகளை எல்லாம் உடைத்து நாசப்படுத்தும் விடயத்தை சொல்லி இருந்தீங்க."

"என்ன தம்பி நீங்க உங்களுடைய பிரச்சினைகளை கூறுகின்றீர்கள். அதை நான் வெளிப்படுத்துகின்றேன்."

"அண்ணன் சொல்வது சரிதான், அரகரா என்று சொல்வது ஆண்டவனுக்கு கேட்டால் போதாது அரசாங்கத்துக்கும் கேட்கவேண்டும் என்பது சரியாகி விட்டது."

"அப்பாடி என்ன தம்பி நடந்துவிட்டது. மக்களின் குறைகள் மகேசனுக்கு எட்டியதோடு மந்திரிமாருக்கும் எட்டிவிட்டது. அதனால் மக்களுக்குத்தானே நன்மை."

"அதைத்தான் நாங்களும் சொல்லவந்தோம். நம்ப அமைச்சர் முத்துசிவலிங்கம் பொகவந்தலாவையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கவும், நகரை நவீனப்படுத்தவும் அமைச்சரவையில் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டாராம்."

"அப்படியா சங்கதி! கேட்கவே சந்தோஷமாக இருக்கு தம்பி."

"அதுமட்டும் இல்லைங்க அண்ணே. புசல்லாவை சங்கதியை சொல்லி இருந்தீங்க இல்லியா? அதுக்கும் விமோசனம் கிடைத்து இருக்கு."

"ஆமாங்க அண்ணே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாதை அபிவிருத்திக்காக சுவீகரிக்கப்படும் காணிகளுக்கும் உடைக்கப்படும் கட்டடங்களுக்கும் கூடுதலான நஷ்டஈட்டை வழங்கவும் அனுமதி பெற்றுள்ளாராம்."

"இதுவும்கேட்க நல்லாத்தான் இருக்கு. இது புசல்லாவைக்கு மட்டும் இல்லையே முழு இலங்கைக்கும் தானே."

"ஆமாம் பொதுவான இந்த நல்ல காரியத்தை நம்ப சனங்களுக்கும் வாதாடிப் பெற்றுக் கொடுக்கவேண்டும்."

"அமைச்சர்களின் சிபார்சுகளும், அறிக்கைகளும் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் அதனை நடைமுறைப்படுத்தவும் தூண்டவேண்டும்."

"அண்ணன் சொல்லுறதும் சரிதான். இந்த அமைச்சர்கள் எங்களுக்காக குரல் எழுப்பி உள்ளனர். அவர்களுக்கு நன்றி செலுத்தவேண்டும். அதேவேளை அமைச்சரின் திட்டங்களை நந்திபோல் நின்று தடுப்பவர்களையும் இனம் கண்டு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும்."

"தம்பி இப்போதான் சிபார்சு செய்யப்பட்டுள்ளது; பொறுத்திருந்து பாருங்கள். எல்லாம் சரிவரும். சரிப்படாவிட்டால் அதனை செயல்படுத்தும் சக்தி உங்களைப் போன்ற இளைஞர்களின் கையிலேயே உள்ளது. தைரியமாக இருக்க வேண்டும்" என்று கூறி தணிகாசலம் அண்ணன் விடை பெற்றார்.

# பெற்றோரின் மனமாற்றம் அவசியம்

''எந்தப் பிள்ளையும் நல்ல பிள்ளை தான் மண்ணில் பிறக்கையிலே.

அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே''

என்பது கவிஞர் கண்ணதாசனின் கருத் தாழம் மிக்க பாடல்.

பிள்ளைகள் பெற்றோரின் கட்டுப்பாடு, கட்டுப்பாடின்மை ஆகிய இரண்டினாலும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பது உளவி யலாளர்கள் ஆய்வில் தெரியவந்துள்ளது.


பெற்றோர் எவ்வளவு தூரத்துக்குக் கண் டிப்பானவர்களாகவும், தண்டனை விதிப் பவர்களாகவும் இருக்கின்றார்களோ, அந்த ளவிற்கு அவர்களின் பிள்ளைகள் பின்னர் மிகவும் வலுச்சண்டையாளர்களாகவும், ஊறு விளைவிப்பவர்களாகவும், இன்னா செய்பவர்களாகவும் வளர்கின்றார்கள்.

இதனை நாம் எமது அனுபவவாயிலா கக் காணலாம். கண்டிப்பான பெற்றோரின் பிள்ளைகள் ஒன்றில் மிகவும் பயந்த சுபாவ முடையவர்களாக வளர்வார்கள் அல்லது ஆக்கிரமிப்புத்தன்மை மிக்க வலுச்சண்டைக் காரராக வளர்வார்கள்.

'ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர்ச் செயல் உண்டு' என்பதனை மனதில் கொண்டு பார்க்கும் போது ஒரு விளைவின் மறுவிளைவினை நாம் காணலாம் என்ப தனை உளவியல் ரீதியில் ஆய்வு செய்பவர் கள் கண்டறிந்து அதன் நன்மை தீமை களை எடுத்துரைப்பதோடு பிள்ளைகளை எவ்விதம் வளர்க்க வேண்டும், அவர்கள் நல்ல பண்பாளர்களாக மாறுவதற்கு பெற் றோரின் நடத்தையில், எண்ணத்தில் என் னென்ன மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதனை முன்வைக்கின்றார்கள்.

மிகக் கட்டுப்பாடு நிறைந்த பெற்றோ ரின் பிள்ளைகள் மிகவும் வன்முறையாளர் களாக வளர்கின்றார்கள். பெற்றோர் தங் கள் செயல்களை மாற்றும் போது பிள்ளை களின் நடத்தையும் மாற்றமடைகின்றது என்று அண்மையில் இந்தியாவில் நடத்தப் பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

பெற்றோர் மிகக் கண்டிப்பான பிள்ளை வளர்ப்பு முறையினைக் கொண்டவர்க ளாக இருந்தால் பிள்ளைகள் மிகக்கூடிய ளவு வன்முறைத் தன்மை கள், பொதுநல நோக்கற்ற பண்புகள் ஆகியவற்றைக் காண்பிப்பார்கள் என்று மேலும்தெரிவிக்கப்படுகிறது.



''பிள்ளைவளர்ப்பில் மாற்றங்கள் எற்படும் போது, பிள்ளைகளின் நடத்தை யிலும் மாற்றம் ஏற்படும் என் பது ஒரு பெரும் செய்தி'' எனக் குறிப்பிடுகிறார் கனே டிய புள்ளிவிவரத் திணைக் களத்தின் மூத்த பகுப்பாய் வாளர் ஒருவர்.

பிள்ளைகளின் நடத்தை களில், பெற்றோரின் வரு மான நிலைமைகளும் தாக் கத்தைக் கொண்டுள்ளன. குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களில் இருந்துவரும் பிள்ளைகளிடம் மிகக்கூடிய ளவு வன்முறைப் பண்பு காணப்படுவதாக ஆய்வு காட்டுகின்றது.

எனினும் இந்த நிலைமைகளுக்குச் சிலர் எதிர்த்தாக்கம் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர் என்பது ஏனைய வரு மானக் குழுக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது கண்டறியப்பட்டுள்ளது என்பதும் கருத்திற்கொள்ளத் தக்கது. இவற்றிற்கு குடும்ப அமைப்பிலும் குடும்பத்தில் காணப் படும் ஒவ்வாத நடைமுறைகளிலும் உள்ள குறைபாடுகளும் காரணமாக அமைவதா கக் கருதப்படுகின்றது.

குழந்தை ஆரம்பத்தில் தாயின் அணைப் பினிலேயே வளர்கின்றது. பெரும்பாலான உயிரினங்களின் தன்மைகளில் தாய்மை யின் பங்கு அதிகமானதாகவே அமைகின் றது. கருத்தரித்து, பெற்று வளர்ப்பதில் தாயின் பங்கு அதிகம். அது பறவையானா லும் சரி விலங்குகளாக இருப்பினும் சரி தாயின் அணைப்பிலேயே குழந்தைப் பரு வம் தங்கியிருப்பதைக் காணலாம்.

மனித வளர்ச்சிப் வருவத்தில் பதின்ம வயதுப் பருவம் மிகவும் சிக்கல் நிறைந்த தாகக் காணப்படுகின்றது. இந்தக் காலத் தில் தாய் தந்தை இருவரதும் அணைப்பு, நெருக்கம் பிள்ளைகளை நல்வழிப்படுத்த அவசியமானதாகக் காணப்படுகின்றது. மன முறிவுற்ற பிள்ளைகளை ஆராய்ந்ததில் தந் தையுடனான நெருக்கமான போக்கு பெண் பிள்ளைகளுக்கு மனமுறிவை, அல்லது மன அழுத்தத்தைக் குறைப்பதாகக் காணப் படுகின்றது.

பிள்ளைகளின் நடத்தையில் மாற்றங் களை ஏற்படுத்த அல்லது நல்ல நடத்தை (நல்லொழுக்கம்) உடையவர்களாக, நல்ல பண்பாளர்களாக அவர்கள் வளர்வதற்கு பெற்றோரின் நல்லுறவு, பாசம், அன்பான கலந்துரையாடல், தங்களை அர்ப்பணிக் கும் தன்மை என்பன உதவுவதாகக் கொள் ளப்படுகின்றது. இதனால் பிள்ளை வளர்ப்பு முறைகளில் பெற்றோர் தமது போக்கை யும், நடத்தையையும், நோக்கத்தையும் மிகுந்த அவதானத்தோடு பின்பற்ற வேண்டியது அவ சியமாகும்.

மலரிலும் மென்மைவாய்ந்தது, அவர்க ளின் உள்ளம்.

வாட்டமடையாது என்றும் நறுமணம் வீசி இன்பகரமாக, இங்கிதமான சூழலை ஏற்படுத்த அவர்களின் மனதில் மாசு படியாத படி பெற்றோர் நடந்து கொள்ளுதல் இன் றியமையாதது.

## தாய்ப்பாலுக்கு நிகராய் எதுவுமில்லை

ஒரு குழந்தை பிறந்து, முதல் மூன்று மாதங்கள் மிகவும் முக்கியமான ஒரு பருவ மாகும். இந்த மூன்று மாதகாலத்தில் குழந்தை யைப் பராமரிக்கும் முறை சரியாக இருந் தால் பிற்காலத்தில் குழந்தையின் உடல் நலம், வளர்ச்சி குறித்த பல பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம்.

இந்தக் காலகட்டத்தில் ஒரு தாய் எதிர் கொள்ளும் சவால்கள், அவற்றைச் சமா ளிக்கும் வழிகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளுங்கள்.

## குழந்தை பிறக்கும் காலம்

ஒரு குழந்தை கருவில் உருவான காலத் தில் இருந்து 37 முதல் 40 வாரங்களில் பிறக்க வேண்டும். இவ்வாறு பிறக்கும் குழந் தைகள் முழுவளர்ச்சி பெற்ற, குறித்த காலத் தில் பிறந்த குழந்தைகள் என்று அழைக்கப் படுகின்றன.

37 வாரங்களுக்கு முன் பிறக்கும் குழந் தைகள் குறித்த காலத்திற்கு முன் பிறந்த குழந்தைகள்

41 வாரங்களுக்குப் பின்னர் பிறக்கும் குழந்தைகள் குறித்த காலத்திற்கு பின் பிறந்த குழந்தைகள்.

குறித்த காலத்திற்கு முன் பிறக்கும் குழந் தைகள் முழுமையான வளர்ச்சி நிலையை அடையாததால் பல பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

## பிறக்கும் குழந்தையின் எடை

ஒரு குழந்தை பிறக்கும் போது இருக்க வேண்டிய சராசரி எடை 2.5 முதல் 3.5 கிலோ கிராம் ஆகும்.

எடை 2 கிலோ கிராமுக்கும் குறைவாக இருந்தால் இந்தக் குழந்தைகளை ஆபத் தான நிலையில் உள்ள குழந்தைகள் என்று அழைக்கிறோம்.

உடல் எடை அதிகரித்து, உடல் இயக்கங் கள் அனைத்தும் நல்ல முறையில் உள்ளன என்பது உறுதி செய்யப்படும்வரை இந்தக் குழந்தைகளை அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்துப் பாதுகாக்க வேண்டும்.

எடை 1.5 கிலோ கிராமுக்கும் குறைவாக இருந்தால் அந்தக் குழந்தைகள் மிக ஆபத் தான நிலையில் உள்ளவையாகக் கருதப் படும். மிகப் பிரத்தியேகக் கவனத்துடன் சிகிச்சை அளிக்கப்படவேண்டும்.

# அரசியல் வம்பு

அம்பி



### பொறுத்துப் பார்ப்போம்

*ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர் பான தனது அவாவை அக்காவிடம் கடந்த வாரம் வெளிப்படுத்தியிருக்கிறாராம் அனுரா. ஜனாதிப தித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறாது என்றும், அது இவ்வருடமே நடைபெறுமென்றும் தேர்தல் ஆணையாளர் கூறியிருப்பதாக செய்திகள் கசிந் துள்ள நிலையில் தான் அனுரா இவ்வாறு அவசர சந்திப்பொன்றை நடத்தினார் என தெரிகிறது.*

*இந்த சந்திப்புக்குப் பின்னர் தான் ஜனாதிபதி சந் திரிக்கா ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தை மேடை களில் பேச ஆரம்பித்துள்ளாராம். இந்த விடயத்தை அறிந்திருக்கும் பிரதமரும் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து தனது அபிப்பிராயத்தை பகிரங்கமாக தெரி வித்து வருகிறாராம்.*

*ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப் பினரான தனக்கு ஜனாதிபதி வேட்பாளர் பதவி கிடைக் காத பட்சத்தில் கட்சி இரண்டாக உடைந்துபோகும் என்று பிரதமர் மகிந்த கூறிவருகிறாராம். எல்லாவற் றையும் பொறுத்திருந்து பார்த்தால் போச்சு.*

### பிரதமருக்கு எதிராக.....

*பிரதமருக்கெதிரான 'ஹெல்ப் பிங் அம்பாந்தோட்டை' விவகா ரத்தை ஐக்கிய தேசியக் கட் சிக்கு ஆதரவான ஆங்கிலப் பத்திரிகை ஒன்று வாராவாரம் அம்பலப்படுத்தி வருகிறது.*

*இந்த விவகாரம் தொடர் பான தகவல்களை அந்தப் பத் திரிகைக்கு பெற்றுக் கொடுப் பதில் அரசாங்கத்தின் உயர்மட் டம் மறைமுகமாக சம்பந்தப் பட்டுள்ளதாம். பிரதமராக வரு வதற்கும், ஜனாதிபதி வேட்பா ளர் பதவியிலும் கண்வைத்தி ருக்கும் சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்கள் பலர் மேற் படி விடயத்தில் முழுமையான பங்களிப்பை மறைமுகமாக வழங்க ஆரம்பித்திருக் கிறார்களாம்.*

*ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தை கண்டி யில் அடுத்த மாதம் ஆரம்பிப்பதற்குபிரதமர் தயாரா கியிருக்கும் வேளை அவருக்கெதிராக மேலும் பல குற் றச்சாட்டுக்களை அடுக்குவதற்கு தயார் நடவடிக்கை கள் இடம்பெறுவதாக கேள்வி.*

### நல்ல அரசியல்

*மலையகத்தில் ஆசிரியர் நியமனம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாக்கல் செய்த வழக்கு தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குமிடையில் பேச்சு வார்த்தை ஒன்று நடைபெற்றது.*

*மலையக மக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமை களிலும் தலையிடுகிறீர்களோ என்று இ.தொ.கா சார் பில் சென்ற பிரதிநிதி கேட்டபோது, இந்த விடயம் குறித்து, தனக்கு எதுவுமே தெரியாதென்று கூறிவிட்டா ராம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்.*

*மலையகத்தின் முஸ்லிம் ஆசிரியர்களை பற்றி யைசல் முஸ்தபா குரல் கொடுத்தால் மத்திய மாகா ணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தளம் பதிக்கப்படுமென்பதால் இந் விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலையிட்டதாக கூறி கவலைப் பட்ட ரவூப் ஹக்கீம், வழக்கை வாபஸ் பெறுவதாகவும் உறுதி யளித்தாராம்.*

*''உடனடியாக வழக்கை வாபஸ் பெற்றால், சமூகத்தை காட்டிக் கொடுத்ததாக ஒரு தரப்பினர் குரலெழுப்ப ஆரம்பிப் பார்கள். எனவே சற்று பொறுங்கள். வழக்கை வாபஸ் பெறு கிறோம்'' என்று விநயமாக கூறினாராம் ஹக்கீம். நல்ல அரசி யல்தான் பாருங்கள்.*

### ரணிலை விமர்சனம்

*ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை முன்னதா கவே ஆரம்பித்து, முன்னணியில் இருக்கும் ஐ.தே.க. தலைவ ருக்கு எதிரான பிரசாரப் பணிகளை நாடளாவிய ரீதியில் மேற் கொள்வதற்கு பல பௌத்த அடிப்படை வாத அமைப்புக்கள் திட்டம் தீட்டியிருக்கின்றனவாம்.*

*பௌத்தரான மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதால் மதத்தை அடிப்படையாக வைத்து ரணிலுக்கு எதிரான பிரசாரப் பணிகளை மேற்கொள்வதற்கு அந்த அமைப்புக்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றன.*


*அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச ஜன நாயக சங்கத்தின் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க இந்த சங் கத்தின் தெற்காசிய பிராந்திய தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த நியமனத்தை கிறிஸ்தவ அடிப்படை வாதிகள் வழங்கினர் என்ற பிரசாரத்தை சிங்கள அடிப்படைவாதிகள் தென்னிலங் கையில் பரப்பி வருகின்றனராம்.*

*ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றி பெற்றுவிடக் கூடா தென்று கங்கணம் கட்டிச் செயற்படுகிறதாம் ஜே.வி.பி. இதற் காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டால் அவருக்கு முழுமையான ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளதாம் ஜே.வி.பி.*

*ஆனாலும் ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பியின் ஆதரவைப் பெறாமல் தனித்துப் போட்டியிட வேண்மென்று ஜனாதிபதி விரும்பம் வெளியிட்டுள்ளமை நெருக்கடியை ஏற்படுத்தியி ருக்கிறதாம். சுதந்திரக்கட்சியில் மகிந்த ராஜபக்ஷவைத் தவிர வேறு எவரும் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டால் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதென்று ஜே.வி.பி. திட மான தீர்மானத்தை எடுத்துள்ளதாம்.*

*எப்படியோ மகிந்த ஜே.வி.பியினருடன் வைத்துள்ள கூட்டு நல்லதல்ல வென்றும், இதனால் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் களின் வாக்குகள் கட்சிக்கு இல்லாமல் போகும் என்று ஜனாதிபதி பிரதமருக்கு புத்தி கூறினாராம். காலம் பதில் சொல்லட்டும்.*

# இந்தியாவுக்கு ஐ.நா பாதுகாப்புச்சபையில் அங்கத்துவம்
# அமெரிக்கா கை கொடுக்குமா?



புஷ்

அமெரிக்காவின் புஷ் நிர்வாகம், சமூக பொருளாதார இராணுவத்துறைகளில் வல்லரசுகளாகத் தோற்றம் பெற்றுவரும் இந்தியா மற்றும் சீன நாடுகளின் அதீத வளர்ச்சியை சந்தேகத்துடனும் எச்சரிக்கையுடனும் கண்காணித்து வருகிறது என்பதே யதார்த்தம்.

இந்தப் பின்னணியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தபோது அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட ராஜமரியாதைகளும், வரவேற்புகளும் கூட தன்னலம் சார்ந்தவையே என்பது புலனாகும். தனது விஜயத்தின் மூலம் இந்தியப் பிரதமரும் பெரிய காய் ஒன்றை நகர்த்த முயன்றிருக்கிறார். ஆனால் இந்தியப்பிரதமரின் எதிர்ப்பார்ப்பு என்றும் நிறைவேறப்போவது இல்லை.

மிக நீண்ட காலமாக அமெரிக்க – இந்திய உறவுகள் உன்னத நிலையில் இருக்கவில்லை. சோவியத் யூனியன் 80களில் துண்டுதுண்டாகச் சிதறும் வரை இந்தியாவின் நெருங்கிய நண்பனாக அந்த நாடே இருந்துவந்தது. சோவியத் யூனியனின் மறைவுக்குப் பின்னர் இந்த அமெரிக்க - இந்திய நட்புறவு பலம் பெற ஆரம்பித்து அண்மையில் இருநாடுகளும் செய்து கொண்டுள்ள பாதுகாப்பு உடன்படிக்கை வரை சென்றுள்ளது.

இந்த மாத மத்தியில் இந்தியப் பிரதமருக்கும் அமெரிக்க ஜனாதிபதிக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பு இருநாடுகளுக்குமான உறவில் ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளதாக இந்திய அரசியல் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

ஆனால் அவர்கள் குறிப்பிட்டுள்ள இன்னொருவிடயம் தான் கவனத்துக்குரியது. 'அமெரிக்கா இந்தியாவுடனான தனது நட்புறவில் அவசரம் காட்டாது. நீண்டநாள் அபிலாஷைகளை மையமாக வைத்தே இந்தியாவுடனான தனது ஒவ்வொரு நடவடிக்கையிலும் அந்த நாடு ஈடுபட்டு வருகிறது, இப்படி அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்டினா றெக்கா அமெரிக்க ஜனப்பிரதிநிதிகள் சபையின் சர்வதேச உறவுகள் குழுவுக்கு பின்வருமாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

"நாங்கள் இந்தியாவுடனான உறவில் சில யதார்த்தங்களின் பின்னணியிலேயே மாற்றங்களைச் செய்வதற்கு முன்வந்திருக்கிறோம். பாதுகாப்பு, நவீன தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சர்வதேச விவகாரங்களுக்கான இராஜதந்திர அணுகுமுறை ஆகிய துறைகளிலேயே நாம் கவனம் செலுத்துகிறோம். இந்தியாவுடனான எமது உறவு இப்போது இருப்பதைப்போல என்றும் பலமாக இருந்ததில்லை'' என்று கூறியிருக்கிறார் அவர்.

இவ்வாறு அமெரிக்கா இராஜதந்திர ரீதியில் தனது நட்புறவை இந்தியாவுடன் வளர்த்துக் கொள்ள, இந்தியாவோ தனது உடனடித் தேவை ஒன்றை அமெரிக்காவின் ஆதரவுடன் நிறைவேற்றிக் கொள்வதற்காக அதனுடன் நீண்ட நாள் உறவைப் பேணிவளர்க்க விரும்புகின்றது. இந்தியாவின் உடனடித் தேவை என்ன? அது ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தனக்கு நிரந்தமாக இடமொன்றைப்பிடித்துக் கொள்ள விரும்புகிறது. இந்தியா சுதந்திரம் பெற்ற நாள்முதல் அதன் மனதில் நிறைந்திருந்த ஆவலும், தேவையும் இது.




இந்தியா ஒரு உப கண்டம். அதனது சனத்தொகை, இராணுவபலம், சர்வதேச விவகாரங்களில் அதனது பங்கு, எதிர்கால அபிவிருத்திகள் ஆகியவற்றை கவனத்துக் கெடுத்துக் கொண்டால் ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் அது தனக்கு நிரந்தரமான அங்கத்துவத்தைக் கோருவதில் தவறு எதுவும் இருக்க முடியாது என்று இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அண்மையில் தெரிவித்திருந்தார்.

உலக சனத்தொகையில் 1/6 பங்கைக் கொண்டிருப்பதும், வளரும் பொருளாதார வளமுடையதுமான இந்தியா போன்றதொரு நாடு இத்தகைய அபிலாஷையொன்றை நிறைவேற்றிக் கொள்வதில் ஆர்வம் காட்டுவதில் தவறு ஒன்றும் இருக்க முடியாது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெறுவதற்கு இந்தியாவைப் போல் தமக்கும் தகுதி இருப்பதாக, கைத்தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளான ஜப்பானும் ஜேர்மனியும் கருதுகின்றன. பிரேசிலும் கூட இவ்வாறு நினைக்கிறது. இதைப்போல எண்ணெய்வளம் மிக்க மத்திய கிழக்கில் உள்ள சில நாடுகள் கூட இவ்வாறு அங்கத்துவம் கோரமுடியும். தவிர ஐ.நாவில் 54 அங்கத்துவ நாடுகளைக் கொண்டுள்ள மிகப்பெரிய கண்டமான ஆபிரிக்காவில் உள்ள சில நாடுகள் கூட தமக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் வேண்டும் என்று கேட்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளது. ஆபிரிக்கா வறுமையால் வாடும் கண்டமாக இருக்கலாம். ஆனால் நீதி மற்றும் மனிதாபிமான அடிப்படையில் பார்க்கும் போது அந்த நாடுகளுக்கும் இவ்வாறு கோருவதற்கான பலம் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

இங்கும் அமெரிக்கா, தனது பலத்திலேயே வெகுகவனமாக இருக்கிறது. தனது பலம் எந்தக் காரணத்தைக் கொண்டும் சரிந்து விடுவதை அது விரும்பவில்லை.

இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இந்த விடயம் பற்றிய தீர்மானம் வாக்கெடுப்புக்கு ஐ.நாவில் விடப்பட இருக்கிறது. ஒரு நாடு பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெறுவதற்கு 2/3 பங்கு வாக்குகளைத் தனக்கு ஆதரவாகப்பெற்றுக் கொள்ள வேண்டும். அமெரிக்காவின் ஆதரவின்றி 2/3 வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. அமெரிக்காவின் நேசநாடுகள் அதன் விருப்பத்துக்கு மாறாக என்றும், செயல் படப் போவது இல்லை.



மன்மோகன் சிங்

அமெரிக்கா ஐ.நாவில் எப்பொழுதும்சர்வவல்லமையுள்ள ஒரு நாடாகவே இருக்க விரும்புகிறது. அதனது 'அதிகாரப்பிடிக்கு' இன்னொரு நாடு எதிர்காலத்தில் சவாலாக இருக்கப் போவதை அது ஒருபோதும் விரும்பாது என்பதே உண்மை. எனவே மிகவும் சக்திவாய்ந்த அசைக்க முடியாத பாதுகாப்புச் சபை ஒன்று உருவாகுவதை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் என்றும் விரும்பப் போவது இல்லை.

புஷ்நிர்வாகம், அமெரிக்காவின் நவீன அணு தொழில்நுட்பத்தை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இந்தியாவுக்கு தனது கண்காணிப்பின் கீழ் வழங்குவதற்கு இணங்கலாம். இந்தியாவும், பாகிஸ்தானும் அமெரிக்க ஆதரவுபெற்ற அணு ஆயுத் தடை ஒப்பந்தத்தில் இன்னும் கைச்சாத்திடவில்லை. ஈராக், ஆப்கானிஸ்தான் நாடுகளில் அமெரிக்கா இப்போது கால்பதித்து நிற்பதால் இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் மீது பொருளாதாரத்தடை விதிப்பது பற்றி யோசிப்பதற்கு அமெரிக்காவுக்குக் கால அவகாசம் போதாமல் இருக்கிறது.

இவற்றை எல்லாம் முன்நிறுத்திப் பார்க்கும்போது பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெறவேண்டும் என்ற இந்தியாவின் நீண்ட நாள்கனவு நனவாகப் போவதில்லை. அமெரிக்காவின் ஆருயிர் நண்பனான ஜப்பான் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெறுவதையே அமெரிக்கா விரும்புகிறது. இந்தியா போன்று இந்தச் சபையில் அங்கத்துவம் பெறவிரும்பும் ஏனைய நாடுகள் காலம் கனியும் வரைகாத்திருக்க வேண்டியது தான்.



# ராசி பலன்

**மேடம்:அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் ராசியில் ஆட்சியாக இருப்பது தோசம் இருப்பினும் சில நன்மைகள் செய்யலாம். மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். (2, 7) உரிய சுக்கிரன் 5 இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்புண்டு. நாலாம் வீட்டில் சூரியன், புதன் சேர்க்கை நன்மை செய்யலாம். வாகன சுகம் உண்டு. தாய் நலம் (9,12) உரிய குரு 6 இல் இருப்பதில் பயன் இல்லை. தீங்கு செய்யலாம். பிதாவுக்குக் கூடாது. சயன சுகம் இருக்காது. (10, 11) உரிய சனி நாலில் இருப்பது நல்லபலன் செய்யாது. தொழில்துறையில் பாதிப்பை உண்டாக்கலாம். (3,6) உரிய புதன் நாலில் சூரியனும் சேர்வதால் நல்ல பலனைத் தரும். இளைய சகோதரத்துக்கு நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 4 இல் இருப்பது நன்மை செய்யும். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். (2,5) உரிய புதன் மூன்றில் நன்மை செய்யாது. கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். நாலாம் அதிபன் சூரியன் மூன்றில் இருப்பது நல்லது. தாய் நலம், வாகன சுகம் இருக்காது. (7,12) உரிய செவ்வாய் 12 இல் ஆட்சியாக இருப்பது ஒரு வகையில் தோசமானது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். இருந்தும் சயன சுகம் உண்டு. (9,10) உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷம். பிதா நலம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். ராசியை குரு பார்ப்பதால் இயல்பாகவே தோச நிவர்த்தியுண்டு. பல நன்மைகள் உண்டு.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் இரண்டில் இருப்பது சிறப்பானது. மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்புண்டு. தாய் நலம், வாகனம் சுகம் உண்டு. இரண்டாம் வீட்டில் இரு தீய கிரகங்களும் ஒரு சபக் கிரகமும் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (5,12) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது, பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். சயன சுகம் உண்டு. (6, 11) உரிய செவ்வாய் 11 இல் ஆட்சியாக இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராவர். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (7,10) உரிய குரு 4 இல் கேதுவுடன் இருப்பது தோசமானது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (5,6) உரிய சனி இரண்டில் நன்மை செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் மிதுனம் முதல் சிங்கம் வரை சஞ்சரிப்பதால் நன்மையுண்டு. தனது ராசியைக் கடக்கும் போது நல்ல பலனைத் தரும். குறிப்பாக வாரமத்தியில் நல்ல பலன் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டுக்குரிய சூரியன் ராசியில் இருப்பது நன்மை செய்யாது. கையில் பணம் இருக்காது. (3, 12) உரிய புதன் ராசியில் நன்மை செய்யாது. சயன சுகம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. (4,11) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. தாய்நலம், வாகன சுகம் உண்டு. நண்பர்களுக்கும் நல்ல பலன் உண்டு. மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (5, 10) உரிய செவ்வாய் 10 இல் சமசுகம். தொழில் முன்னேற்றம் உண்டு. (7,8) உரிய சனி ராசியில் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 12 இல் இருப்பது நல்லதல்ல இருப்பினும் புதனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. பிரயாண வாய்ப்புண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். (2,11) உரிய புதன் 12 இல் இருப்பது நல்ல பலன் செய்யாது. கையில் பணம் இருக்காது. நண்பர்களால் செலவு உண்டாகலாம். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. (3,10) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் 9 இல் ஆட்சியர்க இருப்பது நல்ல பலனைச் செய்யாது. பெற்றோருக்கு நல்ல பலன்இல்லை. வாகன சுகம் இருக்காது. (6,7) உரிய சனி 12 இல் இருப்பது கூடாது. பகை விலகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குருவின் இருப்பு சாதகமாக இருப்பது நல்லது.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 11 இல் இருப்பது நல்லது. மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். (2,9) உரிய சுக்கிரன் 12 இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லபலன் உண்டு. (4,7) உரிய குரு ராசியில் கேதுவுடன் இருப்பது தோசம். வாகனசுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (5,6) உரிய சனி 11 இல் இருப்பது நல்லது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர்கள் நண்பராகும் வாய்ப்பு உண்டு. 12க்குரிய சூரியன் 11 இல் இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. ராகு, கேதுக்களின் தொடர்பு நல்ல பனைத் தராது. ராசியைச் சனி பார்ப்பதும் கூடாது.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 11 இல் இருப்பது நல்லது. மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது விசேஷம். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. மன நிம்மதியுண்டு. (2,7) உரிய செவ்வாய் 7இல் ஆட்சியாக இருப்பதானது தோசம் இருப்பினும் ஆட்சிக்குரிய வலுவான பலனைத் தரும். கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு தாமதமாகும். (3,6) உரிய குரு, 12 இல் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் இருக்காது. பகை விலகும். (4,5) உரிய சனி 10 இல் இருப்பது சமசுகம். தாய்க்கு நல்ல பலன் இருக்காது. வாகன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 10 ஆம் வீட்டில் மூன்று கிரகங்கள் வலுவாக இருப்பதால் தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 6 இல் ஆட்சியாக இருப்பது விசேஷம். இருப்பினும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைக் குறைக்கலாம். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். மன அமைதி இருக்கும். (2,5) உரிய குரு 11 இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 9 இல் இருப்பது நன்மை என்று சொல்ல முடியாது. ஆனால் தீமை இல்லை. தாய் நலம், இளைய சகோதரத்துக்கு மத்திம பலன் உண்டு. (7,12) உரிய சுக்கிரன் 10 இல் நல்ல பலனைச் செய்யமாட்டார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. 10க்குரிய சூரியன் 9 இல் இருப்பதானது நல்லது என்று கூறமுடியாது. தீமை செய்யாது. தீய கிரகங்கள் நல்ல வீடுகளில் பெரிதாக நன்மை செய்யாது. செவ்வாய், சனி ஒன்றை ஒன்று நோக்குவது நல்லதல்ல.

**தனு:மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10 இல் கேதுவுடன் இப்பது தோசமானது. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. (2,3) உரிய சனி எட்டில் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (5,12) உரிய செவ்வாய் 5 இல் ஆட்சியாக இருப்பது நல்ல பலனைச் செய்யாது. பிள்ளைகள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். சயன சுகம் பாதிக்கலாம். (6,11) உரிய சுக்கிரன் 9 இல் இருப்பது நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. (7,10) உரிய புதன் 8 இல் நல்ல பலனைச் செய்யாது. எனினும் சூரியனோடு இணைவதால் நல்ல பலன் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு.

**மகரம்:உத்தராடம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 7இல் நன்மை செய்யாது.

**இவ்வார 'ராசிபலன்' 01—08—2005 முதல் 07 —08—2005வரை**

**பொ. சந்திரன்**

இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பதால் நல்லபலனை எதிர் பார்க்கலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. கையில் பணம்இருக்காது. மன அமைதி பாதிக்கலாம் (3,12) உரிய குரு 9 இல் இருப்பது சிறப்பானது. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. சயனசுகம்உண்டு. (4,11) உரிய செவ்வாய் 4இல் ஆட்சியாக இருப்பது தோசமானது இருப்பினும் சில நல்ல பலனைத் தரலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு சமசுகம். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (5,10) உரிய சுக்கிரன் 8 இல் நல்ல பலனைச் செய்வார். தொழில்துறை முன்னேறும். பிள்ளைகள் ஆரோக்கியமாக செயல்படுவர். 7 ஆம் வீட்டில் தீய கிரகங்கள் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| | செவ்வாய் அச்சுவினி கேது<br>சுக்கிரன் புரம் சுக்கிரன்<br>புதன் புனர்பூசம் குரு<br>சூரியன் ஆயிலியம் புதன்<br>குரு அத்தம் சந்திரன்<br>சனி பூசம் சனி | | சூரியன் புதன் சனி |
| | | | சுக்கிரன் |
| | | | குரு கேது |

ஆடி 16முதல் 22 வரை

சந்திரன் மிதுனம் முதல் சிங்கம் வரை

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 6 இல் இருப்பது விசேஷம். மேலும்தனது நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. சயனசுகம் உண்டு. மன அமைதி இருக்கும். (2,11) உரிய குரு 8இல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. நண்பர்களுக்கும் கூடாது. (3,10) உரிய செவ்வாய் மூன்றில் ஆட்சியாக இருப்பது நல்லது. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. தொழில் துறை முன்னேறும். (4,9) உரிய சுக்கிரன் 7இல் நல்ல பலனைச் செய்யாது. பெற்றோருக்குக் கூடாது. வாகன சுகம் இருக்காது. 7க்குரிய சூரியன் 6இல் இருப்பது விசேஷமானது. திருமண வாய்ப்பு உண்டு. குருவின் பலன் குறைவதால் குரு வழிபாடு செய்வது ஆறுதல் உண்டு.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7 இல் இருப்பது நல்லது. கேதுவோடு சேர்ந்தது தோசமானது இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். தொழில் துறை முன்னேறும். ராகு, கேதுக்களின் தொடர்பு ராசிக்கும் ராசிநாதனுக்கும் இருப்பது பாதகமானது. (2,9) உரிய செவ்வாய் இரண்டில் ஆட்சியாக இருப்பது ஒரு வகையில் தோசமானது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு தீமையானது. (4,7) உரிய புதன் 5ல் இருப்பது நல்லது. தாய் நலம். வாகன சுகம் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. 6க்குரிய சூரியன் 5 இல் இருப்பது பாதகமானது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரின் தொல்லை இருக்கும். (11,12) உரிய சனி 5 இல் இருப்பது கூடாது. சயன சுகம் இருக்காது. நட்புக்குள் மனஸ்தாபம் வரலாம்.

# பிரதமரின் 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' வங்கிக் கணக்கு கிணறு வெட்டப் பூதம் வருகிறது

'2கோடியே 50 லட்சம் ரூபா நன்கொடையை நாம் பிரதருக்கு வழங்கியபோது அது தேசிய மீளமைப்பு நிதியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது தெளிவான நோக்கமாகும்'' - இப்படி அந்தக் கடிதத்தின் ஒருபகுதி குறிப்பிடுகின்றது. அத்துடன் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை இது விடயமாக இனிமேல் யுனிலெவர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளுமாறும் ரணிலை அந்தக் கடிதமூலம் அவர் கேட்டுக்கொண்டார்.

கிணறு வெட்டப் பூதம் வெளிக்கிட்டது என்று நாட்டு வழக்கில் கூறுவார்கள். அதுபோல நமது பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' என்ற சுனாமி புனர்நிர்மாண புனரமைப்புக்கான 'ஸ்ராட்டட் சார்ட்ட் வங்கி' கணக்குப் பற்றி பல்வேறு தகவல்கள் வெளிவந்து நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. இப்போது யுனிலெவர் சிறிலங்கா என்ற பல்தேசிய நிறுவனம் தேசிய நிவாரண நிதிக்கு வழங்கிய 2 கோடியே 50 லட்சம் ரூபா 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை'க் கணக்கில் வரவு வைக்கப்பட்டது எப்படி என்பது புரியாமல் யுனிலெவர் சிறிலங்கா நிறுவனமும், அரசியல் வட்டாரங்களும் விழி பிதுங்க நிற்கின்றன.

கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தம்மீது சுனாமி நிதி சம்பந்தமாக எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆப்பு வைக்கும் வகையில் உரையாற்றிய பிரதமர் யுனிலெவர் ஸ்ரீ லங்கா நிறுவனம் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே அவர்களின் நன்கொடையான 2கோடியே 50 லட்சம் ரூபா 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' கணக்கில் வரவு வைக்கப்பட்டதாகக் கூறியிருந்தார்.



இந்தத் தொகையை *11.01.2005* எனத் திகதியிடப்பட்ட 281612 இலக்க காசோலை மூலம் குறிப்பிட்ட நிறுவனம் பிரதமரின் காரியாலயத்துக்கு வழங்கியிருந்தது. இந்த நன் கொடை சம்பந்தமாக அறிந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சுனாமியால் பாதிக்கப்பட்ட தேர்தல் தொகுதிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இவ்வாறான நன்கொடைகளை யுனிலெவர் ஸ்ரீலங்கா நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் குறிப்பிட்ட அறிவுறுத்தல் பற்றி பத்திரிகை வாயிலாகத் தெரிந்துகொண்ட யுனிலெவர் ஸ்ரீலங்கா தலைவர் ஏ. மாலிக் அவருக்குக் கடிதம் ஒன்று எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தின் ஒருபகுதியை மட்டும் இங்கே தொட்டுக்காட்டுகிறோம்.

''யுனிலெவர் சிறிலங்கா நிறுவனம் சுனாமிக்குப் பின்னர் பல புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை அம்பாந்தோட்டை தேர்தல் தொகுதியில் அமுல் நடத்திவருகிறது. பொருளாதார முயற்சிகளுக்கு நிதி வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கு உணவளித்தல், பாடசாலைகளை இயங்கச் செய்தல் ஆகியன இவற்றில் சில.

இப்போது பிரதமரின் சுனாமி நிவாரண நன்கொடை மோசடி சம்பந்தமாக சி.ஐ.டி தனது விசாரணையை ஆரம்பிக்க உள்ள நிலையில் அவர் என்ன செய்வது என்று தெரியாமல் திணறுகிறார். அதன் அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்வதா அல்லது குற்றப்புலனாய்வுப் பிரிவில் தம்மீது பதியப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான அலுவல்களைக் கவனிப்பதா என்று புரியாமல் கைகளைப் பிசைந்து கொள்கிறார்.

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க மந்திரிசபையில் இன்னொரு மாற்றத்தை செய்வது பற்றியும் தீவிரமாக ஆலோசித்து வருகிறார். சர்வதேச சமுகத்திடமிருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஒரே வழி புதிய பிரதமர் ஒருவரை நியமிப்பதே என்று அவரது சிந்தனை திரும்பி இருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் துயர் நிறைந்த தமது வாழ்க்கைக்கு விடுதலை கிடைக்காமல் இன்றும் போராடிக்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ராஜபக்சவை நிறுத்துவது எப்படி என்று ஜனாதிபதி தமக்கு நெருக்கமானவர்களிடம் கேட்கிறாரென அறியமுடிகிறது.

தனது பரம எதிரியான ஜே.வி.பி உடன் நட்புறவு கொண்டாடி வரும் தன்னை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தாமல் தனக்கு வேண்டிய ஒருவரை நிறுத்துவதற்கு ஜனாதிபதிக்கு பொன்னான சந்தர்ப்பம் ஒன்றை பிரதமர் ராஜபக்ச தனது கைகளினாலேயே வழங்கி இருக்கிறார் என அரசியல்வட்டாரங்களில் கதை அடிபடுகிறது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

# விசர்நாய்க் கடியினால் வரும் றேபீஸ் நோய்க்கு மருந்தே இல்லை!

**கே: வயது 25. கடந்த வாரம் இரவு சினிமா பார்த்துவிட்டு வரும்போது ஒரு தெரு நாய் என்னைக் கடித்துவிட்டது. அடுத்த நாள் சென்று பார்த்தபோது அந்த நாய் இறந்து கிடந்தது. அது விசர் நாயா என்று தெரியவில்லை. உடனடியாக ஆஸ்பத்திரிக்குச் சென்று விஷயத்தை கூறிய போது விசர் நாய்க்கடிக்கான ஊசி மருந்தை தொடர்ந்து போடச் சொன்னார்கள். வயிற்றைச் சுற்றி 21 ஊசி போடுவார்கள் என்று நண்பர்கள் பயமுறுத்தியதால் நான் ஊசி போடப் போக வில்லை. எனக்கு விசர் வருமா?**



ப: உங்கள் நண்பர்கள் இன்னும் இறந்த காலத்தில் இருக்கின்றார்கள். இப்பொழுது விசர்நாய்க்கடிக்கான ஊசி மருந்தை அக்குளைச் சுற்றிப் போடுவதில்லை. கைகளின் தசைகளில் தான் போடுகின்றார்கள். அது தவிர உற்ற நண்பர்களின் பிழையான பேச்சைக்கேட்டு உங்கள் உயிரைக் கவனியாமல் விட்டுவிட்டீர்களே! உங்களுக்குத் தெரியுமா; இன்றைக்கு மருந்தே இல்லாத மருந்து கொடுத்தும் குணப்படுத்தமுடியாத ஒருநோய் என்றால் அது விசர்நாய்க் கடியினால் வரும் RABIES என்ற நோய்தான். இந்த ரேபிஸ நோய் கண்டவர்கள் உயிர் மீண்டதாக மருத்துவ சரித்திரத்தில் ஒரு சம்பவம் கூட இல்லை. அவ்வளவு கொடிய நோய் 'ரேபிஸ்'. ஆனால் – விசர் நாய் கடித்தும் – செய்ய வேண்டிய சிகிச்சைகளையும், போடவேண்டிய ஊசி மருந்துகளையும் சரிவர உபயோகித்தோமானால் இந்த 'ரேபிஸ்' நோயிலிருந்து நிச்சயமாக எம்மைப் பாதுகாத்துக்கொள்ளமுடியும்'. உங்களுக்கும் வாசகர்களுக்கும் பொதுவாக ஒருவிசர் நாயோ – தெருநாயோ கடித்தால் என்ன வழிமுறைகளை பின்பற்றவேண்டும் என்பதை இங்கு கூறுகின்றேன்.

எந்த நாய் கடித்தாலும் முதலில் கடிபட்ட காயத்தை பல தடவைகள் சவர்க்காரமும் நீரும் கொண்டு நன்றாக கழுவவேண்டும். இறுதியாக அயடின் திரவம் கொண்டு கழுவ வேண்டும். நாயின் பல் ஆழமாக தோலில் பதிந்திருந்தால் காயத்தை காற்று புகாவண்ணம் பாண்டேஜ் செய்வது, ஒட்சிசன் இல்லாத இடத்தில் வளரும் தொற்றுகளான – ரெட்டனஸ்(TETANUS) தொற்றுகள் வளர்ந்து ரெட்டனஸ்நோய் வர வசதி செய்தது போலாகி விடும். இப்படியான காயங்களை – நல்ல காற்றோட்டம் கிடைக்கின்ற வகையில் 'பன்டேஜ்' பண்ணவேண்டும.

அடுத்து கடித்த நாயைப் பற்றிய விஷயங்கள். கடித்த நாய் மேலும் பத்து நாட்கள் வரை உயிரோடிருந்தால் அதற்கு விசர் இல்லை எனலாம். ஆனால் நாய் பத்து நாட்களுக்குள் மரணமடைந்தால் அதனது தலையை வெட்டி கொழும்பில் உள்ள மருத்துவ ஆய்வு நிலையத்துக்கு (MEDICAL RESEARCH INSTITUTE) அனுப்பிவைக்க வேண்டும். அதன் பரிசோதனை முடிவு வரும் வரை கடிபட்டவர் விசர்நாய்க்கடிக்கான ரேபிஸ் எதிர்ப்பு ஊசிபோட்டு வரவேண்டும்.

நாயின் மூளையைச் சோதித்து வரும் முடிவு நோய்க்கிருமிகள் இருப்பதை அறிவித்தால் முழுமையான மொத்த தடுப்பு ஊசிகளையும் போடவேண்டும். சோதனை முடிவுகள் கிருமிகள் இல்லாததை அறிவித்தால் ஊசி மருந்தை நிறுத்திவிடலாம். விசர் நாயோ அல்லதுதெருநாயோ உங்களுக்குக் கடித்தது போல் – கடித்தால், ஆரம்பத்தில் கூறியவாறு காயத்துக்கு முதலுதவி சிகிச்சை செய்தபின்னர் ரேபிஸ் ஊசிமருந்து போடும் திட்டமுறையை சரிவர பின்பற்றவேண்டும்.

அந்த திட்டமுறை பின்வருமாறு: நாய் கடித்த அன்றும் பின்னர் 3ஆவது, 7ஆவது, 14ஆவது, 21அல்லது 28 ஆவது நாட்களில் ஊசி மருந்து ஏற்றப்படவேண்டும். இன்றைய நிலையில் இந்த திட்டமுறைக்கு (COURSE) குறைந்தது ரூபா 3000 ஆவது செலவாகும். எமது உயிரோடு ஒப்பிட்டு பார்க்கையில் இந்த 3000 ரூபா ஒரு பெரிதல்ல. கடித்த நாய் விசர் கொண்டது என்ற தெரிந்தால் முதலாவது ஊசியுடன் HUMAN RABIES IMMUNOGLOBIN என்ற ஊசி மருந்தையும் உடனே எடுப்பது மிக அவசியம். எனவே நீங்களும் வைத்தியரை சந்தித்து – அவரது ஆலோசனையை பெறவும்.

**கே: எனது மகள் வயது 5. திடீரென்று ஒருநாள் அவருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டது. ஊருக்குப் புதிதாக சுனாமி நிவாரண வேலைக்கு வந்திருந்த அமெரிக்க வைத்தியரிடம் கொண்டுபோய்க் காட்டினேன். அவர் நன்றாக சோதித்து பார்த்துவிட்டு. 'ஜீவனி' பக்கெட் ஒன்றை வாங்கி கரைத்துக் கொடுக்கச் சொன்னார். மருந்து கேட்டபோது 'மருந்து தேவையில்லை இந்த ஜீவனி கரைசலே போதும்' என்றார். வயிற்றோட்டத்துக்கு மருந்து தேவை இல்லையா? இது ஒரு புதுவித மருத்துவமா? விளக்கவும்.**

ப: உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டிருக்கும் வயிற்றோட்டத்துக்கான மருத்துவ முறையின் அடிப்படை இதுதான். வயிற்றோட்டம் என்பது சாதாரணமாக வயிற்றில் நோய்க்கிருமி தொற்றினால் அடிக்கடி மலம் போவது. இந்த மலப்போக்கு உடலின் நீர்த்தன்மையைக் குறைக்கும். எனவே குறையும் உடல் நீர்த்தன்மையை எவ்வளவு விரைவாக நாம் ஈடுகட்ட முடியுமோ – அவ்வளவு விரைவாக நீராகாரங்களையோ திரவங்களையோ கொடுத்து ஈடுகட்டவேண்டும். இப்படியான ஒரு நீராகாரம் ஜீவனி உப்புகள்.

இவற்றில் உடலுக்கு வேையான கனியுப்புகள் உள்ளன இதனைக்கரைத்து கொடுத்தால் இழப்பாகும் நீரையும் கனியுப்பையும் ஈடு செய்யலாம். உண்மையில் வயிற்றோட்டத்தின்போது அதற்கு காரணமான தொற்றுகள் மலத்தோடு வெளியேறி விடுவதால் அவற்றை அழிக்க விசேட தொற்று எதிர் மருந்துகள் (ANTIBIOTICS) தேவையில்ல.

குடலில் உள்ள தொற்றுகள் தேகத்திலும் தொற்றும் தன்மையானவை. காய்ச்சல், வாந்தி போன்ற குணங்கள் மூலம் தெரியப்பட்டால் மாத்திரம் ANTIBIOTICS உபயோகிப்பார்கள்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு – 14



மேலும் தேவையில்லாமல் ANTIBIOTICS உபயோகப்படுத்தப்படும்போது இந்த இரசாயன மாற்றத்தால் குடலில் வாழுகின்ற நன்மை தரும் உயினங்களும் அழிக்கப்படுகின்றன.

இதனால் குடல் பெலவீனப்படுத்தப்பட்டு அடிக்கடி மலம் கழிக்கும் தன்மை ஏற்படலாம்.

எனவேதான் சாதாரண வயிற்றோட்டங்களுக்குச் சரியான வைத்தியர்கள் ANTIBIOTICS கொடுப்பதில்லை. இழக்கப்படும் உப்புகள், நீர் என்பவற்றை ஈடுகட்ட ஜீவனி நீராகாரம், இளநீர் என்பவற்றைக் கொடுக்கின்றார்கள். இது புதிய சிகிச்சை முறை மட்டுமல்ல அறிவியல் சார்ந்த வைத்தியமுறையும் கூட.

# இந்தியா பாடம் படிக்க உதவிய....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படை வீரன் தாக்க முயல்வதை அவதானித்த ராஜீவ் காந்தி சற்றுக் குனியவே குறிதவறியது. ராஜீவ் காந்தி தப்பினார். பின்னர் இந்தியப் பிரதமரின் பாதுகாவலர்களால் அந்தக் கடற்படைச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டான்.

அணிவகுப்பு மரியாதையைப் படமெடுக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் புகைப்படப் பிடிப்பாளர்கள் அங்கு கூடியிருந்த போதிலும் ராஜீவ் காந்தி தாக்கப்பட்ட சம்பவத்தை படம்பிடிக்கும் வாய்ப்பு லேக் ஹவுஸ் நிறுவனத்தின் படப்பிடிப்பாளர் சேன விதானகமவுக்கே கிடைத்தது.

ராஜீவ் காந்நி தாக்கப்பட்டது தொடர்பான புகைப்படம் மறுநாள் வெளிநாடுகளிலுள்ள பத்திரிகைகளில் பிரசுரமானது. ஆனால், இந்நாட்டிலுள்ள பத்திரிகைகளில் அந்தப் படம் பிரசுரமாகவில்லை.

அந்தச் சம்பவம் பற்றிய செய்தி ' உள்நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவராதவாறு அரசாங்கம் பார்த்துக்கொண்டது.

துப்பாக்கியால் தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னரும் ராஜீவ் காந்தி தனது பணிகளைத் தொடர்ந்தார். அன்றுமாலை (29.07.1987) ஜனாதிபதி மாளிகையில் இலங்கை சார்பாக ஜே.ஆர். ஜேயவர்த்தானவும் இந்தியா சார்பாக ராஜீவ் காந்தியும் இலங்கை - இந்திய உடன்பாட்டில் கைச்சாத்திட்டனர்.

இந்தியக் குழுவில் நரசிம்மராவ், என்.டி.திவாரி, நத்வர்சிங், சிதம்பரம் ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

ஸ்ரீலங்கா அமைச்சர்களான பிரதமர் பிரேமதாஸவும் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ஒரு சில மணித்தியாலங்களுக்குள் இந்தியப் படையினரை ஏற்றிய விமானங்கள் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தன. இந்திய கடற்படைக்குச் சொந்தமாக இரு போர்க்கப்பல்கள் கொழும்பை அண்டிய கடற்பரப்பில் சஞ்சரித்தன.

இந்திய இராணுவத்தின் லெப்.ஜெனரல் திபேந்திரசிங் தலைமையில் ஆயிரக்கணக்கான இந்தியத் துருப்புகள் பலாலி வந்தடைந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அனைவரும் இந்திய விமானப்படை விமானங்கள் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இலங்கையில் பணியாற்றிய காலத்தில் புலிகளுடன் இடம்பெற்ற யுத்தத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியப் படையினர் கொல்லப்பட்டது மாத்திரமன்றி, இந்தியப் படைகள் இலங்கையில் இருந்து அவமானத்துடன் வெளியேறினர். அயல்நாட்டு அரசியல் விவகாரத்தில் வல்லாதிக்க நோக்குடன் தலையிட்டு இந்தியா படித்த பாடம் இது.


**'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்**

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250300 Col. Cms) | | |




## எதிர் சொற்கள்

1. நண்பர்கள் – பகைவர்கள்.
2. நன்மை – தீமை.
3. உதவி – உபத்திரம்.
4. ஞாபகம் – மறதி.
5. பலர் – சிலர்.
6. பொறுத்தார் – பொங்கினார்.
7. விருப்பு – வெறுப்பு.
8. தூய்மை – கபடம்.
9. சாந்தம் – கர்வம்.
10. உற்சாகம் – சோம்பல்.
11. பலம் – பலவீனம்.
12. ஒற்றுமை – வேற்றுமை.
13. இளையர் – முதியவர்.
14. வரவு – செலவு.
15. துணிவு – அச்சம்.

*பிரியதர்ஷன், தரம் 4,*
*கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,*
*கொழும்பு – 06.*

## உங்களுக்கு தெரியுமா

1. கோள்களில் எதிர்ப்பக்கமாக சுற்றும் கோள் எது தெரியுமா?

*யுரேனஸ்.*

2. மஞ்சள் ஆறு ஓடும் நாடு எது?

*சீனா.*

3. உலகிலேயே மிகப் பெரிய நூலகம் எது?

*லெனின் நூலகம் மொஸ்கோவில்*

4. உலகிலேயே முதன் முதலில் வருமான வரியை அறவிட்ட நாடு எது?

*பிரித்தானியா.*

5. உலகிலேயே முதல் முதலில் கண்மாற்று சிகிச்சை இடம் பெற்ற நாடு எது?

*அமெரிக்கா.*

*நே.சுவேந்திரா, தரம் – 09,*
*ஒட்.மகா.வித்தியாலயம்.*

## பொன் மொழிகள்

* கோபத்தினால் பிறரைத் திருத்துவதைவிட அன்பினால் திருத்திவிடலாம்.
* மரத்தை வெட்டித்தள்ளி பழத்தைப் பறிப்பதைவிட உலுக்கியே பழத்தைப் பறித்துவிடலாம்.
* உள்ளத்தில் கோபமாகிய புகை இருந்தால் முகமாகிய கண்ணாடி விகாரமடையும்.
* பொறுமைசாலியின் முகம் மின்சார விளக்கைப்போல் எப்போதும் அழகாகவே இருக்கும்.
* கோபக்காரர்கள் தாங்களும் சிரிக்க மாட்டார்கள், பிறர் சிரிப்பதைக் கண்டாலும் கோபமடைவார்கள்.

*கா.கமலினி,*
*மு/யோகபுரம் ம.வி,*
*மல்லாவி.*

# மூதாட்டியும் சேவலும்



தன்னந்தனியான கிராமம் அது. அந்த ஊரில் ஒரு மூதாட்டி சேவல் ஒன்றை வளர்த்து வந்தாள். தினமும் அவளது சேவல் சூரியன் உதிப்பதற்கு முன்பு கூவுவது வழக்கமாக இருந்தது. இதனால் அந்த மூதாட்டி தன் சேவல் கூவுவதால் தான் பொழுதே விடிகிறது. அது கூவாவிட்டால் சூரியன் உதிக்காது' என்றே நினைத்து விட்டாள்.

அதுவரை அடக்கமாகவும், அமைதியாகவும் வாழ்ந்து வந்த அவள் ஆணவம் பிடித்தவளாக மாறினாள். அவளுக்கு ஆதரவாக ஒரு சிலர் பேசத் தொடங்கவே மூதாட்டியின் அகங்காரத்திற்கு அளவே இல்லாமல் போய்விட்டது. இனிதான் இல்லாமல் கிராமத்து மக்கள் உயிர் வாழ்வது கடினம் என்ற முடிவுக்கு கூட வந்து விட்டாள் அவள்.

ஆனால் அவளுக்கு ஒரு சிலர்தவிர வேறு எவரும் பணியவில்லை. இதனால் கோபத்தில் தன் சேவலைத் தூக்கிக் கொண்டு அருகில் உள்ள காட்டுக்குப் போய்விட்டாள். "எனது சேவல் கூவாமல் இனி அந்த கிராமத்தில் சூரியன் உதிக்காது. எல்லோரும் நன்றாக அவஸ்தைப் படட்டும்" என்று சபிக்கவும் செய்தாள்.

மறுநாள் மேகமூட்டம் காரணமாக சூரியன் சற்று தாமதமாக உதித்தது. மூதாட்டியின் சேவலும் அன்று பார்த்து தாமதமாகக் கூவியது. இதனால் மூதாட்டிக்குப் பெருமை பிடிபடவில்லை.

'இன்னும் சில நாட்களில் கிராம மக்கள் என் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்பார்கள்' என்று நினைத்துக் கொண்டாள்.

நாட்கள் நகர்ந்தன. கிராம மக்கள் எவரும் அவளைத் தேடிச் செல்லவில்லை. உடனே கிராமத்தை நோக்கி தன் பார்வையைத் திருப்பினாள். அங்கு சூரியனின் ஒளி காரணமாக பட்டப்பகலாக இருந்தது. அதனால் குழப்பம் அடைந்தாள். "எனது சேவல்தான் இங்கிருக்கிறதே? பிறகு எப்படிச் சூரியன் உதித்தது?" என்று புலம்ப ஆரம்பித்தாள். கடைசியில் உண்மை விளங்கியது.

சூரியன் உதிக்க தன் சேவல் தான் காரணம் என்று நினைத்த அவளது தவறான எண்ணமும், அகந்தையும் அன்றோடு அகன்று விட்டன.

## சிறார்களின் கைவண்ணம்



*வி.சிவராம்,*
*பாலர் வகுப்பு,*
*ரெக்ஸாஸ் சர்வதேச பாடசாலை.*




*கே.நந்தியா,*
*சித்தன் குறிச்சி,*
*புதுகசி.*



*வ.மங்களேஸ்வரி,*
*இல. 577/13,*
*தர்மபுரம்.*

*டிலோஷனா, தரம் 4,*
*கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,*
*கொழும்பு 6.*






## மரபணு



பரம்பரையாக வரும் மரபுப் பண்புக்குக் காரணமாக இருக்கும் உயிர்மத்தின் பெயர்தான் 'மரபணு'. ஆங்கிலத்தில் இதை ஜீன் (Gene) என்று அழைக்கிறார்கள்.

ஒரு குழந்தை பிறந்தவுடன் அதைப் பார்ப்பவர்கள் 'அப்பா மாதிரி மூக்கு, அம்மா மாதிரி கண் காது, தாத்தா மாதிரி என்று கூறுவது வழக்கம். இப்படி ஒரு குழந்தை பிறக்கக் காரணமாக இருப்பது 'ஜீன்'(மரபணுக்)களே.

ஒரு உயிரினத்துக்கு (மனிதன் அல்லது விலங்கு அல்லது தாவர வகை) தேவையான புரதங்களை (Proteins) உருவாக்கும் தகவல்கள் பதிவு செய்யப்பட்டவை ஜீன் (மரபணுக்)கள் ஆகும். உயிரினம் எப்படி இருக்க வேண்டும் என்பது மட்டுமன்றி. அதன் உடல் அமைப்பு, நிறம், உடலின் ரசாயன மாற்றங்கள் போன்ற தகவல்கள் பதிவானவைதான் 'ஜீன்'கள். அந்த உயிரினத்தின் உணவுப் பழக்கவழக்கம், நோய் எதிர்ப்பு சக்தி, உடலைப் பாதிக்கும் நோய்கள் பற்றிய விவரம், அதன் மனநிலை, பழக்கவழக்கம் போன்றவை 'ஜீன்'களில் பதிவாகி இருக்கும். பல கோடி ஜீன்கள் (மரபணுக்கள்) இணைந்து சங்கிலித்தொடர் போன்ற அமைப்பை உருவாக்குகின்றன.

### குரோமோசோம்கள்

மரபணு தொடர்களைக் கொண்ட சங்கிலித் தொடர் அமைப்புக்கு குரோமோசோம் என்று பெயர். ஒரு உயிரினத்தின் உடலில் இருக்கும் 'செல்' (Cell) களில் உட்கருப் (Nucleus) பகுதியில் எக்ஸ் (x) மற்றும் வை (y) என்ற அமைப்பில் சங்கிலித் தொடராக ஜீன்கள் இருக்கும். இதை குரோமோசோம்கள் (Chromosome) என்று அழைக்கிறார்கள்.

## நட்சத்திரங்கள் மின்னுவது ஏன்

பரந்த வானில் வைரக் கற்களைப் பதித்துவிட்டது போல ஒளிவீசிக் கண் சிமிட்டும் நட்சத்திரங்கள் எத்தனை! எத்தனை!! இந்த நட்சத்திரங்கள் இத்தனை அழகாக எப்படி ஒளி வீசுகின்றன. எப்படி வண்ண வண்ண தோற்றங்களில் சிரித்து நிற்கின்றன.

அவற்றில் காணப்படும் உஷ்ணத்துக்கு ஏற்ப அவற்றின் நிறங்களில் மாற்றங்கள் உண்டாவதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

வைரங்களைப் போல் பளிச்சென்று விண்ணில் ஒளிவீசும் வெண்நிற நட்சத்திரங்களின் உஷ்ணநிலை ஏனைய நட்சத்திரங்களின் ஒளியைவிட மிக அதிகமாக இருப்பதாக விஞ்ஞானிகள் விளக்கம் அளிக்கிறார்கள். வெள்ளை நிற நட்சத்திரங்களின் உஷ்ண நிலை 30000 செண்டிகிரேட் என்று அவர்கள் கூறி உள்ளனர்.



மேலும் நட்சத்திரங்கள் மின்னி மின்னி ஒளிவீசுவதையும் நாம் அன்றாடம் பார்க்கிறோம் அல்லவா? அவை ஒன்றோடு ஒன்று சோடி சேரும்போது தான் அவ்வாறு மின்னிமின்னி ஒளி வீசுகின்றனவாம்.

நட்சத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று இணையும்போது ஒன்று பெரிதாகவும் இன்னொன்று சிறிதாகவும் இருக்கும். அவை ஒன்றை விட்டு ஒன்று நகரும் போது இரு நட்சத்திரங்களினது ஒளியும் எமக்கு மாறிமாறித் தெரிகின்றன. அப்போது தான் நட்சத்திரங்கள் மின்னுவதாக நாங்கள் நினைத்துக் கொள்கிறோம்.

## உலகின் மிகப்பெரிய பாய்மரக் கப்பல்கள் போட்டி!



உலகின் மிகப்பெரிய பாய்மரக் கப்பல்களின் போட்டி வடக்கு ஜெர்மனியின் பால்டிக் கடலில் நடைபெற்றபோது, உலகெங்கிலுமிருந்து 115 பாய்மரக் கப்பல்கள் பால்டிக் கடலுக்கு வந்து போட்டியில் கலந்து கொண்டன! 'கீலர்வோஜி' என்று அழைக்கப்படும் அகில உலக பாய்மரக் கப்பல்களின் இந்த சம்பியன்ஷிப் போட்டியில், கப்பல்கள் தங்களது பாய்களை விரித்துக் கடலில் சென்ற காட்சி பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது! உலகில் நடைபெறும் மிகப் பெரிய பாய்மரக் கப்பல்களின் போட்டி இதுவேயாகும்!

## ஸ்டெதஸ்கோப்



நம்மில் 'ஸ்டெத்தஸ்கோப்'பைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. ஒருமுறையாவது டாக்டரிடம் சென்றுவந்திருப்போம். நம் இதயத் துடிப்பின் ஒலியைக் கேட்டுச் சோதிக்க, டாக்டர் தன் கழுத்தில் (நிரந்தரமாலையாக)போட்டிருப்பாரே—அதேதான் 'ஸ்டெத்தாஸ்கோப்'. இதன் மூலம் டாக்டர், நோயாளியின் உடல் நிலையை அறிந்து கொள்வார்.

1861ஆம் ஆண்டு இதயத்துடிப்பின் ஒலியைக் கேட்க உதவும் கருவியான 'ஸ்டெத்தஸ்கோப்' கண்டுபிடிக்கப்பட்டது. ரெனி தியோபில்ஹியாசினேட்லான்னக் (இது பெயரா, வாக்கியமா?) என்ற பிரான்ஸ் நாட்டுக்காரர் தான் 'ஸ்டெத்தாஸ்கோப்' கண்டுபிடிப்புக்கு அத்திவாரம் போட்டவர்.

அவர் கண்டு பிடித்த முதல் ''ஸ்டெத்தஸ்கோப்' மரத்தாலான குழாய் போன்று இருந்தது. இதன் ஒரு முனையை நோயாளியின் மார்பில் வைத்து, இன்னொரு முனையை காதில் வைத்து இதயத்துடிப்பின் ஓசையை தெளிவாகக் கேட்க முடிந்தது.

அதன்பிறகு தான், இரு காதுகளாலும் துல்லியமாக கேட்க ஏதுவாக இரு குழாய்கள் பொருத்தப்பட்ட 'ஸ்டெத்தாஸ்கோப்' கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் இதயத்துடிப்பின் ஒலியை இன்னும் துல்லியமாகக் கேட்க முடிந்தது.

என்ன வாசகர்களே 'ஸ்டெத்தாஸ்கோப்' கண்டுபிடிக்கப்பட்ட தகவல்களை தெரிந்து

## பாட்டி! கதை இனி வேண்டாம்

குழந்தைகளைத் தூங்க வைப்பதற்கு முன்பு பாட்டிகள் கதை சொல்வது வழக்கம். அழுது அடம் பிடித்து தூங்க மறுக்கும் குழந்தைகள் கூட, மீண்டும் மீண்டும் சொன்ன கதை என்றாலும் கூட பாட்டிகள் கதை சொல்லத் தொடங்கியதும் கண்மூடித் தூங்கிப்போகும். ஆனால் இன்று கூட்டுக்குடும்பம் இல்லாததால் குழந்தைகளைத் தூங்கவைக்க பெற்றோர் படாதபாடு பட வேண்டி உள்ளது.



இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ஒல்லாந்து நாட்டு நிறுவனம் ஒன்று புது ஏற்பாடு செய்துள்ளது. செல்போன் மூலமாகவே இந்த நிறுவனம் கதை சொல்கிறது. அந்த நிறுவனம் அளித்துள்ள பட்டியலில் எந்தக் கதை வேண்டுமோ அதற்கான பட்டனைத் தட்டி செல்போனைக் குழந்தையிடம் கொடுத்தால் போதும்; கதை கேட்டுக் குழந்தை தூங்கிப் போகும்.

இதற்காக கேட்ட கதையையே திரும்பத் திரும்ப கேட்க வேண்டியதும் இல்லை. பட்டியல் மாறிக்கொண்டே இருக்கும். ஆனால் ஒன்று, 10 நிமிட நேரம் கதை சொல்ல ரூ 350 கட்டணம் செலுத்த வேண்டும். இருப்பினும் இந்த முறை ஒல்லாந்தில் பிரபலமாகி வருகிறது.

## மலேசியா



அமைவிடம்:– தென்கிழக்கு ஆசியா

மலேசியக் குடாநாடும் போர்னியோ தீவின் சாபாவும் சரவாக்கும் இணைந்ததே மலேசியா ஆகும்.

எல்லைகள்:– வடக்கில் தாய்லாந்து, தெற்கில் சிங்கப்பூர் எல்லைகளாக அமைந்துள்ளன.

தலைநகர்:– கோலாலம்பூர்

காலநிலை:– உஷ்ண வலயக் காலநிலை. உயர்நிலங்களில் குளிர் காணப்படும். வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக்காற்றின் மூலம் அதிக மழை நவம்பர் முதல் ஏப்ரல் வரை கிடைக்கிறது. தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக்காற்று மேயிலிருந்து அக்டோபர் வரை வீசுகிறது. இந்தக் காலத்தில் வரட்சிநிலவும்.

பொருளாதாரம்:– மரக்கைத்தொழில், இறப்பர் கைத்தொழில். உலகில் அதிகளவு இறப்பரை உற்பத்தி செய்யும் நாடு மலேசியா.

சனத்தொகை:– பெரும்பான்மையினர் மலாயர்கள். சீனர்கள் மலேசியாவின் குடிசனத்தொகையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்கள். 10% இந்தியர், மொத்த சனத்தொகை 23, 533, 482



மொழிகள்:– மலே, சீனமொழி, தமிழ். வர்த்தக மொழியாகவும் அங்குள்ள வேறுபட்ட இனத்தவரின் தொடர்பு மொழியாகவும் ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறது.

கலாசார விழாக்கள்:– சீன புத்தாண்டு, தீபாவளி, வெசாக்.

# பழமைக்கு எதிரான பண்பாட்டுப் புரட்சி

**02**


யுங் சாங்

## மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்

**தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மற்றொரு பரிமாணத்தை - பக்கத்தை - அந்த மனிதருள் புதைந்திருக்கும் இன்னொரு அதிசய ஜீவனை - வெளிப்படுத்துகிறது 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.**

சீனப் பண்பாட்டுப் புரட்சி பற்றி பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மாக்சிய தத்துவாசிரியர்கள் பலர் மதிப்பாய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். பல கோணங்களில் இந்த மாபெரும் வரலாற்று நிகழ்வு விமர்சிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் சீனாவுக்கு வெளியேயிருந்து சீனம் பற்றிப் பார்க்கப்பட்ட பார்வைகள். உள்ளார்ந்த அனுபவமின்றி நிகழ்த்தப்பட்ட புறநிலை நோக்குகள். ஆனால், சீனாவிலிருந்து, சீன வரலாற்றுத் தரிசனத்துடன் எழுதப்பட்ட நூல்கள் மிகவும் சொற்பம். இந்த வகையில், யுங் சாங் எனப்படும் சீனப் பெண்மணி எழுதியுள்ள 'காட்டு அன்னங்கள்; சீனாவின் மூன்று புதல்விகள்' (Wild Swans; Three Daughters of China) என்ற நூல், சீனப் பண்பாட்டுப் புரட்சியின் போது நிகழ்ந்த அனர்த்தங்களை, சுய அனுபவப் பார்வையில் தத்ரூபமாக சித்திரிக்க முனைகிறது.

இருபதாம் நூற்றாண்டின் சீன வரலாறு மிகவும் சிக்கலானது. நீண்டது. மிகவும் கொந்தளிப்பானது. ஜப்பானின் ஆதிக்கப் பிடிக்குள் சிதைந்து கிடந்த சீனம், நிமிர்ந்து எழுந்து போராடி, மிகவும் பலம் பொருந்திய பொதுவுடமைச் சமூகமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்ட ஒரு யுக வரலாறு. இப்படியானதொரு நீண்ட, புரட்சிகர நிகழ்வுகளைக் கொண்ட சிக்கலான வரலாற்றுப் பின்புலத்தில் மூன்று பெண்களின் சுயசரிதம் பதியப்படுகிறது. தனது பாட்டி, தனது தாய், தன்னுடையதாக மூன்று பரம்பரையை உள்ளடக்கி, தனது குடும்பத்தின் வாழ்வனுபவத்துடன் பின்னிப் பிணைத்து இந்த சுயசரித ஆக்கத்தைப் படைத்திருக்கிறார் நூலாசிரியர்.

எழுநூறு பக்கங்களைக் கொண்ட பெரிய நூல். நீண்டதொரு சமூக நாவல் போன்று கதை நகர்த்தப்படுகிறது. சீன சமூக வாழ்வும், அதில் இழையோடும் சமூக உறவுகளும், அந்த உறவுகளைத் தாங்கிவரும் பாத்திரங்களும், அந்தப் பாத்திரங்கள் வெளிப்படுத்தும் நுண்ணிய மனவுணர்வுகளும், ஏக்கங்களும் மிகவும் நுட்பமாகச் சித்திரிக்கப்படுகின்றன. ஒரு தேசத்தின் வரலாற்றுப் பின்புலத்தில் ஒரு குடும்பத்தின் கதை சொல்லப்படும் பாங்கு சிறப்பாக அமைகிறது.

சீனப் பண்பாட்டுப் புரட்சி இந்த நூலின் மையமாக அமைகிறது. இந்தக் கலாசாரக் கிளர்ச்சி விளைவித்த அனர்த்தங்களையும் அதனால் சீனச் சமூகம் சந்தித்த அவலங்களையும் உண்மைச் சம்பவங்கள் வாயிலாக மிகவும் உணர்வுபூர்வமாக வரைந்து காட்டுகிறரர் யுங் சாங்.

காட்டுத்தீ போல பண்பாட்டுப் புரட்சி நாடெங்கும் பரவுகிறது. அதன் தீ நாக்குகள் யுங் சாங்கின் குடும்பத்தையும் தீண்டுகின்றன.

நூர்லாசிரியையின் தந்தை ஒரு கம்யூனிஸ்ட் உயர் அதிகாரி. நீண்ட, கடின உழைப்பால் உயர்ந்தவர். கெரில்லா வீரனாக ஆயுதமேந்தி தேசிய விடுதலைக்காக போரிட்டவர். கட்சியின் விசுவாசி. மாவோவை சீனத்தின் கடவுளாக வரித்துக் கொண்டவர். தாயாரும் ஒரு புரட்சிவாதி. கட்சிப் பிரமுகர். யுங் சாங்கின் குடும்பம் ஒரு கம்யூனிஸ்ட் குடும்பம்.

கம்யூனிஸ்ட் உயர் அதிகாரிகளையும் பண்பாட்டுப் புரட்சி விட்டு வைக்கவில்லை. யுங் சாங்கின் பெற்றோர் மீது 'எதிர்ப் புரட்சியாளர்' எனக் குற்றம் சுமத்தப்படுகிறது. முதலில் தந்தையும், பின்னர் தாயாரும் கைதாகின்றனர்.

இரகசிய விசாரணைகளில் இழிவுபடுத்தப்பட்டு, கண்டனக் கூட்டங்களில் அவமதிக்கப்பட்டு, தடுப்பு முகாம்களில் வதைபட்டு, பெற்றோர் கொடுமைக்கு ஆளாக யுங் சாங்கின் குடும்பம் சிதைகிறது. தாய் மனமுடைந்து நோயாளியாக, தந்தைக்குப் பைத்தியம் பிடிக்கிறது. இந்த அவலமான சூழ்நிலையில் செம்படையில் சேவையாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறார் யுங் சாங். அந்த இளைஞர் பட்டாளம் நிகழ்த்திய அனர்த்தங்கள் அவரைத் திகைக்க வைக்கின்றன. தனிப்பட்ட சோகமும் சமூகத்தின் அவலமும் தன்னைச் சூழ நிகழ்ந்து கொண்டிருக்கும் அராஜகமும் - எல்லாமே - அபத்தமாக, அர்த்தமற்ற கேலிக் கூத்தாக அவருக்குத் தென்பட்டன.

கட்டுக்கடங்காத காட்டாறு போல சீற்றம் கொண்டு பாய்ந்த புரட்சி வெள்ளம் நாடெங்கும் பேரழிவை ஏற்படுத்தியது. இலக்கற்ற, நோக்கற்ற இளைஞர் வன்முறையால், எத்தனையோ அப்பாவிகள் பழிவாங்கப்படுகின்றனர். யுங் சாங்கின் கண்முன்னே இந்தக் கொடுமை நடக்கிறது. பழமைவாதிகள் என்றும் துரோகிகள் என்றும் எதிர்ப் புரட்சியாளர் என்றும் முதலாளித்துவப் போக்காளர் என்றும் பிற்போக்குப் புத்திஜீவிகள் என்றும் பலர் வேட்டையாடப்பட்டு இம்சைப்படுத்தப்பட்ட சோக நிகழ்வுகளை அவர் மிகவும் உருக்கமாக எழுதுகிறார். பண்பாட்டுப் புரட்சி, மனிதர்களை மட்டுமன்றி உடைமைகளையும் விட்டு வைக்கவில்லை. நூல்கள், சிற்பங்கள், ஓவியங்கள், அரும் பழம் பொருட்கள் என்ற வகையில் பழமையைச் சித்திரித்த பண்பாட்டுச் சின்னங்கள் அனைத்துமே நாசமாக்கப்பட்டன. கலையம்சம் பொருந்திய பல புராதனக் கட்டடங்கள் கூட இடித்துத் தகர்க்கப்பட்டன. மாக்சிய நூல்கள், மாவோவின் எழுத்துக்கள் தவிர்ந்த ஏனைய படைப்புகள், பழம் பெரும் இலக்கியங்கள், தத்துவங்கள், சாஸ்திரங்கள், மேலைநாட்டு நூல்கள் எல்லாமே பண்பாட்டுப் புரட்சித் தீயில் பொசுக்கப்பட்டன எனக் கூறுகிறார் நூலாசிரியை. புத்தகங்கள் மலை மலையாகக் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்ட கோரக் காட்சிகள் யுங் சாங்கின் ஆன்மாவைச் சுட்டு விடுகின்றன. பண்பாட்டுப் புரட்சி, சீனக் கலாசாரப் பொக்கிஷங்களையே அழித்து விடுவதாக அவர் மனம் வெந்து எழுதுகிறார். இந்தக் கோரத் தாண்டவத்தை நிகழ்த்திய சீனத் தலைமை மீது அவருக்கு கோபாவேசம் பொங்குகிறது. மாவோ மீது முழுப் பழியையும் சுமத்துகிறார்.

பண்பாட்டுப்புரட்சியைத் தொடக்கிவைத்தவர் மாவோ. அதனை இயக்கி வைத்தவரும் அவரே. எனவே, இந்தப் புரட்சியால் நிகழ்ந்த அராஜகம் அனைத்திற்கும் அவரே பொறுப்பாளர் ஆவார். மாவோ சாதிக்க விரும்பியது வேறு. ஆனால், நிகழ்ந்தது வேறு. அந்த நிகழ்வுகளை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. மிகவும் கட்டுப்பாடான கட்சி அமைப்பிற்கு எதிராக, கட்டுப்பாடற்ற இளைஞர் சேனையை கட்டவிழ்த்து விட்டது அவர் புரிந்த மாபெரும் வரலாற்றுத் தவறு. கடிவாளம் அறுந்த குதிரைபோல திசைமாறி ஓடியது செம்படை. அதனை நெறிப்படுத்த அவரால் முடியவில்லை. பழமைவாத சிந்தனையைக் களைந்தெறிய மாவோ விரும்பினார் என்பது உண்மை. ஆனால், நூல்களை எரிக்கவோ, அன்றி பழைய பண்பாட்டுச் சின்னங்களை அழிக்கவோ அவர் உத்தரவு பிறப்பிக்கவில்லை. ஆனால் செம்படையோ, மாவோவின் பிரகடனங்களைத் தவறாகப் புரிந்து கொண்டு, தான்தோன்றித்தனமாக நடந்தது. ஆயினும் அணைகளைக் கட்டாமல் வெள்ளத்தை ஓட விட்டது மாவோ இழைத்த தவறு.

சீன சோஷலிச நிர்மாணம் பற்றி ஒரு பரந்த, தெளிந்த பார்வையுடன் யுங் சாங் இந்த நூலைப் படைக்கவில்லை. அவர் தனது குடும்பத்தின் சுவர்களுக்குள் நின்று, தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் எழுதுகிறார். அந்த எழுத்தில் ஒரு புறம் ஆழமான சோகமும், மறுபுறம் வக்கிரமான கோபமும் தொனிக்கின்றன. துயரம் தோய்ந்த வாழ்வனுபவமும், கனவுகள் உடைந்த விரக்தியும் அவருக்கு கம்யூனிசத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்துகின்றன. அந்தக் கசப்புணர்வு சீனச் சமூகம் மீது திரும்புகிறது. செஞ்சீனத்தின் முகம் அவருக்கு அசிங்கமாகத் தென்படுகிறது. போராலும் புரட்சியாலும், கொந்தளிப்பான அரசியலாலும் சீர் குலைந்த ஒரு சமுதாயமாக அவர் சீனத்தைக் காண்கிறார். இந்தப் பார்வையின் அடிப்படையில் சீன வரலாற்றை ஒரு நீண்ட, முடிவில்லாத துன்பியல் நாடகமாக அவர் சித்திரிக்க முனைகிறார்.


ஆன்மாவை இழந்த மனிதர்களாக, எதற்கும் பணிந்து கொடுக்கும் பொம்மைகளாக, சீன விவசாயிகளை அவர் விவரிக்கிறார். இது மிகவும் தவறான கணிப்பு. ஓர் அபத்தமான பார்வை. சீன விவசாய வர்க்கமானது நவசீனத்தின் முதுகெலும்பு. ஜப்பானிய ஆதிக்கத்திற்கு எதிராக, சீனப் பிரபுத்துவ கொடுமைக்கு எதிராக, தேச விடுதலை வேண்டிப் போரிட்ட மாபெரும் மக்கள் சக்தியை யுங் சாங் இழிவுபடுத்த முயல்வது அவரது முதிர்ச்சியற்ற பார்வையை எடுத்துக் காட்டுகிறது. நகரப் புற வாழ்வும் உயரதிகார வர்க்கப் பின்னணியும் இப்படியானதொரு தீட்சண்யமற்ற நோக்கிற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

சீனாவை ஒரு நரகமாகவும் மேற்குலகை ஒரு சுவர்க்கமாகவும் அவர் வர்ணிக்கிறார். மேற்குலகில் அழகான ஆடைகள் இருக்கின்றன. வாசிப்பதற்கு நிறையப் புத்தகங்கள் இருக்கின்றன. பார்த்து ரசிக்கப் பூங்காக்கள் இருக்கின்றன, பொழுது போக்கிற்கு களியாட்டங்கள் இருக்கின்றன என்றெல்லாம் மிகவும் சிறுபிள்ளைத்தனமாக எழுதுகிறார். மேற்குலக நாகரிகம் உயர்ந்தது என்று சொல்கிறார். மேற்குலகில் பண்பு இருக்கிறது, அன்பு இருக்கிறது, வன்முறை அகன்ற மென்முறை இருக்கிறது, அமைதி இருக்கிறது, வர்க்க வேறுபாடற்ற சகோதரத்துவம் இருக்கிறது என்றெல்லாம் அவர் எழுதுவதைப் பார்க்கும் பொழுது வேடிக்கையாக இருக்கிறது. மேற்குலகில் நிலவும் சமூக முரண்பாடுகளையும், சீர்கேடுகளையும் வன்முறைகளையும் அவர் கண்டு கொள்ளாதது வியப்பாக இருக்கிறது. அத்துடன் உலக காலனித்துவ வரலாற்றையும், இந்த நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாற்றையும் அவர் செம்மையாகப் படிக்கவில்லை எனத் தோன்றுகிறது. சீனம் ஒரு பெரிய பூதம், ஆபத்தான பூதம். அதனை நிரந்தர தூக்கத்தில் வைத்திருப்பது அவசியம் என மேற்குலகம் சீன மக்களிடையே அபின் போதையை ஊக்குவித்த வரலாற்று நிகழ்வுகள் எதுவும் அவருக்குத் தெரியாது போல குருட்டுத்தனமான மேற்குலக மோகம் நாட்டுப்பற்றை அவரிடம் மழுங்கடித்து விட்டிருக்கிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே அவர் நாட்டை விட்டு ஓடி லண்டனில் தஞ்சம் புகுந்திருக்கிறார். நாடு பெயர்ந்திருக்கும் அவருக்கு லண்டன் சுவர்க்கமாகத் தெரிகிறது போலும். அவரது இன்றைய சீமை அனுபவங்கள் எமக்குத் தேவைப்படா. ஆனால் அவரது அன்றைய சீன அனுபவங்கள் எமக்கு பயன்தரக்கூடியவை. எனினும் மேற்குலகமே திகைக்கும் வகையில் பொருளியப் புதுமைகள் படைத்து நவீன மயமாகி வரும் இன்றைய நவசீனம் பற்றி அவர் அறியாதிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

அடுத்தவாரம்
'அதிகாரத்தின் அரூப கரங்கள்'



# விடுதலை



சுடர் ஒளி சிறுகதை

# ஒரு கொலையும் மூன்று பிரேதங்களும்

-இளைய அப்துல்லா-

லண்டனில் ஒரு ரூமில் நான்கு பேர் படுக்கிறார்கள் என்றால் நம்புவார்களா? படுக்கிறார்கள். 12X10 ரூமில் நான்கு பேர். வீட்டு மனிசி குஜராத்தி. ''அன்ரி குறைஞ்சது 2 டபிள் கட்டில் வாங்கித் தாங்கோ'' என்று எத்தனை தரம் கேட்டாயிற்று. அன்ரி 30 ஆம் திகதி கிழமைக்காசு வாங்க, வாசல் திறப்பு ஓட்டைக்குள்ளாலை பார்த்து தட்டும்.

''திறப்பு ஓட்டைக்குள்ளாலை பார்க்க வேண்டாம்'' என்று எத்தனை தரம் சொல்லியாச்சு. அன்ரி அந்தப் பழக்கத்தை விடுவதாக இல்லை. காலையில் படுக்கும் போது, உடம்பில் அண்டர் வெயார் இருக்கும், இல்லாமல் இருக்கும். சாரம் இருக்கும், இல்லாமல் இருக்கும். அன்ரிக்கு அதெல்லாம் பிரச்சினை இல்லை. அன்ரிக்கு வயது 65.

மேலே 3 ரூம். கீழே இரண்டு ரூம். அன்ரிக்கு ஒரு மகன். அவன் கேம்பிறிஜ்ஜில் படிக்கிறான். அவன் இரண்டு கிழமைக்கு ஒரு சனிக்கிழமை வருவான். ஞாயிற்றுக்கிழமை போய் விடுவான்.

மூன்று ரூமில் 2 பெரியது, ஒன்று சிறியது. ஒரு ரூமில் மல்லுப்பிடித்து 2 பேர் மட்டும் முதல் வந்தவர்கள் இருக்கிறார்கள். அந்த இரண்டு பேரும் மாணவர்கள்.

எங்களுக்கு லண்டன் புதுசு. அன்ரியின் விலாசம் ஒரு 'குறோசரி' கடையில் விளம்பரப் பலகையில் போட்டிருந்தது. 4 பேரும் ஒன்றாக கென்டயினரில் இருந்து வந்தவர்கள். 4 பேரும் ஒன்றாகவே இருப்போம் என்றும் துணையாக இருப்போம் என்றும் கதைத்தது இப்பொழுது வரை நீடிக்கிறது.

ஹவுன்ஸ்லோவில் 'சமர்பீல்' சுபர் மார்க்கட்டில் சாமான் அடுக்கும் வேலை கிடைத்தது 4 பேருக்கும் ஒன்றாக. நல்லதாகிப் போய் விட்டது. கிறிஸ்மஸ் சீசனுக்கு வேலை. வேலை இடுப்பு பெயர்ந்து வந்துவிடும். வெள்ளைக்காரன் என்ன பிரகிருதியோ தெரியாது. கிறிஸ்மஸ்ஸுக்கு அப்பிடி சாமான் வாங்குவான்.

ரூம் கேட்டுப் போகும்போது அன்ரி வலு சந்தோஷமாகத்தான் இருந்தா. ''4 பேரும் ஒன்றாக இருக்கிறீங்களா'' என்று ஒரு கேள்வி கேட்டா. அப்பொழுது எல்லோரும் ''ஓம்'' என்று ஒன்றாகவே சொன்னோம். லண்டன் நெளிவு சுளிவுகள் எதுவும் தெரியாது எங்களுக்கு. அன்ரி வெறும் மடியிலை பால் கறந்திட்டா. ''ஒருத்தர் 50 பவுண்ஸ் தாங்கோ''

''சரி'', ''நாலு மெற்ரஸ் தாறன்'', ''சரி''

''நாங்கள் குருநானக்கின் டிவோட்டீஸ்''

''சரி அன்ரி.'' ''நாங்கள் எந்த வகையான மச்சம் மாமிசம், புலால், முட்டை எதுவுமே சாப்பிடமாட்டோம். சமைக்க மாட்டோம். நீங்களும் இவைகளை இங்கே சமைக்க முடியாது. வெளியில் இருந்து கொண்டுவந்து சாப்பிடுவது பரவாயில்லை. ஆனால் மீன் முள்ளுகள், கோழி எலும்புகள் என்ரை கண்களில் படக்கூடாது. அப்பிடிப் பட்டால் அந்த நிமிஷமே ரூமை காலி பண்ணிவிட வேண்டும். வேறு யாரையும் ரூமுக்கு கூட்டி வரக்கூடாது. குறிப்பாக பெண்பிள்ளைகள். கீழே உள்ள விசிற்றிங் ரூமை பாவிக்கக்கூடாது. எக்ஸ்ட்றா ஹீற்றரை பாவிக்கக் கூடாது. குளிக்கிற நேரம் கவனமாக இருக்க வேண்டும். 'பாத்'தில் தண்ணீர் நிரப்பி குளிக்கக்கூடாது. ரொய்லட்டில் சிக்கன பிறஸரை அழுத்தித்தான் தண்ணீரை அடிக்க வேண்டும்.

குசினி காஸ் அடுப்பை எப்போதும் சமையல் முடிந்தவுடன் அழகாக துடைக்க வேண்டும். பின் கதவை திறக்கக் கூடாது. கதவை உள்ளால் தாள்பாளிடவேண்டும்.'' இன்னும் மறந்து போன நிபந்தனைகளுடன் ரூமை எங்களுக்கு கட்டியடித்துவிட்டார் குஜராத் அன்ரி.

அந்தக் காலத்தில் குஜராத், பஞ்சாபில் இருந்து வந்தவர்கள், வீடு மனைகளை வாங்கிப் போட்டு வலு சந்தோஷமாக பிரிட்டிஷ் சிற்றிஸனோடு இருக்கிறார்கள். கடைகள் கண்ணிகள், பெரிய சிறிய வியாபாரம் என்று பஞ்சாபிகள் 'மிடில் செக்ஸ்' பகுதியில் செழிப்பாகவே இருக்கிறார்கள். அன்ரியின் குணம் ஒரு கிழமையில் தெரிந்தது.

போற நேரம் வாற நேரம் ஒரு மின்சார மீற்றரில் தான் கண்ணை வைத்துக் கொண்டிருக்கும் கண்கொத்திப் பாம்பாட்டம். எங்களோடு முதல் நாள் சிரித்ததோடு சரி. அதற்கு பிறகு எங்களை ஏதோ எதிரி மாதிரித்தான் பார்த்தது.

சப்பாத்தியும் கிழங்கும், சப்பாத்தியும் பருப்பும், சப்பாத்தியும் முட்டைக் கோஸும், சப்பாத்தியும் பயறுக்கறியும் இதைவிட்டால் அன்ரி வேறெதையும் சமைத்து சாபிட்டதைக் காணவில்லை.

எதேச்சையாக அன்ரி என்னைக் கண்டால் லேசாய் ஒரு சிரிப்பு சிரிக்கும். அதற்கு காரணமிருக்கிறது. எனக்கு 'உருது' மொழி தெரியும். உருதில்தான் நான் அன்ரியோடு கதைப்பது. உருதுதான் அன்ரிக்கும் எனக்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்தியிருந்தது.

அன்ரியின் புருஷன்தான் 35 வருஷத்துக்கு முந்தி இந்த வீட்டை வாங்கினது. 15 வருஷம் மோர்கேஜ் கட்டினது. திரும்ப வீடு சொந்தமானது. அன்ரியின் புருஷன் பிரிட்டிஷ் ஆமியில் வேலை செய்தது. அன்ரி லவ் பண்ணி கல்யாணம் முடித்தது. அன்ரிக்கு ஒரு அழகான மகள் சவுத் ஹேரலில் இருப்பது போன்ற விடயங்களை அன்ரியிடமிருந்து எனக்கு கறக்க வைத்தது உருது தான்.

அன்ரி ஒரு நேரத்தில் ஒரு உருவங்கொள்ளும் சூரனை மாதிரி. அன்ரியின் மகள் வீட்டுக்கு வரும் பொழுது நாங்கள் எவருமே காணவில்லை. அன்ரியின் மகள் நல்ல வடிவு என்று ஒரு நாள் சொன்னதோடு சரி.

பெரிய தலைப்பாகை, நீண்டமுடி, கைவளையம், பைஜாமா ஜிப்பா, கிறீம் பூசிய தாடி, வாள் சகிதம் ஒருவர் அன்ரியின் வீட்டுக்கு வருவார். அவர் தம்பி என்று அன்ரி ஒருநாள் சொன்னா. இன்னொருநாள் அன்ரி அந்த தலைப்பா தம்பியின் மடியில் படுத்திருந்ததை எதேச்சையாகப் பார்த்தேன். அப்பொழுது அவர் தலைப்பாகை கட்டியிருக்கவில்லை. முடி நிலத்தைத் தொட்டது. அன்ரி முகத்தில் சலனமில்லாமல் மடியில் இருந்து எழும்பினா.

நான் சாவகாசமாகவே கேட்டேன். ''எப்போது முடி கடைசியாக வெட்டினனீங்கள்.''

''நான் பிறந்ததில் இருந்து வெட்டவே இல்லை. எனக்கு இப்பொழுது 40 வயது'' என்றார் தலைப்பாக்காரர். ரூம் பெரும் நெருக்கடியாக இருந்தது. இப்பொழுது எங்களுக்கு 4 பேருக்கு ஒரு ரூம்! ஆனால் ஒரு ஆள் 50 பவுண்ஸ் கொடுப்பது அநியாயம். ஒரு தனிரூம் எடுப்பது என்றால் 70 பவுண்ஸ் தான் வரும். அன்ரி எங்களிட்டை கொள்ளையடிக்கிறா. தனியப்போவம் என்றால் 70 பவுண்ஸ் என்றாலும் 20 பவுண்ஸ் ஒவ்வொரு வருக்கும்கூட. நாலு மூலைக்கும் 4 சிறிய 'மெட்ரஸ்' போட்டு அன்ரி சிக்கனமாகப் படுக்க விட்டிருந்தா. அது 'மெட்ரஸ்' என்றால் இலவம் பஞ்சு போட்டு துணியில் தைத்த ஒன்று. கீழே 'காட்போட்' போட்டு அதற்கு மேல்தான் இதனைப் போட்டு படுக்க வேண்டும்.

எங்களுக்கு இப்பொழுது 3 மாதங்கள். லண்டன் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக பழகிவிட்டது. 'அண்டர் கிரவுண்டில்' போகத் தெரியும். லண்டன் சிற்றிக்கு போகத் தெரியும். 'சமர் பீலில்' தமிழ் ஆட்கள் வர தமிழில் கதைக்க வலு சந்தோஷமாக இருக்கும்.

கிறிஸ்மஸ்ஸுக்கு ஞாயிற்றுக்கிழமையும் சனம். திங்கட்கிழமையில் இருந்து வெள்ளிக்கிழமை வரையும் உழைப்பார்கள் வெள்ளைக்காரர்கள். வெள்ளிக்கிழமை Pubக்கு போய் குடிச்சு வெறிச்சு சந்தோஷப்பட்டு ஞாயிற்றுக்கிழமைக்கு முளிப்பார்கள். பிறகு திங்கட்கிழமை வெள்ளிக்கிழமை என்று எந்த கவலையுமில்லாமல் கழிப்பார்கள். உலகத்தில் வாழ்க்கையை 'என்ஜோய்' பண்ணு என்பார்கள்.

சமர்பீலில் ஒரு நாள் எதேச்சையாக சந்தித்தவர்தான் ஜோர்ஜ். திடீரென்று மிகவும் கவலையோடு வந்தார். ''இன்றைக்கு நான் தற்கொலை செய்யப் போகிறேன்'' என்றார்.

''என்ன ஜோர்ஜ் சொல்லுறீங்க?''

''எனக்கு லண்டனிலை வாழ ஏலாமை இருக்கு''

''ஏன்?''

''எனக்கு Bank இலை கடன். 5 கிறடிட் காட்டில் 5,000 பவுண்ஸ் எடுத்தன். ஒண்டிலை 1,000 பவுண்ஸ் கிறடிட்லிமிட் ரெலிபோன் கட் பண்ணிப் போட்டான்கள். வீட்டு வாடகை கட்டாமல் வீட்டுக்காரன் துரத்திப் போட்டான். நான் 'சவுத் ஹேரல்' பார்க்கிலைதான் இப்ப 5 நாளாக படுத்திருக்கிறன். எனக் கெண்டு ஒரு இடமில்லை.'' கேவிக் கேவி அழுதார் ஜோர்ஜ். ஏற்கனவே ஜோர்ஜ் தனது குடும்பம் பற்றியும் மனைவி பற்றியும் என்னிடம் சொல்லியிருந்தார்.

''மனைவியை கூப்பிடப் போறன் எண்டனீங்களே என்னாச்சு விசயம்?''

''அதை ஏன் கேட்கிறீங்கள். மனிசி, புள்ளையள் எண்டு நான் இங்கை மாடாய் உழைச்சு மாயுறன். என்னைப் பாருங்கோ. எப்படி இளைச்சுப் போனன். அது ஆருக்கு. என்ரை மனிசிக்கும் 2 பிள்ளைகளுக்கும் தானே! ஆனால்....'' மீண்டும் ஜோர்ஜ் அழுதார்.

''நான் ஏற்கனவே பிரான்ஸிலை இருக்கேக்குள்ளை மனிசியை எடுக்குறதுக்கு படாத பாடில்லை. படாத கடனில்லை. இன்னும் எனக்கு அண்ணையிட்டை 10,000 பிராங்குகள் கடன். அதைக் கட்ட ஏலாம ஈரோஸ்ராரிலை ஏறி இங்கை வந்திட்டன். கள்ள பாஸ்போட்டிலைதான் வந்தனான். ஆனால் இங்கை வந்தாப்பிறகும் என்ன நிம்மதியே? இரவு பகலா அடிச்சு அடிச்சு காசு சேர்த்து ஏஜன்ட் மூலமாக இங்கை எடுப்பம் எண்டு பாத்தா... இண்டைக்கு ஒருத்தன் வந்து சொன்ன செய்தி... இனிமேல் நான் ஏன் உவளவையளுக்காக மாடா உழைக்க வேணும் எண்டு கிடக்கு.....''

''ஏன் ஜோர்ஜ்?''

''ஊரிலை இருந்து வந்து கொழும்பிலை ஒரு 'லொட்ஜ்'ஜில் தங்கி இருந்து 'வீசா' வேலைகள் பார்க்கும் போது ஒரு 'திறீவீலர்' காரனோடுதான் எல்லா இடத்துக்கும் போகிறவாவாம். இப்ப அவனோடை தொடுப்பாம். மனிசி லண்டனுக்கு வாற நினைப்பை கைவிட்டுட்டு அவனோடைதான் வாழுறாவாம்.''

இதற்கு மேல் ஜோர்ஜிடமிருந்து அவரது கவலைகளை விரிவுபடுத்த நான் விரும்பவில்லை.

ஜோர்ஜின் சிந்தனையை திசை திருப்புவதற்காக ரொனி பிளேயர், இலக்ஷன், ஸ்கொட்லாந்து, ஐரிஸ் கெரில்லாக்கள் சம்பந்தமாக பேச்சை மாற்றினேன்.

அவருக்கு வருத்தம் காரணமாக உதடுகள் காய்ந்து போய் இருந்தது. தண்ணி ஒரு போத்தல் வாங்கி குடிக்கச் சொன்னேன். பணம் கொடுத்தேன். அவரை அப்படியே விடக் கூடாது என்றுவிட்டு அன்று அரை நாள் லீவுபோட்டு விட்டு 'ஹவுன்ஸ்லோ'விலுள்ள 'மனநோய்' வைத்தியசாலையில் கொண்டு போய்ச் சேர்த்தேன்.

டொக்டர் ஸ்டீபன் சொன்னார் ''நோய் முற்றிவிட்டது. அவசரமாக சிகிச்சையை ஆரம்பிக்கிறேன்'' அதன் பிறகுதான் எனக்கு நிம்மதி.

காலையில் அகதிகள் நிலையத்தில் இருந்து ஒரு கடிதம் எங்களோடு இருக்கும் நண்பன் ரமேஸுக்கு வந்தது. அவனது அகதி அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டுவிட்டது எனவும் உடனேயே 'பாஸ்போட்'டுக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரியப்படுத்தி இருந்தார்கள். அன்று முழு நாளும் மிகவும் மகிழ்வாகவே இருந்தோம். ரமேஸ் மிகவும் சந்தோஷமாக இருந்தான். இவ்வளவு கெதியாக அவனுக்கு அங்கீகாரம் கிடைக்குமென்பது எதிர்பார்க்காத ஒன்று. திடீரென்று இப்படித் தான் அதிஷ்டம் கிடைத்தது மாதிரி கிடைக்கும். சிலருக்கு 10 வருஷம் கடந்தாலும் கிடைக்காது.

இந்த முறை வெங்காய விளைச்சல் பரவாயில்லை. சுனாமி வந்ததன் பின்பு கரையோர விளைச்சல் நிலங்கள் எல்லாம் கடல் நீர் புகுந்து உவர் நிலமாக மாறிவிட்டன. ஆனால் உடுப்பிட்டி பகுதியில் வெங்காயம் செழித்து இருந்தது. ரமேஷ் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை தந்தைக்கு பத்திரமாக அனுப்பிக் கொண்டிருந்தான்.

''உவன் எங்கடை பொடியனுக்கெல்லே புத்தகம் கிடைச்சிட்டுதாம்'' என்று தனது மகிழ்ச்சியை பெண்சாதி, ஊர்க்காரர் எல்லோருக்கும் பகிர்ந்து கொண்டார் கந்தையாண்ணை.

கந்தையாண்ணைக்கு மூத்தவன் ரமேஷ். இளையவள் கண்ணகி. வற்றாப்பளைக்கு நேத்தி வைத்து ஏழு வருஷத்துக்குப் பிறகு ஒரு பிள்ளை வேண்டும் என்று அம்மாளாச்சியிடம் அடம்பிடித்து அதுவும் பொம்பிளைப் பிள்ளையாய் வேணுமெண்டு அழுது குளறி பெத்ததுக்கு 'கண்ணகி' என்று பெயரிட்டார் கந்தையாண்ணை.

உடுப்பிட்டி பக்கத்திலை கந்தையா அண்ணன் சோலி சுறட்டில்லாதவர். அவருக்கு நல்ல மதிப்பு. ஆரம்பத்தில் இருந்தே அவர் விவசாயி. அடிபாடுகள், அகதி வாழ்வு என்று அலைக்கழிந்து ஒரு வாய்ப்புவர மகனை கடன்பட்டு இருக்கிறதை விட்டு சுட்டு லண்டன் அனுப்பிப் போட்டார். ரமேஸும் சோலி சுரட்டு இல்லாதவன். அவனுக்கு மச்சாள் காறி மீது ஒரு காதல், கண் இருந்தது.

நிறைவேறுகின்ற காதல் என்றுதான் ராணியும் நினைத்திருந்தாள். ஒண்டுக்கை ஒண்டு சொந்தத்துக்குள்ள ஆரும் பிரிக்க மாட்டினம். மாமா நல்லவர். பேந்தென்ன.

(25 ஆம் பக்கம் பார்க்க)



நடன இயக்குநர்
ஜோன் பாபு

# பாடல்கள் இல்லாத படம் கதவு, கூரை இல்லாத வீடு போன்றது

பாடல்கள் இல்லாத படம் கதவு, கூரை இல்லாத வீட்டைப் போன்றதாகும். ஒரு படத்தின் வெற்றிக்கு ஐம்பது வீதத்திற்கும் மேற்பட்ட பங்களிப்பை வழங்குவது பாடல்களும் அப்பாடல்களுடன் கலந்த நடனங்களுமே.

இவ்வாறு கூறுகிறார் தென்னிந்தியத் திரைப்பட உலகில் கொடிகட்டிப் பறக்கும் பிரப நடன இயக்குனர் ஜோன் பாபு.

இதுவரையில் 300 இற்கும் மேற்பட்ட படங்களுக்கு நடனம் அமைத்து இந்தியாவின் முன்னணி நடன இயக்குனர்களில் ஒருவராக இருக்கும் அவர், இப்போது இலங்கையில் தயாரிக்கப் பட்டுவரும் 'சூர்யா' என்ற படத்திற்கு நடனம் அமைக்க கடந்தவாரம் இலங்கைக்கு வந்திருந்தார்.

அப்போது நடனம் பற்றியும், இலங்கை கலைஞர்களின் திறமைகள் பற்றியும், ஒரு திரைப்படத்திற்கு பாடல் எவ்வளவு முக்கியம் என்பதுபற்றியும் 'சுடர் ஒளி' வாரமலருக்கு விசேட செவ்வி ஒன்றை வழங்கினார். அந்த செவ்வியின் விவரம் கீழே.

**கேள்வி:— இலங்கையரால் இலங்கையில் தயாரிக்கப்படும் 'சூர்யா' என்ற படத்திறக்கு நடனம் அமைப்பதற்காக நீங்கள் இலங்கைக்கு வந்துள்ளீர்கள். இந்த அனுபவம் பற்றி நீங்கள் கூறவிரும்புவது?**

பதில்:— இது எனக்கு ஒரு புதிய அனுபவமாகும். இலங்கையில் தயாரிக்கப்படும் 'சூர்யா' என்ற படத்திற்கு நடனம் அமைப்பதற்காக அப்படத்தின் கதாநாயகனும் இயக்குனருமான டாக்டர் நிரஞ்சன் என்னை அழைத்தபோது நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று பல்வேறு மொழிப்படங்களுக்கு நடனம் அமைத்த எனக்கு இலங்கைக்கு வந்து இலங்கைப் படத்திற்கு நடனம் அமைப்பதென்பது முதல் தடவையும் புது அனுபவமும் ஆகும்.

இப்போது இந்த மகிழ்ச்சி பன்மடங்காகியுள்ளது. மிகவும் திறமையான நடனக் கலைஞர்களை நான் இலங்கையில் கண்டதுதான் இதற்குக் காரணம்.

இந்த நடனக் கலைஞர்கள் இதுவரை காலமும் தங்களின் திறமைகளை



வெளிக்காட்ட வாய்ப்புகள் ஏதுமின்றி இருந்துள்ளனர். 'சூர்யா' படம் மூலம் மறைந்து கிடந்த அவர்களின் திறமைகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

இதுவரை காலமும் நடனம் மீது கொண்டுள்ள ஆர்வம் காரணமாக பிழையான கோணத்தில் நடனமாடிக்கொண்டிருந்த கலைஞர்களும் இந்தப் படம் மூலம் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறான கலைஞர்களின் வித்தியாசமான திறமைகளை நான் அவர்களுக்கு வழங்கிய பயிற்சியன்போதும் அதற்குப் பின்னரான ஒத்திகையின் போதும் என்னால் காணமுடிந்தது.

இவர்களின் திறமைகளை வெளியில் கொண்டுவர வாய்ப்புக் கிடைத்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

**கேள்வி:— 'சூர்யா' படத்தில் இடம்பெறும் பாடல்கள் பற்றி?**

பதில்:— சூர்யா படத்தில் மொத்தம் 6 பாடல்கள் இடம்பெறுகின்றன. இந்த 6 பாடல்களுக்கும் நானே நடனம் அமைக்கின்றேன். இதில் 3 பாடல்களுக்கு குழு நடனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த 6 பாடல்களிலும் டாக்டர் நிரஞ்சன் சம்பந்தப்படுகின்றார். இந்தப் பாடல்கள் அனைத்தும் வித்தியா சமானவையாகும்.

ஒவ்வொரு பாடலும் காட்சியில் உள்ள அந் தந்தச் சூழ்நிலையுடன் பின்னிப் பிணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பாடல்கள் இதுவரையில் எந்தத் திரைப்படத்திலும் இடம்பெறவில்லை என்பது இதன் சிறப்பம்சமாகும்.



நேர்காணல்:-
எம்.ஐ.முபாறக்

படம் திரைக்கு வந்ததும் இந்தப் பாடல்களின் வித்தியாசத்தை ரசிகர்களால் நிச்சயம் உணரமுடியும். அதற்கு ஏற்ப சிறப்பான முறையில் நான் இந்தப் பாடல்களுக்கு நடனங்களை அமைத்துள்ளேன்.

'சூர்யா' திரைப்படத்தில் இடம்பெறும்பாடல்களின் மற்றுமொரு சிறப்பம்சம் யாதெனில் இவற்றுக்கு இசை அமைத்திருப்பவர் இசைஞானி இளையராஜா.

பாடல்கள் மிகவும் இனிமையாய் உள்ளதுடன் சிறந்த இலங்கைப் பாடகர்கள் இவற்றைப் பாடியுள்ளனர். இந்த 6 பாடல்களையும் கதாநாயகன் டாக்டர் நிரஞ்சனே பாடுவதாய் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவும் இப்படத்தின் மற்றொரு சிறம்பம்சமாகும்.

**கேள்வி:— ஒரு படத்திற்குப் பாடல்கள் எந்தளவு முக்கியம்?**

பதில்:— ஒரு படத்தின் வெற்றியைத் தீர்மானிப்பதில் அப்படத்தில் இடம்பெற்றுள்ள பாடல்கள் 50 வீதத்திற்கும் மேற்பட்ட பங்கை வகிக்கின்றன.

பாடல்கள் இல்லாத படங்கள் கதவுகள், கூரைகள் இல்லாத வீட்டுக்குச் சமமாகும், பாடல்கள் மூலம் தான் ஒருபடம் முழுமை அடைகிறது.

ஒரு படம் தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில் அப்படத்தில் உள்ள பாடல்கள் அந்தப் படம் வெளியாகும் முன்பே வெளியாகிவிடுகின்றன.

அடிக்கடி அவை வானொலியில் ஒலிக்கவிடப்பட்டு பிரபல்யப்படுத்தப்படுகின்றன. அப்போது அப்பாடல்கள் இடம்பெற்ற படம் வெளியாக இருப்பதை ரசிகர்கள் அறிகின்றனர். ஆவலோடு எதிர்ப்பார்கின்றனர்.

இவ்வாறு பாடல்கள் ஒரு படத்திற்குப் பெரும் விளம்பரமாகவும் அமைக்கின்றன. அனேகமான படங்கள் பாடல்களாலேயே வெற்றிபெற்றுள்ளதை ரசிகர்கள் நன்கு அறிவர்.

ஒரு படத்தில் இடம்பெறுகின்ற கதை வசனங்களை ஒலிபரப்பி படத்திற்கு விளம்பரம் செய்யமுடியாது. பாடல்களைத்தான் ரசிகர்கள் விரும்புகின்றனர்.

இதன்காரணமாகத்தான் பாடல்கள் அடங்கிய ஒலிநாடா வெளியீட்டு விழா பாரிய அளவில் ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஒரு திரைப்பட வெளியீட்டு விழாவுக்கு அவ்வாறு செய்வதில்லை. ஆகவே, பாடல்கள் படத்தின் வெற்றிக்கு மிகவும் முக்கியம்.

**கேள்வி:— ஒரு பாடலுக்கு எத்தனை நாட்களுக்குள் நடனத்தை அமைத்துக்கொடுக்க முடியும்?**

பதில்:— ஆகக்கூடியது 10 நாட்கள். ஆகக் குறைந்தது 2 நாட்கள். நாட்களைக் கூட்டிக் குறைப்பதற்கு ஏற்ப நடனத்தின் தரம் மாறுபடும்.

அதிக நாட்கள் எடுத்தால் அதிக உடைகள் அதிக இடங்கள், கூடுதலான நடனத்துண்டுகள் போன்றவற்றை நடனத்தில் உள்ளடக்கலாம்.

குறைவான நாட்கள் எடுத்தால் குறைவான இடங்கள், குறைவானா ஆடைகள், குறைவான காட்சிகள் போன்றவற்றையே உள்ளடக்க முடியும். அதனால் செலவிடப்படும் நாட்களுக்கு ஏற்ப நடனத்தின் தன்மை மாறுபடும்.

பட இயக்குனர்கள் ஒதுக்கித் தருகின்ற நாட்களுக்குள்ளேயே நாம் நடனத்தை அமைக்கின்றோம். நாட்களைக் கூட்டுவதும் குறைப்பதும் இயக்குனரின் விருப்பம்.

இப்போது நடன அமைப்புக்கு அதிக நாட்களைச் செலவிடுவது ஹிந்தி சினிமாதான். அடுத்த நிலையில் தமிழ் சினிமா உள்ளது.

தமிழ் சினிமாவில் ஒரு பாடலின் நடன அமைப்புக்கு 5 நாட்களும், கன்னட சினிமாவில் 3 நாட்களும், மலையாள சினிமாவில் 2 நாட்களும் ஆகக்கூடிய நாட்களாக செலவிடப்படுகின்றன.

**கேள்வி:— படத்தில் கதாநாயகர்கள் தாங்களே நடனம் அமைத்துக் கொள்கிறார்களா அல்லது நடன இயக்குனர்கள் மூலம் அமைத்துக் கொள்கிறார்களா?**

பதில்:— அநேகமான கதாநாயகர்ளுக்கு நடன இயக்குநர்களே நடனம் அமைக்கின்றனர். ஒரு சில கதாநாயகர்கள் தாங்களே அமைத்துக் கொள்கின்றனர்.

பிரபு தேவா, லோரன்ஸ் போன்ற நடிகர்கள் அவர்களாகவே நடனத்தை அமைத்துக் கொள்கின்றனர்.

**கேள்வி:— தமிழ் சினிமா நடனத்திற்கும் பிற மொழி சினிமா நடத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன?**

பதில்:— தமிழ் சினிமா நடனம்தான் திரை உலகிலேயே மிக பிரமாண்டம். பல வருடங்கள் பின்னோக்கிப் பார்த்தால் ஹிந்தி, மலையாளம், கன்னடம் போன்ற படங்களுக்குத் தனியான ஒரு நடனக் கட்டமைப்பு இருக்கவில்லை.

தமிழ் சினிமாவில் இருந்து சென்றுதான் பிறமொழிப் படங்களுக்கும் நடனம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இப்போது அவர்கள் தனியான ஒரு நடனக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்.

அந்த வகையில் பார்க்கும்போது தமிழ் சினிமா நடனம்தான் பிரமாதம்.

**கேள்வி:—உங்களின் சினிமா வரலாறு பற்றி?**

பதில்:— நான் 1979இல் சினிமாவுக்குள் நுழைந்தேன். முதலில் நடனக்குழுவில் ஒருவராகவிருந்தேன். பிறகு உதவியாளராக இருந்தேன். மூன்றாவதாகத் தனி நடனம் ஆடினேன். இறுதியாகத்தான் நடன இயக்குனர் என்ற அந்தஸ்தைப் பெற்றேன்.

கடின உழைப்பு மற்றும் திறமை காரணமாகத்தான் நான் இப்போது இந்த நிலையை அடைந்துள்ளேன்.

இதுவரை 300 இற்கும் மேற்பட்ட படங்களுக்கு நடனம் அமைத்துள்ளேன். 100 இற்கும் மேற்பட்ட படங்களில் தனி நடனம் ஆடியுள்ளேன்.

நான் நடனம் ஆடிய முதல்படம் 'உயிருள்ள வரை உஷா'. அதில் தலையை மொட்டை அடித்துக்கொண்டு ஆடியுள்ளேன்.

**கேள்வி:— இலங்கைக் கலைஞர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?**

பதில்:— இலங்கையில் திறமையான நடனக் கலைஞர்கள் உள்ளனர். கடும் உழைப்பால் அவர்கள் தங்களின் திறமையை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அத்தோடு, திறமையானவர்களுக்கு வாய்ப்பளித்து அவர்களைத் தூக்கிவிட முயலும் 'சூர்யா' பட இயக்குனரும் கதாநாயகருமான டாக்டர் நிரஞ்சனுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

முதல் படம் - பொன் மாலை
பிடித்த நிறம் - வெள்ளை
ரஜினி பற்றி - நடிகர்களில்
கமல் பற்றி - அறிவாளிகள
பொன்மணி பற்றி - மனைவியாய்
ஜெயலலிதாவிடம் பிடித்தது - து
மனம் கவர்ந்த பெண்மணி - பி.சு

## வைரமுத்து வைர வரி



கவிஞர்
வைரமுத்து

பிடித்த பிற கவிஞரின் பாடல் - க
கலைஞரிடம் பிடித்தது -
இளையராஜா பற்றி -
ரஹ்மான் பற்றி -
பிடித்த ஊர் -
ரசிக்கும் சிற்பம் -
பிடித்த புதிய இயக்குனர் -
தமிழர்களிடம் பிடிக்காதது -
தமிழில் பிடித்த வார்த்தை - த

## சினிமா சி

* இயக்குனர் ஷங்கரின் சகோதரன் ஓட்டிக் கொண்டிருக்கிறார். மற்றைய ச ஆ.. ஆ... படத்திற்கு கார் ஓட்டுகிறார்.

* விஜயகாந்த் அரசியல் பிரவேசம் ஏற்றமாதிரி ஒரு புதிய வெப்சைட் சதீஷ்.

* காதல் மாதிரி சிறிய பட்ஜெட்டில் லாமா' என்ற ஒரு கதையை தனுஷுக் ருக்கிறார்.

* கரண் தன்னைத் தேடிவரும் வில் வேடங்களை வேண்டாம் என தவிர்த் ஹீரோவாகத்தான் நடிப்பேன் என பிடி இருக்கிறார். அத்துடன் தனது உடலையு வாக குறைத்துவிட்டார்.

* ஹரீஷ் ராகவேந்தர் நடிப்பைவிட வதிலேயே அதிக ஆர்வம் காட்டுகிற வெளிநாடுகளிலும் இன்னிசை நிகழ் சிகள் நடத்திவருகிறார்.

* தனுஷ் அப்பாவாகப் போகிறார். ஐஸ்வர்யா வாயும் வயிறுமாய் இருப்பதை அறிந்துதான் தாத் தாவாகப் போகிற குஷியில் தன் வீட்டு வேலையாட்களுக்கு இனிப்புகளை அள்ளிக் கொடுத்தாராம் ரஜினி.

* செல்வராகவனின் ஆஸ்தான நாயகி சோனியா கலியாணத்துக்குப் பிறகு நடிப்பிற்கு முழுக்குப் போட்டு விடப்போகிறாராம்.

* மஜா படத்தை முடித்ததும் விக்ர முக்குக்கதைசொல்ல நான்கைந்து இயக்குனர்கள் காத்திருக்கின் றார்களாம். முன்னணியில் உள்ளவர்கள் இயக்குனர் பேரரசு, ஜான் ஆகியோர்.



...ன் மாலைப் பொழுது
...ள்ளை
...கர்களில் ஓர் அறிவாளி
...விளிகளில் ஒரு நடிகர்
...னவியாய் வந்த தெய்வம்
...ந்தது - துணிச்சல்
...ணி - பி.சுசீலா

## ...த்துவின் ...வரிகள்



...ர்
...த்து

பாடல் - காதல் சிறகினை காற்றினில் விரித்து
- உழைப்பு.
- ஆர்மோனிய அரசர்
- கீ போர்டு கிங்
- கொடைக்கானல்
- புத்தர் சிலை
...ளர் - பாலா
...து - நேரந்தவறாமை இல்லாதது
...தை - தமிழ்


# சாதாரண நிலை போதும் - ஸ்ரீகாந்த்

"நம்பர் வண் கனவெல்லாம் எனக்குக் கிடையாது. இப்போது இருப்பது போல் நடிகனாக எப்போதும் நீடித்தாலே போதும்" என்கிறார்ஸ்ரீகாந்த்.

ஸ்ரீகாந்த் 'கனாகண்டேன்' படத்தின் வெற்றியில் சந்தோஷமாக உள்ளார். இடையில் ஆக்ஷன் கலந்த ஹீரோ ஆசையில் பொருத்தமில்லாத பாத்திரங்களில் சரியான கதை அமையாமல் நடித்து பட்டுக்கொண்ட அனுபவம் அவரை இப்பொழுது தெளிவாக்கியிருக்கிறது. இப்போது 'சதுரங்கம்' ஆக்ஷன் படத்தில் கதையும் பாத்திரமும் சரியாக அமைந்துள்ளதால் ஈடுபாட்டோடு அதில் நடித்துள்ளதாக்கூறுகிறார். அத்துடன் பாசிலின் 'ஒரு நாள் ஒரு கனவு' மற்றும் 'பம்பரக்கண்ணாலே' படங்கள் நன்றாக வந்துள்ளதாகவும் நம்புகிறார்.

'சிம்பு, தனுஷ், ஜெயம் ரவி' என எனக்கு போட்டிகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் எனக்கு நம்பர் வண் ஆசையெல்லாம் கிடையாது. குறைந்தது கியாரண்டி நடிகர் என்று பேர் வாங்கினால் போதும். இதுதான் எனது லட்சியம்" என்கிறார் ஸ்ரீகாந்த்.

தம் பலம் புரிந்தவன்தான் புத்திசாலி - ஸ்ரீகாந்த்துக்கு புரிந்துவிட்டது.



'ஒரு நாள் ஒரு கனவு' -ஸ்ரீகாந்த், சோனியா-

யசர் அட்வான்ஸ் நீட்டினாலும் மறுக்காமல் வாங்கி போட்டுக் கொள்கிறார் ஜெய் ஆகாஷ். வாரத்துக்கு ஒரு படம் என்ற ரீதியில் வெளியிட்டுக் கொண்டிருந்தார். விளைவு யானை தேய்ந்து பூனையான கதையாகி விட்டது அவரின் மார்க்கெட். சமீபத்தில் வெளியான 'கிச்சா வயது 16' படத்தில் ஜெய் ஆகாஷை துணை நடிகர் ரேஞ்சுக்கு காட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல டைட்டிலில் கூட அவருடைய பெயருக்கு முக்கியத்துவம் இல்லை.

இந்த லட்சணத்தில் தன் படத்திற்கு சரியாக விளம்பரம் செய்யவில்லை என்று தெலுங்கு படத் தயாரிப்பாளர் ஒருவருடன் சட்டையைப் பிடித்து சண்டைக்கு போயிருக்கிறார் ஆகாஷ். மேற்படி தயாரிப்பாளர் பொலிஸுக்குப் போனபின் இருவரும் சமாதானம் ஆனார்களாம்.

தெலுங்கில் இருந்த மார்க்கட்டை தக்க வைத்துக் கொள்ளாமல் தமிழில் எதற்கு இப்படி உருப்படியில்லாத படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார் என்றார்கள் ஜெய் ஆகாஷுக்கு நெருக்கமான சிலர். ஆனால், தமிழில் வரப்போகிற தன் மிச்சச் சொச்ச படங்களுக்காக எக்கச்சக்க எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார் அவர்.

இப்போதெல்லாம் ஆகாஷோடு அதிகம் சுற்றுவதில்லையாம் பிரணதி. காரணம் வாய்ப்புக்கள் அதிகம் இருந்தபோது பக்கத்தில் இருந்தார். இப்போது சொல்ல வேண்டுமா என்ன?

## ... சிதறல்கள்

...ன் சகோதரன் ஸ்ரீதர் என்பவர் ஆட்டோ...ர். மற்றைய சகோதரர் எஸ்.ஜே.சூர்யாவின் ...ஓட்டுகிறார்.

...ல் பிரவேசம் மேற்கொள்வதற்கு அதற்கு ...ரிப்ஸைட் உருவாக்கிவருகிறார் எல்.கே.

...பட்ஜெட்டில் ரமேஷ்கண்ணா 'ஓடிப்போக ...யை தனுஷுக்காக தயார்பண்ணி வைத்தி...

...டிவரும் வில்லன், குணசித்திர... ...என தவிர்த்து வருகிறார். ...பன் என பிடிவாதமாக ...னது உடலையும் வெகு...

...நடிகைபவிட பாடு... ...ம் காட்டுகிறார். ...னிசை நிகழ்ச்...

...போகிறார். ...றுமாய் ...தாத்...

...ன் ...ல்

...எல்லாம் பாடலாம்' ..., கதாநாயகிகள்-



# ரஜினி, கமல் இணையும் குரு படம்

கனவிலும் எதிர்பார்க்க முடியாத விஷயம் கைக்கெட்டும் தூரத்தில் உள்ளது. ஆம் சூப்பர் ஸ்டாரும், சூப்பர் ஆக்டரும் இணைந்து நடிக்க இனியதொரு வாய்ப்பு கனிந்து வந்திருக்கிறது.

பாபாவுக்கு அடுத்தபடியாக, ரஜினி மரியாதை வைத்திருப்பவர் பாலசந்தர். 'அபூர்வ ராகங்கள்' படத்தில் ரஜ... அறிமுகப்படுத்திய...தோடு நிற்காமல் அவரை கதாநாயகனாக்கி அழகு பார்த்தவர் கே.பாலசந்தர்தான். இவர்தான் ரஜினியின் குருவும். குரு அழைத்தால் இமயமலைக் குகையில் இருந்தாலும் ஓடோடி வரும் ரஜினி, சமீபத்தில் அப்படி வந்தது பாலசந்தரின் புதிய படம் 'பொய்' பூஜைக்கு. அங்கு வந்திருந்த கமலும், ரஜினியும் பாலசந்தர் காலில் விழுந்து ஆசிபெற்றனர். "உண்மையில் நானோ, கமலோ செய்திருக்க வேண்டிய விஷயம். பிரகாஷ்ராஜ் செய்திருக்கிறார்" என்று 'பொய்' படத்தை தயாரிக்கும் பிரகாஷ்ராஜை பாராட்டினார் ரஜினி. கமலோ "இது இனி நம்ம படம்" என்றார் நெகிழ்ச்சியுடன்.

'பொய்' படம் துவங்கிய அன்று பாலசந்தருக்கு 75ஆவது பிறந்தநாள். இந்தப் படத்தை பேசி வைக்க வேண்டும் என்பது இவர் ஆசை. இதற்கு முன் நடந்த விழா ஒன்றில் ரஜினி பாலசந்தரிடம், நாடகங்கள் போடும்படி கேட்டுக்கொண்டார். "அப்படி பாலசந்தர் நாடகத்தை இயக்கினால் நானும் கமலும் நடித்துக் கொடுப்போம்" என்றார் ரஜினி.

பாலசந்தர் நாடகத்திற்கு பதில் படத்தை துவக்கியிருக்கிறார். 'பார்த்தாலே பரவசம்' படத்தில் கமல் ஒரு காட்சியில் நடித்ததுபோல் கமல் ரஜினி இருவரையும் 'பொய்'யில் நடிக்க வைக்க எண்ணியிருக்கிறார் பாலசந்தர்.

இந்தப் படம் இலங்கை பின்னணியில் எடுக்கப்படும் காதல் கதை. இதில் இயல்பாகவே அமையும் காட்சியொன்றில் கமலும் ரஜினியும் கூட்டாக தோன்றலாம்.

எதற்கும் இருவரின் ரசிகர்களும் விசிலடிக்க தயாராக இருங்கள்.

# ஏ.வி.எம். படத்தில் மீண்டும் விக்ரம்

பெயரை போட்டே கிசுகிசு எழுதும் அளவுக்குத் தைரியம் வந்துவிட்டதா? நல்ல விஷயம் என்றால் பெயரைப் போடுவதில் என்ன பிரச்சினை என்று போட்டுவிட்டோம்.

சுண்டைங்காய் கால்பணம். சுமை கூலி அரைப் பணம் என்ற ரேஞ்சுக்கு சினிமா தயாரிப்பில் முழு வீச்சில் இறங்கியது ஏ.வி.எம். நிறுவனம். நீண்ட இடைவெளிக்குப் பிறகு இவர்கள் விக்ரமை வைத்து தயாரித்த படம் 'ஜெமினி'. படம் ஹிட். இந்த தைரியத்தில் மேலும் சில படங்களைத் தயாரித்தனர். ஆனால் அவை எதுவும் கைகொடுக்கவில்லை.

இப்போது ஏ.வி.எம். ஸ்டூடியோவை மூன்று சகோதரர்களும் முறைப்படி பிரித்து அவரவர் பகுதியை மட்டும் மேற்பார்வையிட்டு வருகின்றனர். இவர்கள் மூவரும் இணைந்து தங்கள் தந்தை நிறுவிய ஏ.வி.எம். நிறுவனம் சார்பில் மீண்டும் படம் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். இந்த வருட இறுதியில் இவர்கள் படப்பிடிப்பை துவங்கலாம் என்கிறார்கள். 'ஜெமினி'யில் நடித்த விக்ரம்தான் ஹீரோ.



-விக்ரம்-

முறைப்படி அறிவிப்பு எதுவும் ஏ.வி.எம். தரப்பிலிருந்து வராத நிலையில் கோடம்பாக்கமே இந்த செய்தியை கிசுகிசுத்துக் கொண்டிருக்கிறது.

கிசுகிசு உண்மையானால் அனைவருக்கும் ஆனந்தம்தான்!

# அன்பு பாலாவின் புதிய படம்

'அன்பு' பாலா நடிக்கும் படம் கலிங்கா. இப்படப்பிடிப்பு சென்னையில் நடந்த போது, சுனாமியில் படப்பிடிப்பின் செட்டுகள் காணாமற் போயின. குப்பம் ஒன்றில் படமெடுத்தபோது ஒரு சேஸிங் காட்சியைப் பார்த்துவிட்டு பொது மக்கள் நிஜமான சம்பவமே என நினைத்தது; ஹீரோவை துரத்தியது என பல விஷயங்கள் நடந்தன.

சமீபத்தில் ஆந்திராவின் எல்லை அருகே உள்ள மீனவர் குப்பத்தில் குடித்துவிட்டு அந்த குப்பத்து ஆட்கள் நட்சத்திரங்களிடமும் யூனிட் ஆட்களிடமும் தகராறு செய்ய.., பதிலுக்கு தொழிலாளிகள் தட்டிக்கேட்டனர். இந்த மோதலில் குப்பத்தினர் ஒன்று திரண்டு யூனிட்டினரை தாக்க வர ஹீரோ பாலா குறுக்கிட்டு அவர்களை சமாதானப்படுத்தி யூனிட் ஆட்களை காப்பாற்றியிருக்கிறார்.

இதைத் தொடர்ந்து அங்கே நடத்த வேண்டிய படப்பிடிப்பை சென்னை திருவொற்றியூரில் உள்ள மீனவர் குப்பத்தில் எடுத்து வருகிறார்கள்.

**42** **மகனை மீட்கப் போராடும் தாய் இவள்**

# தொடரும் தவிப்பு

நெடுமாறனும் உடன் குழுவின் மணியரசன், தியாகு, கார்முகில் ஆகியோரும் டெல்லி சென்று சோனியாவை நேரிலேயே சந்தித்து நன்றி கூறியிருந்தனர். அதோடு டில்லியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரையும், பல்வேறு மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து மரண தண்டனை ஒழிப்புக்கு ஆதரவு கோரினர். அப்போது அவர்களிடம் பேசிய மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் "நாங்களும் இத்தனை வருடங்களாக ஒரு அறைக்குள் கூடி மரண தண்டனைக்கு எதி

**"நீதான் வெடிகுண்டு செய்தவனா"**

ரான தீர்மானம் போடுவதோடு இருந்து விட்டோம். ஆனால் உங்கள் முயற்சிக்குப் பின்தான் மரண தண்டனை ஒழிப்பு இயக்கம் உண்மையிலேயே ஒரு நாடுதழுவிய இயக்கமாக மாறி இருக்கிறது. உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள். கண்டிப்பாக இறுதி வரை உங்களுடன் நாங்கள் நிற்போம். நம் முயற்சி நிச்சயம் வெற்றி பெறும்" என்று கூறியிருந்தனர். இந்த விவரங்களை எல்லாம் நெடுமாறன் வாயிலாக கேட்ட அற்புதத்திற்கு நம்பிக்கை பலப்பட்டது.

இதற்கிடையே அறிவு ஒரு தன்னிலை விளக்கக் கடிதம் தயார் செய்திருந்தான். அதை நகலெடுத்து நாட்டின் முக்கிய தலைவர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்குமாறு கூறினான்.

சாதாரணமாக அறிவு நகலெடுக்கவோ பிறவற்றிற்கோ ஏதேனும் கொடுத்தால் அற்புதம் அதைப் படித்துப் பார்க்கமாட்டார். அதைப் போலவே இதையும் தட்டச்சு செய்து நகலெடுத்து அனைவருக்கும் அனுப்பிவிட்டார்.

ஒருநாள் விரைவு வண்டியில் செல்லும் போது தற்செயலாக அதை எடுத்துப் படிக்கத் துவங்கினார்.

என்னை 'மல்லிகை' அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றபோது நாளை காலை அதாவது 12.06.1991 அன்று அனுப்பி வைப்பதாக வாக்குறுதி கூறியே அழைத்துச் சென்றனர். நேரே மாடியில் உள்ள ஒரு அறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு டி.ஐ.ஜி, எஸ்.பி., மற்றும் பலர் இருந்தனர். என்னைப் பற்றியும் எனது கல்வி, குடும்பப் பின்னணி பற்றியும் விசாரித்தனர்.

எனது கல்வித்தகுதி எலக்ட்ராணிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன்ஸ் இன்ஜினியரிங்கில் டிப்ளோமா பட்டம் என்று கூறியவுடன் டி.ஐ.ஜி கேட்டார். "நீதான் வெடிகுண்டு செய்தவனா" - நான் மிரண்டுவிட்டேன். எனது படிப்போடு வெடிகுண்டு எந்த வகையில் தொடர்பு என்பது விளங்காமல் தவித்தேன். அப்போது நான் போட்டிருந்த சட்டையின் கீழ் பாகத்தில் சிறிய துளை இருந்தது. அதைப் பார்த்தபடியே இந்தத் துளை ஸ்ரீபெரும்புதூர் குண்டு வெடிப்பில் ஏற்பட்டது தானே? என்று கூறினார். நான் மறுத்தேன். ஆனால் என்னை 'சரியான முறையில் கவனித்தால் ஒப்புக்கொள்வான்' என்று கூறி இரண்டு ஆய்வாளர்களிடம் ஒப்படைத்தனர்.

கீழ்தளத்திற்குக் கொண்டுவரப்பட்டேன். அங்கே ஒரு அறையில் எனது சட்டை, பேண்ட் கழற்றப்பட்டு ஜட்டியுடன் நிற்க வைக்கப்பட்டேன். அப்போது ஆய்வாளர்கள் மற்றும் இருவர் எனது வெற்றுடம்பில் உள்ளங்கையினால் அடித்தனர். ஒருவர் சப்பாத்துக் காலால் எனது கால் விரல்களை மிதித்தார். திடீரென ஆய்வாளர் தனது முழங்கால்களால் எனது விதைப்பையில் கடுமையாக தாக்கினார்.

"அய்யோ!" - கிட்டத்தட்ட வாய்விட்டே

**குடிக்க நீர் மறுக்கப்பட்டது. உணவு மறுக்கப்பட்டது. சிறுநீர் கழிக்கவும் அனுமதி மறுக்கப்பட்டது.**

அலறிவிட்டார் அற்புதம். அவரது கை அவரையும் அறியாமல் அவர் வாயைப் பொத்தியது. கையிலிருந்த கடிதம் கீழே விழுந்தது. உடலெங்கும் ஒரு நடுக்கம். கை கால்கள் எல்லாம் நடுங்கின. குப்பென்று வியர்த்தது.

எந்த வித நினைவுகளோ எண்ண ஓட்டங்களோ இல்லாத ஒரு வெற்று நிலைக்கு சென்று விட்டிருந்தார். எந்த தாயும் தன் மகனைப் பற்றித் தெரிந்து கொள்ளக் கூடாததை தெரிந்து கொண்டதால் ஏற்பட்ட அதிர்ச்சி அவர் மூளையை முழுவதும் செயலற்றதாக்கி இருந்தது. தொங்கவிட்டிருந்த கால்களை மெதுவாக எடுத்து இருக்கையின் மீது வைத்தார். இரு முழங்கால்களையும் கட்டிக் கொண்டு தன்முகத்தை அதில் புதைத்துக் கொண்டார். அப்படியே சுருண்டு படுத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. உடலெங்கும் ஒரு வித சோர்வு, அயர்ச்சி, நடுக்கம். எத்தனை நேரம் அப்படி இருந்தாரோ... மெது மெதுவாக சுயநினைவுக்கு வந்தார். கீழே அவரது பை மீது கடிதம் விழுந்து கிடந்தது. அதை எடுத்துப் படிக்க துணிவில்லை. சற்று நேரம் அதையே வெறித்துப் பார்த்தார். பின்னர் மெதுவாக குனிந்து அதை எடுத்தார். தண்ணீர் போத்தலை எடுத்து சிறிது நீர் அருந்தினார். மனதை திடப்படுத்திக் கொண்டு மீண்டும் கடிதத்தை தொடர்ந்து படித்தார்.

நான் வலியால் துடித்து கீழே விழுந்தேன். எனக்குத் தெரியாத சம்பந்தமில்லாத பல சம்பவங்களைக் கேட்டு துன்புறுத்தினர்.

அடுத்த நாள் காலை, மல்லிகை அலுவலகத்தின் சித்திரவதை கூடம் என அழைக்கப்படும் மேல் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டு ஆய்வாளர்கள் டி.எஸ்.பி. ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டேன். இவர்கள்தான் அப்போது மல்லிகையில் துன்புறுத்தலில் பெயர்பெற்றிருந்தனர். அங்கு சென்றவுடன் எனக்கு குடிக்க நீர் மறுக்கப்பட்டது. உணவு மறுக்கப்பட்டது. சிறுநீர் கழிக்கவும் அனுமதி மறுக்கப்பட்டது.

ஆய்வாளர்கள் முழங்காலை மடக்கியபடி கைகளை நீட்டியவாறு நிற்கச் சொல்வர் (அதாவது இருக்கையில் அமர்வது போன்ற பாவனையில்), அவ்வாறு நான் நின்று கொண்டே இருக்க வேண்டும். அப்போது எனது பின்னங்கால்களில் (ஆடுதசை) கழியால் அடிப்பார்கள். ஆய்வாளர்கள் ஒரு பி.வி.பி. பைப்பில் சிமெண்ட் அடைத்து அதன் மூலம் எனது கை முட்டிகளை நீட்டச் சொல்லி அடிப்பார்கள். இதில் ஆய்வாளர்கள் மாதவன், செல்லத்துரை ஆகியோர் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளை பயன்படுத்துவதில் புகழ் பெற்றிருந்தனர். மற்றவர்களும் பயன்படுத்துவது உண்டு என்றாலும் இவ்விருவரும் அதில் உயரத்தில் நின்றனர் என்றே கூறவேண்டும். அவை கூறுவதற்குக் கூசக்கூடியவை என்பதால் அவற்றை குறிப்பிடுவதை தவிர்க்க விரும்புகிறேன்.



பூட்டிப் பூட்டி வைத்திருந்த சோகம் அந்த நொடியில் வெடித்துக் கிளம்பியது

டி.எஸ்.பி. ஒருவர் இருந்தார். அவரும் என்னை துன்புறுத்தினார். அவரின் பாணி வேறுபட்டது. சுவர் ஓரமாக முதுகைச் சாய்த்து உட்காரச் சொல்வார். பின்னர் ஒரு காலை ஒரு பக்கச் சுவருடன் ஒட்டினால் போல் ஒரு காவலரை பிடிக்கச் சொல்வார். மற்றொரு காலை மற்ற பக்கச் சுவற்றுக்கு அதாவது 180 பாகைக்கு விரிப்பார். அவ்வாறு விரியும் போது ஏற்படும் வேதனை அளவிடமுடியாததாக இருந்தது.

மற்றொரு ஆய்வாளர் என்னை துன்புறுத்தியவர். அவர் பென்சில் அல்லது சிறு கட்டைகளை விரல் இடுக்கில் வைத்து அழுத்திப் பிடித்து திருகுவார். ஊசிகளை விரல் நகங்களுக்கிடையே ஒட்டுவார். சப்பாத்துக் கால்களால் எனது கால்களின் சுண்டுவிரல்களில் ஏறி மிதிப்பார். இது போன்ற நுணுக்கமான கொடுமைகள் செய்வார்.

சி.பி.ஐயினர் எம்மை துன்புறுத்துவதில் ஏற்படும் இன்பத்தை எவ்வாறு விரும்பினர் என்பதற்கு எனக்கு ஏற்பட்ட உதாரணம் ஒன்று உண்டு. ஒரு நாள் ஒரு இன்ஸ்பெக்டர் என்னை அழைப்பதாக கூறி நானிருந்த அறையிலிருந்து துன்புறுத்தல் அறைக்கு அழைத்து சென்றனர். அங்கு என்னைக்

> தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தயின் உண்மைக் கதை இது.
>
> நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும் நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

கீழே உட்காரச் சொன்னார்கள். பின்னர் திடீரென எனது இடது பக்க முகத்தில் செருப்புக் காலால் எட்டி உதைத்து ஒரு அதிகாரி கூறினார். "ஏன்டா நாடுவிட்டு நாடு அகதியா வந்த நீங்க இங்கு எங்கள் தலைவரை கொலையா செய்கிறீர்கள்" என்றார். எனக்கு அழுகை வந்தது. அருகில் அமர்ந்திருந்த ஆய்வாளர் சிரித்தபடியே, "இவன் சிலோன்காரன் இல்லை. தமிழ்நாட்டுக்காரன்தான்" என்றார். உடனே என்னை திரும்பவும் உள்ளே அனுப்பிவிட்டனர்.

(தவிப்பு தொடரும்)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# பிரதமரின் 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' வங்கிக் கணக்கு....

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களின் பணத்தைச் சூறையாடிய ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப் போவதில்லை என ஜனாதிபதி சந்திரிக்கா கூறியிருக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள், வட மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கான கூட்டமொன்று அண்மையில் அனுராதபுரத்திலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கான தெரிவை எதிர்பார்த்துள்ள சிலர், பிரதமர் பதவியைத் தருவதாக பலருக்கு வாக்குறுதி அளித்துள்ளனர். இது அவர்களுக்கு எதிர்காலத்தில் பாரிய விளைவையே ஏற்படுத்தும் எனவும் ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒவ்வொரு கோவிலுக்கும் பூந்தட்டுக்களை எடுத்துச் செல்வதன் மூலம் இந்த நாட்டின் ஜனாதிபதியாகிவிட முடியாது.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை நானே தெரிவு செய்வேன். மிகவும் கண்ணியமான ஒருவருக்கே இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

மக்களின் பணத்தைத் திருடிய கொலைகாரர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர்களாக வரமுடியாது.

எனது தந்தையும் தாயும் கொலைகாரர்கள் அல்லர். அவர்கள் எப்போதாவது பணத்தை திருடியது கிடையாது. அரசியலுக்காக எம்மிடமிருந்த அனைத்தையுமே நாம் தியாகம் செய்திருக்கிறோம். இந்தக் கட்சியின் தலைமைப் பதவிக்கு யாராவது வரவிரும்பினால் அவரிடம் மிகவும் சுத்தமான, தெளிவான சரித்திரம் இருக்க வேண்டும்"

இவ்வாறு அவர்களிடம் தெரிவித்த ஜனாதிபதி, ஸ்ரீ.ல.சு.கட்சி ஜே.வி.பி உடன் கூட்டுச் சேர்வதற்கு தான் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் யாராவது அவ்வாறான முயற்சியில் ஈடுபட்டால் அவர் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் நியமனம் தனக்குக் கிடைக்காது என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

## பிச்சைக்காரன் சாப்பாட்டில்....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பொதுவாக அமையாது.

மலையகத்தில் நன்கு படித்த இளைஞர், யுவதிகள் இருக்கின்றனர். ஆனால், அவர்களுக்கு இந்த ஆசிரியர் தொழிலை விட்டால் வேறு வாய்ப்பே இல்லை.

பல போராட்டங்களுக்கும் தியாகங்களுக்கும் பின் மலையக இளைஞர், யுவதிகளுக்கு கிடைத்த வாய்ப்பை தட்டிப் பறிக்க முயலக் கூடாது.

இது பிச்சைக்காரன் சாப்பாட்டில் பங்கு போட முயலும் கதைபோன்றது என்பதை எவரும் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை.

மறுகோணத்தில் பார்த்தால் நமக்கு கிடைக்காதது எவருக்குமே கிடைக்கக் கூடாது என்ற நோக்கத்துடனேயே இன்று நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். அதாவது தனக்கு இரண்டு கண்களும் போனாலும் பாதகம் இல்லை. எதிரிக்கு ஒரு கண்ணாவது போக வேண்டும் என்ற நோக்கமும் வெளிப்பட்டுள்ளது.

மலையக மக்களுக்கு தொழில் எழுப்பாதவர்கள் அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளில் மட்டும் பங்குபோடவருவது 'பிச்சை எடுக்குமாம் பெருமாள் அதை தட்டிப் பறிக்குமாம் அனுமார்' என்று கூறுவதைவிட வேறு எதுவுமே இல்லை.

# ஒரு கொலையும் மூன்று....

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''இனி லண்டன் மாப்பிள்ளை அவரெங்கே இந்த மச்சாளை நினைக்கப் போறார்'' என்று ரமேஷின் கைகளைப் பிடிச்சுக் கொண்டு காளி கோவிலுக்கு பின்னாலுள்ள பனங்கூடலுக்கை நிண்டு கொண்டு விம்மி விம்மி அழுதாள் ராணி, ரமேஸ் போறதுக்கு முதல்நாள்.

''அடியேய் மாடு என்ரை குணமெல்லாம் உனக்குத்தானேயடி தெரியும். சமயா சமயத்திலை எனக்குக் கோபம் வரும்; அதை எப்படி சமாளிக்கிறது எண்டு உனக்குத்தானே தெரியும். நீ என்ரை மச்சாள். ஐஞ்சாம் வகுப்பிலை இருந்து லவ் வேறை. உன்னை விட்டுட்டு நான் ஆரை எடி கட்டுறது.''

கிச்சுக்கிச்சு காட்டினான். தலைமுடியைப் பிடித்து இழுத்தான். கட்டிப்பிடிச்சான். முதன் முதலாக கன்னத்திலை முத்தமிட்டான்.

''அடபாவி லண்டனுக்குத்தான் உங்களுக்கு 'வீசா' கிடைச்சிருக்கே தவிர கொஞ்சுறதுக்கு 'வீசா' ஆர் தந்தது.'' ராணி வலு சந்தோஷத்தில் இருந்தாள்.

அந்தக் கடிதம் வருமென்று அவள் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தாள்.

*என் உயிரினும் இனியவளுக்கு!*

*எனக்கு 'பாஸ்போட்' கிடைத்துவிட்டது. முதலில் எனக்கு என்ன சந்தோஷம் தெரியுமா உன்னைப் பார்க்கலாம், உன்னோடு ஊரில் சுத்தலாம், உன்னையும் கூட்டிக்கொண்டு லண்டனுக்கு வரலாம். உண்மையிலேயே நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன்.*

*அதை என்னால் என்ன என்று விளங்கப்படுத்த முடியாமல்இருக்கிறது. புளகாங்கிதம் அல்லது வண்ணத்துப்பூச்சி மனதுக்குள் பறப்பது அல்லது... அல்லது முடியவில்லை.*

*எப்படியோ என்ரை பொண்டாட்டிக்கு சந்தோஷம் தானே.*

*தங்கச்சிக்கு ஒரு சம்பந்தம் பேச வேண்டும். அப்பாவையும் அம்மாவையும் மாமியையும் சந்தோஷமாக வைச்சிருக்க வேண்டும். அது சரி இன்னும் உன் உதடுகள் ஈரமாகவா இருக்கின்றன? (வெட்கப்பட்டாள். தொட்டுப் பார்த்தாள்)*

*இன்னும் ஒரே ஒரு மாதம். இன்று கடிதம் எழுதும் போது முதலாம் திகதி ஏப்ரல். மே முதலாம் திகதி 'ஸ்ரீலங்கன் எயார்'வில் ரிக்கட் போட்டுவிடுவேன். மாலை 3.45 இற்கு இறங்கினால் 4.45இற்கு கட்டுநாயக்கவில் வைத்து உன்னைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து... ஓ கஷ்டமா மாமி, அம்மா, அப்பா எல்லோரும் நிற்பார்களா....'' அட கஷ்டமே இங்கையெண்டால் எந்த இடத்திலாவ்து எவ்வளவு நேரமாவது எங்கையாவது கொஞ்சலாம் கொஞ்சலாம்.*

*எல்லா நாடுகளும் லண்டன் ஆகக் கடவது.*

***உன் அத்தானடி அத்தான்***
***ரமேஸ்.***

மனதுக்குள் என்ன உணர்வு! மணி கிலுக்குவது போலவும், பூ பூப்பது போலவும், மனதுக்குள்ளே தண்ணீரை விசிறுவது போலவும் அவள் சில்லிட்டுப் போனாள்.

அந்த முதலாம் திகதி சீக்கிரமாய் வந்துவிட வேண்டுமே... அது அத்தானின் முதலாம் திகதி.

ஹவுன்ஸ்லோவை சுற்றியுள்ள முஸ்லிம்களின் வீடுகளை பொலிஸார் முற்றுகையிட்டு சோதனை செய்தார்கள். ஒரு முஸ்லிமின்வீட்டில் ஒரு அந்தர் பொஸ்பரஸ் உரம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு அந்தர் பொஸ்பரஸ் உரம் பாவிக்க லண்டனில் என்ன தேவையிருக்கிறது. வீட்டுத் தோட்டத்தில் மூன்று கத்தரி, 2 வெண்டி, மூன்று தக்காளி மட்டும் இருக்கும். இவைகளுக்கு 8 மேசைக்கரண்டி உரம் போதுமே.

வேறு ஏதாவது குண்டு தயாரிக்க கொண்டு வந்திருப்பார்களோ என்று பொலிஸ் சந்தேகிக்கின்றதாக அக்கம் பக்கத்தில் பேசிக் கொண்டார்கள்.

எங்களின் வீடு தள்ளி மூன்றாவது வீட்டை சல்லடை போட்டு நாய்கள் தேடின. என்னடா என்றால், அந்த வீட்டுக்காரப் பெடியன் இஸ்மாயில் இருபத்தொரு வயது. பாலஸ்தீனத்துக்கு போய் ஹமாஸோடு சேர்ந்து தற்கொலைப் போராளி ஆகி பிறகு இஸ்ரேலில் ஒரு குண்டு வெடிப்பை நிகழ்த்தியிருக்கிறான். அதில் ஆறு பேர் மௌத்.

துருவித் துருவி பார்த்தால் அவன் பிரிட்டிஷ் பிரஜை. இந்த ஒரு சிக்கல் பிரிட்டிஷ் காரரை. பொலிஸை கொஞ்சம் அதிகமாக குழப்பித்தான் விட்டது.

இப்ப கலிகாலம். நேரம் காலம் கண் மூடி முளிக்க முதல் போய்விடுகிறது.

உடுப்பிட்டியில் இருந்து தடல்புடல் ஏற்பாடுகளோடு கந்தையா அண்ணன் புறப்பட்டுவிட்டார். ரமேஷ் தகப்பனிடம் சொல்லியிருந்தான் கொழும்புக்கு பிளைட்டில் வரச் சொல்லி. அது வலு லேசு. இடையில் இருக்கும் எல்லாச் சிரமங்களையும் தவிர்க்க முடியும். பயண நேரம் பஸ் என்றால் குத்துமதிப்பாக 16 மணித்தியாலம். ஆகாயத்தாலை என்றால் ஒரு மணித்தியாலம் மட்டும்தான்.

ராணி கொழும்புக்குப் போகவில்லை. 'டேற்' கிட்டமுட்ட. அந்த நேரத்தில் படும் வலி உயிர் போகிற வலி. அடுத்து பிளைட் என்றால் எல்லாருக்கும் 10,000 ரூபா வீதம் ஒரு தொகைக் காசு. அத்தான்தான் 2ம் திகதி உடுப்பிட்டிக்கு வந்து விடுவார்தானே. பிறகு அவர் என்ரைதானே. நினைப்பே சுகமாய் இருந்தது அவளுக்கு.

கந்தையா அண்ணன் புளகாங்கிதமடைந்து போனார். ரமேஸைப் பெத்த நேரம் ஒரு புளகாங்கிதம். இது அவனை கட்டுநாயக்கா எயார் போட்டில் லண்டனில்இருந்து வலு ஸ்ரைலாக வந்து இறங்கியதை கண்ட போது. வெள்ளவத்தையில் ஒரு லொட்ஜில் தங்கி இருந்தனர் முதலாம் திகதி.

ரமேஸுக்கு கொழும்பைப் பார்க்க சந்தோஷமாக இருந்தது. எப்படியோ தாய் மண்ணை மிதிக்கும் போது பல வருடங்களுக்கு பின்பு மிகவும் மகிழ்ந்து போனான். அன்று மாலை ஐயாவை ரூமில் இருக்க வைத்துவிட்டு வெளியில் போய் லண்டனில் ரூமில் இருந்த நண்பனின் வீட்டுக்கு அவன் கொடுத்த சாமானைக் கொண்டுபோய் கொடுக்கப் போனான். போய்விட்டு ஒரு குறுக்கு ஒழுங்கையால் வரும் பொழுது திடீரென ஆட்டோவில் வந்த இருவர் ரமேஸை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

அந்த இடத்தில் அவன் சுருண்டு விழுந்தான். உயிர் போய்விட்டது. ஏன் சுட்டார்கள்? எதற்கு சுட்டார்கள்? யாருக்கும் தெரியாது.

பிரேதத்தின் பொக்கற்றில் இருந்த பாஸ்போட்டில் இருந்து பொலிஸார் அடையாளம் கண்டனர். கந்தையா ரமேஸ் பிறப்பிடம் உடுப்பிட்டி.

செய்தி கேள்விப்பட்டவுடன் லொட்ஜில் இருந்த கந்தையா அண்ணன் மயங்கி விழுந்தவர் விழுந்தவர்தான் மூளை நரம்பு வெடித்து விட்டதாக மரண விசாரணை அதிகாரி எழுதிக் கொண்டிருந்தார்.

'சூரியன்' செய்தியை திருப்பித் திருப்பி சொல்லிக் கொண்டிருந்தது. இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக...

செய்தியைக் கேட்டதில் இருந்து 'ராணி' பைத்தியக்காரி போலாகிவிட்டாள். ஊரே அழுதது. ஏன் சுட்டவை? ஏன் சுட்டவை? ஆர் சுட்டவை? ஒரு கேள்விக்கும் விடை கிடையாது.

வீட்டுக்கு வந்த அத்தானின் பிரேதத்தை ஆசைதீர பார்த்தாள் ராணி. அவள் அழவில்லை.

மனம், கண் எல்லாம் இறுகி விட்டிருந்தது. அத்தானுக்கு பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள். அத்தான் மிகவும் அழகானவனாக இருந்தான் அவளுக்கு. மனதுக்குள்ளே அம்மி மிதித்தாள், அருந்ததி பார்த்தாள், தீயை வலம் வந்தாள், தாலி கட்டிக் கொண்டாள். தாலி அறுத்தாள், பூவையும் பொட்டையும் அழித்தாள், வெள்ளாடை அணிந்து கொண்டாள்.

அன்று ஒரு வீட்டில் இரண்டு செத்தவீடு. ஊரே அழுதது. அவள் மட்டும் அழவில்லை.

அடுத்தநாள் காலையில் 'திவயின' செய்தி வெளியிட்டிருந்தது 'லண்டனில் இருந்து வந்த புலி உறுப்பினர் ஒருவர் கருணா அணி என்று சந்தேகிக்கப்படுபவர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.'

பிரேதங்கள் அடக்கத்திற்காக கொண்டு போயாச்சு — இன்னும் ராணி அழவில்லை.

அடுத்த்நாள் காலை ''எல்லாரும் ஓடி வாங்கோ... இஞ்சை பாருங்கோ இந்த அநியாயத்தை...'' என நாகம்மாக்கா நெஞ்சில் அடித்துக் கொண்டு அலறினா. ஓடிப்போய் எல்லோரும் கிணத்தை எட்டிப்பார்த்தார்கள்.

செத்துப்போய் மிதந்து கொண்டிருந்தது ராணியின் பிரேதம் தண்ணீருக்குள்.

(முற்றும்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 171

சொற்சிலம்பம் 171 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஆகஸ்ட் 07 ஆம் திகதி ஆகும். விடைகள் ஆகஸ்ட் 14ஆம் ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகஸ்ட் 21ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.169க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 171

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | ■ | 14 | 15 |
| 16 | | 17 | | ■ | 18 | | |
| | ■ | 19 | | 20 | | ■ | |
| 21 | | | ■ | 22 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.169

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 ஜ | ர் | 3 வா | 4 த | ம் | ■ | 5 பா |
| 6 கா | ர் | ■ | 7 ச | டை | ■ | 8 ப | சி |
| 9 து | வ | 10 ர | ம் | ■ | 11 க | ல | ■ |
| ■ | 12 ரி | சி | ■ | 13 கு | ட | ம் | 14 பி |
| 15 இ | சை | ■ | 16 ம | ட | ம் | ■ | ர |
| ரு | ■ | 17 ச | க | ம் | ■ | 18 க | தி |
| 19 ப | க | 20 வ | ன் | ■ | 21 அ | ல் | வா |
| 22 து | ண் | டு | ■ | 23 த | லை | வி | தி |

## சொற்சிலம்பம் போட்டி இல.171

### இடமிருந்து வலம்

1. ஒன்றைச் செய்வதற்கு சம்மதம் தெரிவித்தல்.
4. தென்னம் மட்டையிலிருந்து பிரித்து எடுப்பது.
6. சீமான்/பெரியோன்/மரியாதைக்கு உரியவன்.
7. கடல்/சமுத்திரம்.
9. ஒரு கீரை வகை
11. நடு இடம் / மத்திய இடம்.
12. சமையல் அறைக் கருவி. 'மிக்ஸர்' வந்து விட்டதால் இதன் தேவை குறைந்து விட்டது.
13. தாவர வர்க்கத்தைச் சேர்ந்தது.
14. ஈரலிப்பான இடத்தில் வளரும் என்றும் கூறலாம். பிடிக்கும் என்றும் கூறலாம்.
16. அன்புக்குரியவன். அன்பு வைத்திருப்பவன்.
18. கடுமையானது என்பதைக் குறிக்கும் சொல்.
19. பழுத்தல்.
21. சூறாவளி/பெருங்காற்றோடு சேர்ந்த மழை.
22. காப்பியம்.

### மேலிருந்து கீழ்

1. பயமிலாத் தன்மை.
2. ஓர் இராசி.
3. நாள்.
4. இன்பம் அல்ல.
5. வதந்தி
8. கீழான செயல் செய்பவன் / கெட்டவன்.
10. உணவுக் குழாயில் நடக்கும் தொழில்பாடு.
12. பன்னிரண்டு அங்குலம்.
13. சிரசு/தலை.
15. சிங்கம் / ஓர் இராசி.
16. எய்தவன் இருக்க இதை நோவதா?
17. இரவு அல்ல.
18. அறிவு தருவது.
20. பொருத்தமில்லாத.

## சொற்சிலம்பம் போட்டி இல. 168

1. திருமதி.ர.கிருஷ்ணராணி.
   156/24, டொக்யாட் றோட்,
   திருகோணமலை
2. எஸ்.மோகனதாஸ்,
   கடல் மீன் ரயர்,
   லேகீஸ்,
   முறிகண்டி.
3. எஸ்.நீரஜா,
   14/37, பாரதி ஒழுங்கை,
   மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்

1. சி.சிற்றம்பலம்,
   04, அப்பர் டொன்சைட்,
   நாவலப்பிட்டி.
2. கு.கணேசன்,
   வாட் 27, யா/போதனா வைத்தியசாலை
   யாழ்ப்பாணம்.
3. யூ.செல்லத்தம்பி,
   20. கோவில் வீதி,
   கல்முனை.
4. எம்.ஐ.முகம்மது அஷ்ரப்,
   276A, மார்க்கட் றோட்,
   சாய்ந்தமருது — 07.
5. நா.சிவலிங்கம்,
   எம்.ஓ.எச். விடுதி ஒழுங்கை,
   கல்முனை.
6. ஷாஜானி கலீல்,
   137 ஜேர்மனி எஸ்டேட்,
   ஹெறம்பாவ.
7. திருமதி ஜெ.யோகலட்சுமி,
   வக்கர் மாவடி ஒழுங்கை,
   கல்லடி, மட்டக்களப்பு.
8. அ.கேதீஸ்வரன்,
   C/o செல்வநாயகம்,
   பெரியமடு, புளியங்குளம், வவுனியா.
9. வ.பிரதீபா,
   வீரபத்திரர் கோயிலடி,
   கரணவாய் வடக்கு, கரவெட்டி.
10. திருமதி. வரச்செல்வி தர்மபாலன்,
    23/17, நீட்டாறோட், கடற்கரைவீதி,
    நீர்கொழும்பு.

# பல்சுவைக் கதம்பம்

ஆக்கம்: ஜூலியட்

# மங்கையர் மார்புக்கச்சை (Brassiere) எப்படிப் பிறந்தது?



உலகில் உள்ள பெண்கள் அனைவரும் மார்புக்கச்சை (ப்ரா) அணிவது வழக்கம். இன்னமும் நாகரிகமடையாத இனங்களைச் சேர்ந்த பெண்களைத்தவிர.

ஆதிகாலத்தில் பெண்கள் தமது மார்பகங்களைச் சுற்றி தடித்த துணியைக் கட்டிக் கொண்டார்கள். இப்போது இந்த நவநாகரிக உலகில் கலையழகுடன் கூடிய எத்தனை விதமான மார்புக்கச்சைகள் (ப்ரா) சந்தைக்கு வந்திருக்கின்றன. பெண்கள் தமது மார்பகங்களை கவர்ச்சி மிக்க அங்கமாகக் காட்டுவதற்கேற்ற வகையில் இவை எல்லாம் இப்போது வடிவமைக்கப்படுகின்றன. நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட இந்தப் ப்ராக்களை பெண்கள் அணியும்போது அவை கொடுக்கும் கவர்ச்சி இருக்கிறதே, காந்தம் போல் அல்லவா அவை ஆண்களைச் சுண்டி இழுக்கின்றன.

இந்த ப்ராவை முதலில் வடிவமைத்தது யார்? அலங்கார நிபுணரான ஒடோ டிட்ஸ் லிங்கர் என்ற இளைஞர், ஸ்வொன் ஹில்டா ஒலாஸ்சித் என்ற பிரபல பாடகி ஒருவரைக் காதலித்தார்.

இந்தப் பாடகி தன் மார்பகங்களை அலங்கரிக்க ஆர்வம் கொண்டு தனது ஆசையை தனது காதலன் ஒடோடிட்ஸ் லிங்கரிடம் கூறிய போது அவர் தனது காதலியின் ஆசைக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணினார். அதன் விளைவுதான் அவர் உருவாக்கிய முதல் பிரஸ்ஸியர்.

தற்போது மோகத்தைத் தூண்டும் வகையில் (Sexy Brassieres) தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. இத்தகைய பிராக்களை அணியும் பெண்கள் தமது மார்பகங்களை பாதுகாத்துக் கொள்வதோடு தம்மைக் காண்பவர்களின் கவனத்தை தம்பக்கம் ஈர்த்துக் கொள்ளவும் முடிகிறது.

## தலைவலியும் திருகுவலியும்



அம்மா ஆவது எவ்வளவு பெரிய கஷ்டம் என்பது ஆண்களுக்கு இனிமேல் புரிந்து விடும். கர்ப்பிணி மனைவியின் மீது கணவனுக்கு மரியாதையும் பரிவும் ஏற்படுத்துவதற்காக, ஒரு கனமான ஜாக்கெட்டைத் தயாரித்திருக்கிறார்கள். இதில் செயற்கை மார்பகம் மற்றும் பெரிய வயிறு போன்ற அமைப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. இதை அணிந்து கொள்ளும் ஆண்கள், தங்கள் மனைவியர் அனுபவிக்கும் சிரமங்களை அனுபவ ரீதியாகப் புரிந்து கொள்ள முடியுமாம். நல்லவேளை, பொம்மைக் குழந்தை ஒன்றை பிறக்க வைக்காமல் விட்டார்களே!

## பொலிஸாரின் கையில் ஜாலா மாகாணம்



'பாங்கொக்' நகருக்கு தெற்காக 674 தொலைவில் உள்ள 'ஜாலா' முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மாகாணமாகும். இது குழப்பங்களும் பிரச்சினைகளும் நிறைந்த ஒரு மாகாணமாக இருந்துவருகிறது. இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக அண்மையில் தாய்லாந்து அரசாங்கம் புதிய அவசரகால பாதுகாப்புச் சட்டமொன்றை அமுலாக்கத் தொடங்கியுள்ளது. இதை அமுல்நடத்தும் பொறுப்பு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை அமுல் நடத்துவதற்கான பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள பொலிஸாரில் மூவர் தமது பயிற்சியின் நடுவே ஓய்வு எடுத்துக் கொண்டிருப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.

## மருத்துவ அழகி



இளம் பெண்களுக்கும், திருமணமான பெண்களுக்கும் அழகிப் போட்டி நடக்கும் செக் நாட்டில் வித்தியாசமான அழகிப் போட்டி நடந்தது.

அதில் பெண் மருத்துவர்கள் மட்டும் கலந்து கொள்ள வேண்டும் என்பது விதி. சுமார் 200 பேர் கலந்து கொண்டனர். அனைவரும் மருத்துவம் படித்த பெண்கள்.

இதில் இர்ரீஸ் என்ற இந்த 25 வயது பெண் அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டாள். கவர்ச்சி உடையில் மேடையில் தோன்றிய இந்த மருத்துவ அழகியைக் கண்டு சொக்காதவர்களே இல்லை.

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் கைலஞ்சம்

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களை வளைத்துப் பிடிப்பதற்காக காசினோ சூதாட்டக் காரர்களிடமிருந்து சில தரகர்கள் 3 கோடியே 60 லட்சம் டொலரைக் கறந்திருக்கிறார்கள் என்ற செய்தி வாஷிங்டனில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அந்தச் சூதாட்டக் காரர்களிடம் இருந்து கறக்கப்பட்ட பணத்தில் ஒருபகுதியை தமது நண்பர்களுடன் பகிர்ந்து கொண்ட குறிப்பிட்ட பேரசடிக்காரர்கள், காங்கிரஸ் அங்கத்தவர்கள் சிலருக்கு சீதனமும் கொடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

அமெரிக்க செனட்டர்கள் பலர் இந்தச் செய்தி தமக்கு அதிர்ச்சி அளித்துள்ளதாகத் தெரிவித்தனர். ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பைரன் டொர்கான் இந்தச் செய்தியைக் கேட்டுத் தாம் மிகவும் சோர்ந்தும் அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## திருமணத்துக்குத் தடை



படத்தில் இருப்பவர் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த மாடல் அழகி நத்தாலி. வயது 32. விளையாட்டு போட்டிகளை ரசிப்பதில் அதிக அக்கறை கொண்டவர். விளையாட்டுப் போட்டியைப் பார்க்கப் போன இடத்தில் மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த கால்பந்து வீரரான கவார்ட் என்பவரைக் கண்டு மயங்கினார். இருவரும் தீவிரமாகக் காதலிக்கத் தொடங்கினார்கள். ஆனால், பிரெஞ்சு குடியுரிமையுள்ள நத்தாலியை திருமணம் முடிக்க காதலன் கவார்டுக்கு மெக்சிகோ நாட்டு அரசு தடை விதித்து விட்டது. இதனால், இந்தக் காதல் அழகி கலக்கத்தில் உள்ளார்.

# கவிதைப் புனல்

### வாக்காளப் பெருமக்களுக்கு

பம்மாத்துக் காட்டும்
பச்சோந்தி அரசியல்வாதிகளை
நம்பி மோசம் போகாமல்
வாக்காளப் பெருமக்கள்
சமமாக சிந்தித்து சுதந்திரமாக
வாக்களிக்கும் தமது
மகத்தான உரிமையை மதித்து
விலைபோகாமல்
விபரீதங்களை ஏற்படுத்தும்
இனவாதக் கும்பல்களை
இனங்கண்டொதுக்கி
சமாதானத்தை வலியுறுத்தும்
சமதர்ம நீதியை நிலைநாட்டும்
கனவான்களை கண்ணியமான
அரசியலை நடத்தும்
கற்ற விற்பன்னர்களை
நாட்டை கட்டி எழுப்ப
நாகரிகமான அரசியலை
திட்டமிட்டு நடத்தும் தலைமையை
தெரிவு செய்ய முன்வந்தால்
முட்டி மோதும் போராட்ட சூழல்
விட்டுப்போகும்
விரைவில் நமக்கெல்லாம்
விடிவு கிடைக்கும்

**கவிக்குயிலன்**
**சேனையூர் — 6**

### காதலின் தன்மை

கண்கள் கவிபாடும்
கால்கள் கோலம் போடும்
இதழோரம் தேன் சொட்டும்
இதயமோ இமயத்தில் இருக்கும்
— இத்தான் காதல்

நடக்கும் போதே கனவு
கனவு மட்டுமே வாழ்வாகும்
இமைகள் மூடித் தூங்கும் போதும்
இதழோரம் சிறு புன்னகை
— இதுதான் காதல்

இமைகள் என்னும் காட்டிற்குள்
கண்கள் என்னும் வீதியால்
இதயம் என்னும் பார ஊர்தியில்
அன்பைக் கடத்திச் செல்லல்
— இதுதான் காதல்

கண்களில் கண்ணீர்
[illegible]வுக்குள் முள்ளு
[illegible]யத்தில் இமயம்
[illegible]ழப்புக்களே சொந்தமாகும்
— இதுதான் காதல்

**யே.யோண் மில்ரன்**
**வட்டக்கண்டல்**

### பயணிக்கிறேன்

அன்பால் கட்டுண்டு
அழியாது இருந்த
எம் குடும்பக் - கூடு
அற்ப நொடியில்
அந்தப் புயலால்
அலங்கோலமாகியது

இப்போ கூடும் கலைந்து
குருவிகளும் பிரிந்தன

எட்ட முடியாத தூரத்திற்கு
குடும்பமே சென்று விட

நான் மட்டும் ஒரு விடிவிற்கான
போரில் பயணிக்கிறேன்...
எம் தமிழ் சந்ததி வாழ

**அ.கவியழகன் (அகிலன்)**
**கரம்பைக்குளம்**

### எழுந்திருங்கள்

பசுத்தோல் போர்த்திய
சிங்கங்கள்
சாந்தம் கொண்ட நடிப்பு
யானைகள்
நிஜத்தில் மதம் கொண்டவர்கள்
வேலியே பயிரை மேய போதிக்கும்
போதகர்கள்
காதல் என மனம் மயக்கும்
காமுகர்கள்
விளக்கு என வந்து விழும்
விட்டில்கள்
பணம் என்றால் பிணம் தின்னும்
கழுகுகள்
இவர்களின் முகமூடியை
கிழித்தெறிய வாருங்கள்
பேனை கொண்டு
வீறு நடை போடுங்கள்
எழுந்திருங்கள் இளைஞர்களே!
பேனை கொண்டு
எழுதுங்கள்

**ச.திவ்ய துர்க்கா**
**மாத்தளை**

### நீ என் காதலி ஆனால்

நீ குளிக்க பன்னீர் கொண்டு தருவேன்
நீ பூச சந்தனம் வாங்கித் தருவேன்
நீ தலை துவட்ட வெண்முகில் கொண்டு
வருவேன்
நீ முகம் பார்க்க அந்த நிலா பிடித்து
வருவேன்
நீ பொட்டு வைக்க விண்மீனை உரித்து
தருவேன்
நீ உடுத்த வானவில்லை உடையாக
தருவேன்
நீ சூட உலக மலர்கள் அனைத்தையும்
பறித்து தருவேன்
நீ பாதங்களுக்கு போட என் உயிரை
செருப்பாக தருவேன்

**பி.சசி — நானாட்டான்.**

### எங்கள் தலைவன்

எங்கள் தமிழின
விடுதலையும்
விடியலும்
விழுமியமும் - அவன்
விழியால் தெரிகிறது

எங்கள் போராட்ட
வெற்றியும்
முத்தியும்
முடிவும் - அவன்
முகத்தில் தெரிகிறது

எங்கள் தியாகத்தின்
சித்தியும்
சிந்தனையும்
சிறப்பும் - அவன்
செயலில் தெரிகிறது

எங்கள் விடுதலையின்
உயர்வும்
உண்மையும்
உறுதியும் - அவன்
நடையில் தெரிகிறது.

எங்கள் மண்ணின்
வீரமும் அதன்
தாகமும் நம்
யாகமும் எங்கள்
தலைவன் வார்த்தையில்
தெரிகிறது.

**பா.தீபச்செல்வன்**
**யாழ். பல்கலைக்கழகம்**

### இதயக் கனல்

நெஞ்சினில்
நெருப்புடன்
வேதனை
முள்ளணிந்து
வாழ்வே வெறுத்து
தவிப்புடன்
தடுமாறுகிறோம்
கண்ணயர்ந்து
துயரம் மறந்துவிட
தூக்கம் வருகிறது
ஏக்கமோ அதை
தடுக்கிறது.
விழிகளில்
வழிந்தோடும்
கண்ணீர் துளிகளில்
கடந்து வந்த பாதையின்
கசப்பான
கதைகளுண்டு.
அந்நியனின்
ஆதிக்கத்தில்
அடிமையாய்
அவலங்களுடன்
அவதியுறும்
சீரழிந்த வாழ்வு
ஆத்மாவைப் பிழிகிறது.
விலங்கிடப்பட்டு
சிதைவுற்று
சிதறுண்டு
வதைகளுடன்
இன்னும் எத்தனை
காலம் தான்
வாடப் போகிறோமோ?

**ஜோ.கிறிஸ்டி**
**களுத்துறைச் சிறையிலிருந்து**

### வருகிறான் தலைவன்

செந்தமிழ் பேசும் தமிழீழமதில்
வல்வெட்டித்துறை எனும்
சிற்றூரிலே
வேலுப்பிள்ளை
தம்பதியினருக்கு மகனாக
தமிழ் மண்ணுக்கு வீர
மைந்தனாக
வந்துதித்தான் எம் தலைவன்.
தேசத்துரோகிகளையும்
இனவாத வெறியர்களையும்
ஒழித்துக்கட்ட வந்தவன் -
இன்று
வல்லரசு நாடுகளையே கதி
கலங்க வைக்கிறான்
தமிழனுக்கென்றொரு தனிநாடு
என்றுதான் கிடைக்குமோ
அன்றுதான் தமிழன் முழுச்
சுதந்திரமாக நடமாட முடியும்
என்பதை மனதில் நிறுத்தி
போராடி வருகிறான் எம்
தலைவன்
அவன் பெயர் சிறக்க அவன்
புகழ் எங்கும் பரவ
போராடுவோம்; தனிநாடு
வென்றெடுப்போம்.

**சில்லையூர் யோன்**

### காகித ஓடம்

கறைபடிந்த கனவுகளையும்
கண்ணீர் சிந்தும்
நினைவுகளையும்
சுமந்தபடி என் காகித ஓடம்
கரை தேடிச் செல்கிறது

தூக்கிலிடப்பட்ட என்
எண்ணங்களுக்கு
அந்தி என்ன? அதிகாலை
என்ன?

உறவுகளின் பின்னணியில்
ஒரு பிரிவுகளின் தேசம்
உருவாகும் மென்றால்
அந்த உறவுகளுக்காய்
காத்திருந்து
கால் நகர்த்துவது
எந்த வகையில் நியாயமாகும்?

மேற்கில் மட்டும் தானே
அஸ்தமனம்
எனக்கு எட்டுத் திசையுமே
அஸ்தமனமாய் ஆனதேன்?

உண்மைகளெல்லாம்
ஊமைகளாய் ஆனபோது
கனவாய் போகவேண்டிய
சில நினைவுகள் என்
நெஞ்சரித்துப் போவதேன்?

சாமரங்களை நினைக்கும் போது
சாட்டைகளை தருகிறார்களே
உள் மனதின்
ஊமைக்காயங்களை
உலகம் புரியும் நாள்
வருமா?

**கு.மகாலக்ஷ்மி —**
**மிருசுவில்.**

### ஏக்கத்தின் வினா

சின்னஞ் சிறுமனசுக்குள்
சித்திரக் கனவுகள்
நிறந்தீட்ட நினைக்கையில்
நீர் மூலமானதோ?

வெளியிலே சிரிப்பும்
உள்ளுக்குள் வேதனையும்
ஏழை மனசுக்கு
என்றுமே நிரந்தரமோ?

நட்பின் இலக்கணமும்
நண்பனின் பாசமும்
பண்பற்ற மாந்தர்க்கு
புரியாமல் போனதேன்?

பாசத்தின் பிணைப்புகள்
பாசாங்காய் போனது
சந்தோஷ சமுத்திரம்
சந்தேகத்தால் வற்றியதேன்?

**பியூலா,**
**மாத்தளை.**

### எதிர்பார்ப்பு

உன் கடிதம் கண்டு
கர்வம் கொள்கிறேன்
படிப்பதற்காக அல்ல - நீ
மேலுறையில் பூசி ஒட்டிய
எச்சில் படிவு
என்மீது படும் என்பதற்காக

**கு.மதன் — கனுக்கேணி**

### தேடல்

என் மனதிற்கும் கண்ணுக்கும்
இத்தனை வேற்றுமையா
மனமோ அவனைத்திட்ட
கண்ணோ அவனைத்
தேடுகின்றது

**மிதா—பெரியகுளம்**

### காதல்

ஓவியக் காதலில்
கேலிச் சித்திரமானேன்
அவளின் உணர்வுகள்
புரியாமல்

**த.சி.ரஞ்சன்**
**நாவலப்பிட்டி**

---

[illegible]டத்தில் காண்பது எந்த விலங்கின் [illegible]மிகவும் வித்தியாசமாக உள்ளதே... [illegible]ங்கள், பார்ப்போம். இந்தக் 'குவிஸ்' [illegible]க்கு எந்த நிபுணரிடமும் பதில் [illegible]காது என்று அடித்துச் சொல்லலாம். [illegible]ன்றால் படத்தில் இருப்பது எந்த [illegible]ன் காலும் இல்லை. பிறகு? அது,



[illegible]டந்த ஏதென்ஸ் ஒலிம்பிக் போட் [illegible]ல் 'கிளிக்' செய்யப்பட்ட வித்தியாச [illegible]சி. பெண்களுக்கான 100 மீட்டர் [illegible]யத்திற்குத் தயார் நிலையில் [illegible]மெரிக்க வீராங்கனை கெயில் [illegible] கைகள் தான் படத்தில். தனது [illegible]தில் இதுவரை அவர் கைவிரல் [illegible]வெட்டியதே இல்லைப் போலும். [illegible] வளர்ப்பதைக் கெயில் தனது [illegible]ஷனாகப் பின்பற்றி வருகிறார். [illegible]ிரேலியாவில் சிட்னி நகரில் [illegible]ா நடந்தது. அது விநோதத் [illegible]ன்ன திருவிழா தெரியுமா? [illegible]கயாளர் திருவிழா.

## சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

ஆயிரக்கணக்கான ஆண், பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் அதில் கலந்து கொண்டனர். அவர்கள், கவர்ச்சி உடையில் நடனமாடியபடி வீதிகளில் வந்தனர்.



இதை அரசு அனுமதித்தது. பல வெளி நாடுகளில் ஓரினச்சேர்க்கை திருமணத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

*ஒரு மனிதன் எந்த அளவுக்கு வெற்றியாளன் என்பதை இரும்புப் பெட்டியில் இருக்கும் சொத்துக்களை வைத்துக் கணக்கிடக் கூடாது. அவன் மனதில் நிலவும் அமைதியை வைத்தே முடிவுக்கு வரமுடியும்.

*முந்திரிப்பூ பூத்திருக்கு
முனையில் காய்
காய்த்திருக்கு
முகப்பு எல்லாம் கறுத்திருக்கு
முந்தானை போட்டு மறைத்திருக்கு
ஓடு ரொம்ப கனத்திருக்கு
உள்ளே பருப்பு சிரித்திருக்கு
உண்ண மனம் துடித்திருக்கு
உண்டுவிட்டால் இனித்திருக்கு

* பிரிட்டனின் 19 ஆவது பிரதம மந்திரி ஜோர்ஜ் கானிங், பதவி பெற்று நூறாவது நாளான 8.8.1927 அன்று நிமோனியா காய்ச்சலினால் இறந்து போனார்.

* டென்னிஸ் போட்டியின் டேவிஸ் கோப்பை அறிமுகம் செய்யப்பட்ட நாள் 8.8.1900, முதன் முதல் இக்கோப்பையை வென்றது அமெரிக்கக் குழு.



*ஆணாக இருப்பவர்கள், பெண்ணாக மாறுகிறார்கள். இது, இப்போது மேலை நாடுகளில் வழக்கமான கதையாகிவிட்டது.

சீனாவிலும் இளைஞர்கள் 2பேர் அறுவை செய்து பெண்ணாக மாறி இருக்கிறார்கள். அவர்கள் தங்களது பெயரையும் மாற்றிவிட்டார்கள்.

ஆணாக இருந்து பெண்ணாக மாறிய இவர்கள் இசைக்குழு ஒன்றை தொடங்கி நடத்தப் போகிறார்களாம்!

"என்ன ஆச்சு?"

"காட்டிலே நல்லாத்தான் இருந்தது. இங்க வந்து ஊர்த் தண்ணி ஒத்துக் கொள்வே இல்லை. காய்ச்சல்."



டுபாயில் நடந்த ஒரு பாஷன் ஷோவில்,
ஒரு டிசைனரின் கைவண்ணம் இது.
பெண்களை மேகத்துக்கு ஒப்பிடும் கவிஞர்களின்
பொய்கூட சில சமயத்தில் உண்மையாகி விடுகின்றது.



## நெஞ்சுவலியிலிருந்து நிவாரணம் பெறுங்கள்

ரியூமரொயிட் ஆர்த்திரைட்டிஸ்
மூட்டுக்களில் நோவா...? எலும்புவலி மற்றும் ஒஸ்ரியோபொரோசிஸ்

தீராத முதுகு வலியா...? விரைவான நிவாரணம்

சொரைசிஸ் தோல் வியாதி
எமது கிருமி எதிர்ப்பு மருந்து துரித நிவாரணம் அளிக்கும்

ஒற்றை தலைவலியா...? நீண்ட காலப்பாதிப்பினின்றும் நிவாரணம் அளிக்கும்

பெட்சோர்- Q.R எண்ணெய் பெட்சோர், நீரிழிவுப்புண் மற்றும் எரிகாய புண்களுக்கு

புரஸ்டேட் சுரப்பிகளின் சேர்வுப் பிரச்சினைகளா? இதற்கென சத்திர சிகிச்சையைத் தவிர்க்கும் வகையில் சிகிச்சை

குழந்தைகளின் புத்தி மந்தம் மற்றும் அல்சைமோர்ஸ் நினைவாற்றல் பாதிப்பு நோய்

கல்லீரல் பிரச்சினைகளா? சிரோசிஸ், ஜோண்டிஸ் அசைட்டிஸ் மற்றும் கல்லீரல் வீக்கம்

நெஞ்சுவலியினால் அவதியுறும் வயோதிபர்கள் அவர்களது எதிர்காலத்தில் இவ்வாறான வருந்தத்தக்க குறைபாடுகளுக்காக கவலைப்பட வேண்டிய அனுபவம் ஏற்படாது. ஏனெனில் எங்கள் ஆயுர்வேத மருந்துகள் உங்கள் நாளங்களில் காணப்படும். அடைப்புகளை கரைத்து முறையான குருதிச் சுற்றோட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் சத்திரசிகிச்சை அற்ற வாழ்க்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும். 100 நாட்களுக்கான சிகிச்சைக்கு ரூபா 18,240/= மட்டுமே செலவாகும்.

தொலைபேசி: 0094-115517897, 5551879, 5558442
தொலைநகல்: 0094-11-5517756
மின்னஞ்சல்: fppvl@lankabellnet.com
இணையத்தளம்: www.fppvtl.org

**FAIR PHARMA (PVT) LTD**
*(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)*
L5/ET/1C, WORLD TRADE CENTRE, COLOMBO - 01, SRI LANKA.
ISO 9001 : 2000 QMS Certified Company

திறந்திருக்கும் நேரம்: வேலை நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை. சனிக்கிழமை காலை 9.00 முதல் பி.ப. 2.00 மணிவரை



## HOTEL WESTEERN (PVT) LTD




Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

**No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04**
T.P. : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www. hotelwesteern.com





மீண்டும் புதுப் பொலிவுடன்...... உங்களின் இக்காலத் தெரிவுக்கு...



# குமரகுரு

## புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.

**குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்**
யாழ் சாலை, கிளிநொச்சி

**KUMARAKURU TEXTILE & FANCY HOUSE**
Yarl Road, Kilinochc

Tel: 021 228 5971







யாழ். நகரில் குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத் தரங்கள்!
அழகிய புடவைத் திணுசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்

நாளைய நாகரிகத்தை நாம்
இன்றே அறிமுகப்படுத்துகின்றோம்
ஒரு முறை விஜயம் செய்துபாருங்கள் உண்மை புரியும்.

# கிறீன் பலஸ் எம்போறியம்

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.





# EXPOAIR எக்ஸ்போ ஏயார்

*your friend in the skies...* வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 /6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 011 2372952 /3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com




இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஜூலை 31 ஆம் திகதி வெளி